விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
R A M C O
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 சித்திரை 08 ஞாயிற்றுக்கிழமை (21.04.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 123

# குடும்ப ஆட்சி அதிகாரத்தால்

# இலங்கை நிலைவரம் மோசம்



## அமெரிக்கா அறிவிப்பு

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் குடும்பத்தினரின் ஆதிக்கம் உள்ள அரசாங்கத்தால் ஆட்சி செய்யப்படும் இலங்கையில், பலவிதமான மனித உரிமை மீறல்களும் இடம்பெறுவதாக அமெரிக்கா 2012ஆம் ஆண்டுக்கான மனித உரிமைகள் நிலைவரம் குறித்த அறிக்கையில் கூறியுள்ளது.

இலங்கை ஜனாதிபதியின் குடும்பத்தினரின் ஆதிக்கத்தில் இலங்கை அரசாங்கம் இருப்பதாக தனது முக்கிய அம்சங்களின் தொகுப்பின் ஆரம்பத்திலேயே கூறியுள்ள அந்த அறிக்கை; ஜனாதிபதி, நாடாளுமன்றம் மற்றும் உள்ளூர் தேர்தல்கள் அங்கு பிரச்சினைகள் நிறைந்தவையாக இருந்ததாக சுயாதீன பார்வையாளர்கள் குறிப்பிடுவதாக கூறியுள்ளது. (02ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழம் கோரி மே 19இல் பேரணி

(சென்னை)

தனி ஈழம் கோரிக்கையை முன்வைத்து, வரும் மே மாதம் 19ஆம் திகதி தமிழகம் முழுவதும் பிரமாண்டமான பேரணி மற்றும் பொதுக் கூட்டங்களை நடத்த தமிழீழத்திற்கான மாணவர் போராட்டக் குழுவினர் முடிவு செய்துள்ளனர்.

இது தொடர்பாக நேற்றுக் காலை பத்திரிகையாளர் சந்திப்பு நடந்தது. இது தொடர்பில் மாணவர்கள் கூறுகையில்,

1967இல் தென்னாபிரிக்கா இனவெறி அரசுக்கு எதிராக உலகமே ஒன்று திரண்டு எதிர்த்தது. அதுபோல இலங்கைக்கு எதிராக இருந்து தனித் தமிழ்ஈழம் பெற்றுத் தர வேண்டும்.

அதற்காக (24ஆம் பக்கம் பார்க்க)

## பிளவுபட்டது பொது பல சேனா?

சிங்கள பௌத்த அடிப்படைவாத அமைப்புக்களில் ஒன்றான பொது பல சேனா அமைப்பில் பிளவு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பொது பல சேனா அமைப்பு, ஹலால் பிரச்சினை தொடர்பில் நாடு தழுவிய ரீதியில் பாரியளவு போராட்டங்களை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த அமைப்பின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு இடையில் (24ஆம் பக்கம் பார்க்க)

## உண்மையைக் கண்டறிய மற்றொரு ஆணைக்குழு

### அரசு புதிய திட்டம்

இலங்கையில் இறுதி மோதல்கள் நடைபெற்ற காலகட்டத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து ஆராய்வதற்காக உண்மைகளைக் கண்டறியும் மற்றொரு விசாரணை ஆணைக்குழுவை நியமிக்க அரசு தீர்மானித்துள்ளதாக நம்பகரமாக அறிய முடிகின்றது.

இது குறித்த அறிவிப்பை அரசு உத்தியோகபூர்வமாக விரைவில் வெளியிடவிருக்கிறது. இறுதிப் போரின் போதும் அதனை அண்டிய கால கட்டங்களிலும் மோசமான அளவில் மனித உரிமை மீறல்கள் இலங்கையில் நடத்ததாக சர்வதேச சமூகம் தொடர்ச்சியான குற்றச்சாட்டுகளை முன்வைத்து வரும் நிலையில் அவற்றுக்குப் பதில் கொடுக்கும் வகையில் இலங்கை இந்த முடிபை எடுத்திருக்கிறது.

இந்தஉண்மையைக்கண்டறியும்ஆணைக்குழுவின் (23ஆம் பக்கம் பார்க்க)

## எரிபொருள் விலை உயர்வே மின்கட்டணம் அதிகரிக்க காரணம்

### மின் சக்தி அமைச்சு தெரிவிப்பு

கனிய வளக் கூட்டுத்தாபனம் இலங்கை மின்சார சபைக்கு வழங்கும் எரிபொருள்களின் விலைகளை அதிகரித்தமையே மின்சார கட்டண அதிகரிப்புக்கு காரணம் என்று மின்சக்தித் துறை அமைச்சு நேற்று தெரிவித்துள்ளது.

அதன் செயலாளர் எம்.எம்.சி.பர்டினாண்ட் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

மின்சார கட்டணத்தை குறிப்பிட்ட அளவு குறைப்பதற்கே தாம் எதிர்பார்த்திருந்ததாக அவர் குறிப்பிட்டார்.

2014ஆம் ஆண்டு ஆரம்பத்திலேயே இதனை நடைமுறைப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தது. நீண்டகால முதலீட்டை அர சாங்கம் மேற்கொண்டிருக்கின்றது.

உரிய பிரதிபலன் கிடைப்பதற்கு முன்னரே பொதுமக்கள் மீது (23ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம்களுக்கு அரச காணி

வடக்கு முஸ்லிம் மக்களுக்கு அரசாங்கம் 1500 ஏக்கர் காணிகளை வழங்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1990ஆம் ஆண்டில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களுக்கே இவ்வாறு க்காணி வழங்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார் (24ஆம் பக்கம் பார்க்க)

## இன மோதலுக்கு வழி செய்கிறது பொது பல சேனா

### மு.காங்கிரஸ் குற்றச்சாட்டு

உலமா சபையின் ஊடாக அல்-ஹைடா பயங்கரவாதிகள் இலங்கைக்குள் ஊடுருவி வருகின்றனர் என கோத்தபாய ராஜபக்ஷவின் கீழ் இயங்கும் பொது பல சேனா தெரிவித்துள்ள கருத்துக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்தனது கண்டனத்தை தெரிவித்துள்ளது.



பாதுகாப்பு (23ஆம் பக்கம் பார்க்க)

நியூசிலாந்து-இலகுவில் செல்லலாம்

நியூசிலாந்து:
★ IELTS தேவையில்லை.
★ 2 வருடத்தில் PR பெறலாம். PR உடன் அவுஸ்திரேலியா குடிபெயரலாம்.
★ பகுதி நேர தொழில் வாய்ப்பு
★ ஜூன் மாதம் மாணவர் உள்வாங்கல் தற்போது விண்ணப்பங்கள் ஏற்பு.

சைப்பிரஸ்-மலிவாகப் போகலாம்

சைப்பிரஸ்:
★ ஐரோப்பிய நாடு, IELTS இல்லை.
★ மிகக் குறைந்த கல்லூரிக் கட்டணம்.
★ பகுதி நேரத்தில் கவர்ச்சியான வேதனம்
★ இதுவும் ஜூன் மாதம் உள்வாங்கல் தற்போது விண்ணப்பங்கள் ஏற்பு.

விரைந்து வாருங்களேன்
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090
(சீ-3072)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தலைகீழாக பறந்த தேசியக் கொடி!

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் தேசியக்கொடி தலைகீழாக ஏற்றப்பட்ட சம்பவமொன்று யாழ்ப்பாணத்தில் நேற்று சனிக்கிழமை இடம் பெற்றது.

மானிப்பாய் பிரதேச பொலிஸாரின் ஏற்பாட்டில் நடைபெற்ற சித்திரைப் புதுவருட விளையாட்டு போட்டியின் போது இலங்கைத் தேசியக் கொடி இவ்வாறு தலைகீழாக ஏற்றப்பட்டது.

தேசியக்கொடி தலைகீழாக ஏற்றப்பட்டிருப்பதை அறிந்த பொலிஸார் உடனடியாக அதனை இறக்கி திரும்பவும் முறையாக ஏற்றி மரியாதை செலுத்தினர்.

யாழ்.நவாலிப்பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் பொலிஸாரின் ஏற்பாட்டில் விளையாட்டுப் போட்டி நடைபெற்று வருகின்றது.

இந்தப் போட்டியில் தேசியக்கொடியும் பொலிஸ் கொடியும் ஏற்றப்பட்டு ஆரம்பித்து வைக்கப்பட்டன. இதன் போது இலங்கைத் தேசியக்கொடி தலைகீழாக ஏற்றப்பட்டது. (எ-6)

# பொழுது போக்கச் சென்றவர் மீது இராணுவச் சிப்பாய் முறுகல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பண்ணைப்பகுதியிலுள்ள கடற்கரை ஓரமாக அமைக்கப்பட்ட இருக்கையில் அமர்ந்திருந்த இளைஞர் ஒருவர் மீது இராணுவச் சிப்பாய் ஒருவர் தாக்குதல் மேற்கொள்ள முற்பட்டமை அப்பகுதியில் நேற்று சிறிது நேரம் பரபரப்பை ஏற்படுத்தியது.

அத்தோடு மோட்டார் சைக்கிளில் இருந்த தலைக்கவசத்தையும் எடுத்துக்கொண்டு செல்லவும் குறித்த இராணுவ சிப்பாய் முற்பட்டார்.

நேற்று மாலை 6.10 மணியளவில் இந்த சம்பவம் இடம் பெற்றது. வாகனங்களை நிறுத்த வேண்டாம் என சிறிய மட்டையொன்றில் எழுதி அப்பகுதியில் வைக்கப்பட்டிருந்ததை கவனிக்காமல் குறித்த இளைஞன் அப்பகுதியில் மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு சென்றதால் தாக்குதல் மேற்கொள்ள குறித்த இராணுவ சிப்பாய் முற்பட்டார்.

சுமார் 50 இற்கும் மேற்பட்டவர்கள் அப்பகுதியில் நின்றிருந்த நிலையில் இவ்வாறு அநாகரிகமாக குறித்த இராணுவ சிப்பாய் நடந்து கொண்டமை அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது அத்தோடு பொழுது போக்குவதற்காக வந்தவர்களும் கலைந்து சென்றனர். (எ-6)

# குடும்ப ஆட்சி அதிகார...

அமெரிக்காவால் வெளியிடப்பட்ட 2012 ஆம் ஆண்டக்கான மனித உரிமைகள் நடைமுறைகள் தொடர்பிலான நாடுகளின் அறிக்கையில் இலங்கை அரசாங்கம் மீது கடுமையான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன.

இவ் அறிக்கை அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் தொழிலாளர், ஜனநாயகம் மற்றும் மனிதவுரிமைகள் விவகார பிரிவினால் வருடம் தோறும் வெளிடப்பட்டு வருகின்றது.

இந் நிலையில் 2012ஆம் ஆண்டுக்கான இவ் அறிக்கையை அமெரிக்க ராஜாங்க அமைச்சர் ஜோன் ஹெரி நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் ஆட்சி நிர்வாகத்தில் ராஜபக்ஷ குடும்பத்தின் அதிகாரம் மேலோங்கியிருப்பதாக இவ்வறிக்கையின் ஆரம்பத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ் அறிக்கையில் இலங்கை தொடர்பில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் வருமாறு, இலங்கையில் முக்கிய மனித உரிமைகள் பிரச்சினையாக சிவில் செயற்பாட்டாளர்கள், விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள் மற்றும் அரசாங்கத்தை விமர்சிக்கும் ஊடகவியலாளர்கள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்களும் துன்புறுத்தல்களும் காணப்படுகின்றன. படைத்தரப்பினர் சிவில் நிர்வாகத்தைக் கட்டுப்படுத்துகின்றனர்.

இலங்கையின் மற்றொரு பாரிய மனிதவுரிமை பிரச்சினையாக படையினர் மற்றும் அரச ஆதரவு ஆயுதக் குழுக்களின் சட்டத்திற்கு புறம்பான கொலைகளை சுட்டிக் காட்ட முடியும். துணை ஆயுதக் குழுக்களும் படையினருக்கும் இடையில் நெருக்கமான உறவுகள் உள்ளன.

காணாமல் போனோர் தொடர்பில் விசாரணைகளோ அல்லது அதற்குப் பொறுப்பானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவதோ இல்லை. பொலிஸாரின் சித்திரவதைகளும் தாக்குதல்களும் தொடர்கின்றன. ஊடகத்துறை மற்றும் நீதித்துறை மீதான தாக்குதல்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

படையினர் மற்றும் பொலிஸாரால் தமிழ் பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் சட்டத்திற்கு புறம்பான கைதுகள், சித்திரவதைகள் மற்றும் சட்டத்திற்குப் புறம்பான தடுத்து வைப்புகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

நீதித்துறைக்கான சுதந்திரம் மறுக்கப்பட்டுள்ளதுடன் மக்களின் தனிப்பட்ட உரிமைகளான கருத்துச் சுதந்திரம், ஊடக சுதந்திரம், ஒன்றுகூடும் உரிமை மற்றும் நடமாடும் உரிமை போன்றன கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கையில் இடம்பெறும் தேர்தல்கள் மோசடிகளுடன் இடம் பெறுவதுடன் தேர்தல்களின் போது ஆளும் கட்சியினரால் அரச வளங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றன.

வடபகுதியில் படையினர் மற்றும் பொலிஸாரின் சோதனை நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெறுகின்றன. அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் மக்கள் நடமாட முடியாமல் தடுக்கப்பட்டுள்ளன.

அரசாங்கத்தை விமர்சிக்கும் ஊடகவியலாளர் தாக்கப்படுவதால் அவர்கள் சுய தணிக்கையை பின்பற்ற வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். அரசாங்கம் வெளிப்படைதன்மையுடன் செயற்படவில்லை என்பது பாரிய குறைபாடு.

இலங்கையில் பெண்களும் சிறுவர்களும் தொடர்ந்து துன்புறுத்தப்படுகின்றனர். பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்களில் படையினர், பொலிஸார் மற்றும் துணை ஆயுதக் குழுக்களின் உறுப்பினர்கள் தொடர்புபட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. தமிழ் மக்கள் இன ரீதியாக தொடர்ந்து பாகுபாடுகளுக்கு உள்ளாகி வருகின்றனர்.

இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமை சட்ட மீறல்களில் ஈடுபட்டவர்கள் எவரும் பொறுப்புக் கூறவைக்கப்படவில்லை.

சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்ட நீதிக்குப் புறம்பான படுகொலைகள் தொடர்பான வீடியோ குறித்து விசாரிக்க படைத்தளபதியினால் நியமிக்கப்பட்ட இராணுவ நீதிமன்றத்தின் அறிக்கை இன்னமும் வெளியிடப்படவில்லை.

போரின்போது இடம்பெற்ற நீதிக்குப் புறம்பான படுகொலைகள், காணாமல் போதல்கள் மற்றும் பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் உள்ளிட்ட மனித உரிமை மீறல் சம்பவங்களில் முன்னாள் படைத்தளபதி சரத் பொன்சேகாவும் தொடர்பு பட்டுள்ளதாக மனிதவுரிமை அமைப்புகள் குற்றம் சாட்டப்படுகின்றன.

புனர்வாழ்வு வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் போராளிகள் புனர்வாழ்வு முகாம்களில் அதிகாரிகளினால் மோசமான சித்திரவதை செய்யப்பட்டதுடன் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ள படைத்தரப்பினரின் அதியுயர் பாதுகாப்பு வலயங்களால் பெருமளவு மக்கள் இன்னமும் தமது சொந்த நிலங்களில் மீளக் குடியேற முடியாமல் இடம்பெயர்ந்து வாழ்கின்றனர் எனவும் இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

# விபத்தில் சிக்கி இருவர் படுகாயம்

(கரணவாய்)

மோட்டார் சைக்கிளும் துவிச்சக்கர வண்டியும் விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிள் சென்ற இருவர் படுகாய மடைந்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்று மாலை 6.30 மணியளவில் தொண்டைமானாறு சந்தியருகே இடம் பெற்றுள்ளது.

இதில் நல்லூர் மூத்த விநாயகர் கோயிலடியைச் சேர்ந்த ஞானசேகரம் தவராணி (வயது 45) ஞானசேகரம் ரூபன் (வயது 26) ஆகிய இருவரும் படுகாயமடைந்த நிலையில் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (எ-60)


## கண்ணீர் அஞ்சலி



திருமதி பூரணசந்திரோதயம் பத்மநாதன்

யாழ்.பல்கலைக்கழக முதுகல்விமாணி கற்கை நெறியில் கல்வி பயிலும் திருமதி றோகினி கருணேஸ்வரன் (உதவிக் கல்விப்பணிப்பாளர்-விஞ்ஞானம், வலயக் கல்வி அலுவலகம் - வடமராட்சி) அவர்களின் அன்புத் தாயார் திருமதி பூரணசந்திரோதயம் பத்மநாதன் அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். ஓம் சாந்தி

முதுகல்விமாணி மாணவர்கள் (2011/2012)
யாழ்ப்பாண பல்கலைக் கழகம்

(C-3071)

## தேவை

யாழ்/கொழும்பு பிரதேசங்களில் கட்டிட நிர்மாணத்துறையில் மேசன்,கை உதவியாளர் தேவை.

- சம்பளம் 20,000-45,000 வரை
- உணவு,தங்குமிடம் வழங்கப்படும்.

விரைவாக அழையுங்கள்.

தொடர்புகளுக்கு:-
வவுனியா காரியாலயம்.
077 5561883, 077 6000741

(சி-3062)

## வீடு விற்பனைக்கு

கோப்பாய் சந்தியில் பருத்தித்துறை வீதி பஸ் தரிப்பிடத்திற்கு பின் அமைந்துள்ள மூன்று (03) பரப்புடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0778691049

(2414)

## விற்பனைக்கு

நியூ பேனாட் (NEW BERNARD) NO.1 புறொயிலர் இன கோழி குஞ்சுகள் எம்மிடம் பதிவு செய்துபெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:-
செல்வரெட்ணம்
70/11, நச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.
0778448295
0776176370

(சி-3053)

## யாழ்ப்பாணம் செல்லா சினிமா




சரத்குமார், சேரன், சூர்யா, பிரசன்னா, பிரகாஸ் ராஜ் மற்றும் பிரபலமான நட்சத்திரங்கள் நடித்த

சென்னையில் ஒரு நாள்

10.30, 2.30, 6.30, 9.30

இன்று முதல் இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு

union assurance
*Trust in your tomorrow, today.*

இலங்கையில் முன்னணி காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றான

**யூனியன் அஷ்யூரன்ஸ் PLC யின்**

## சுன்னாகக் கிளைக்கான வேலைவாய்ப்பு

**வாழ்க்கையில் சாதிக்க வேண்டும் என எண்ணுகிறீர்களா? தோற்றுங்கள் நேர்முகத் தேர்விற்கு**

**யூனியன் அஷ்யூரன்ஸில் இணைவதன் ஊடாக நீங்கள் அடையும் நன்மைகள்**



- ✔ அதி உயர் வருமானம் உழைக்கும் வசதி
- ✔ ஒவ்வொரு வருடமும் வெளிநாட்டுச் சுற்றுலா வசதி
- ✔ வீடமைப்புக் கடன் வசதி
- ✔ மோட்டார் சைக்கிள், கார் போன்ற வாகன வசதிகள்
- ✔ ஒவ்வொரு வருடமும் தங்கப்பதக்கங்களை வெல்லும் அரியவாய்ப்பு
- ✔ உயர்தர அறிவுசார் பயிற்சி நெறிகள்



Note:-விடாமுயற்சியும் தன்னம்பிக்கையும் இருந்தால் வாழ்க்கையில் சாதிக்க முடியாதது ஒன்றுமில்லை. ஏற்கனவே வேறு தொழில்துறையில் ஈடுபட்டவர்களும் பகுதி நேரமாக வேலைவாய்ப்பினை பெற்றுக்கொள்ள முடியும்.

**இடம்: யூனியன் அஷ்யூரன்ஸ் PLC.**
160 1/6, கே.கே.எஸ். வீதி. சுன்னாகம் (சம்பத் வங்கிக்குமேல்)
**காலம் : 23.04.2013 செவ்வாய்க்கிழமை**
**நேரம் : காலை 9.30 மணி**



காப்புறுதி அபிவிருத்தி உத்தியோகத்தர் (A.D.O)
மு.கரன் 0772417007
[illegible] 0773769045
அலகு அபிவிருத்தி முகாமையாளர் (U.D.M)

(சி-3065)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனை சார்ந்த உற்பத்திகள் சர்வதேச தரத்திற்கு நிகராக நவீனப்படுத்தப்படல் வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச தரத்திற்கு நிகராக எதிர்காலத்தில் பனைசார்ந்த உள்ளூர் உற்பத்திகள் புதிய வடிவமைப்புடன் நவீனமுறையில் முன்னெடுக்கப்பட வேண்டுமென ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான கே. என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

தாய்லாந்தில் இம் மாதம் நடைபெறவுள்ள சர்வதேச கண்காட்சி மற்றும் விற்பனைச் சந்தைக்குச் செல்லும் குழுவினருடன் கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தாய்லாந்தில் இம்மாதம் நடைபெறவுள்ள சர்வதேச கண்காட்சி மற்றும் சந்தைக்குச் செல்லும் குழுவினருடன் கொழும்பு மருதானையில் அமைந்துள்ள அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று நடந்த கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.

தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில் சர்வதேச கண்காட்சி மற்றும் விற்பனைச் சந்தை இம்மாதம் நடைபெறவுள்ள நிலையில் பனை சார்ந்த பல்வேறு உற்பத்திகளும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அக்கண்காட்சியைப் பார்வையிடும் நல்லதொரு சந்தர்ப்பம் உங்களுக்கு கிடைக்கப் பெற்றுள்ள நிலையில் இதனை வெளிநாட்டு சுற்றுலாப்பயணமாக கருதாமல் அது உங்களுக்கு மட்டுமல்லாது சமூக மேம்பாட்டுக்கான நலன்களை கருத்திற்கொண்டமையக்கூடிய வகையில் அதனை சிறந்த முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டின் கீழ் வருடந்தோறும் அமைச்சின் கீழான பனை அபிவிருத்தி சபை, கைத்தொழில் அபிவிருத்தி சபை, தேசிய வடிவமைப்பு நிலையம், தேசிய அருங்கலைகள் பேரவை மற்றும் வடகடல் நிறுவனம் மற்றும் கித்துள் ஆகியன ஒன்றிணைந்து தேசிய கண்காட்சியை நடத்தி வரும் நிலையில் எதிர்காலங்களில் பனை சார்ந்த நவீன தொழில்நுட்பத்துடன் கூடியதான உற்பத்திப் பொருட்களின் கண்காட்சிகளை மாவட்டங்கள் தோறும் முன்னெடுப்பதற்கு தாய்லாந்தில் நடைபெறவுள்ள மேற்படி கண்காட்சி பேருதவியாக இருக்கும்.

தாய்லாந்து நகர் பாங்கொக்கில் நாளை திங்கட்கிழமை தொடக்கம் தொடர்ந்து 3 நாட்களும் அன்பளிப்பு மற்றும் வீட்டுப்பாவனைப் பொருட்கள் கண்காட்சி நடைபெறவுள்ள நிலையில் பனை சார்ந்த நிலையில் அங்கு பனை சார்ந்த நவீன தொழில் நுட்பத்துடன் கூடியதான கைப்பணி உற்பத்திப் பொருட்களும் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

மேற்படி கண்காட்சியை பார்வையிடுவதுடன் அது தொடர்பான மேலதிக நவீன தொழில் நுட்பம் மற்றும் புதிய வடிவமைப்பு உள்ளிட்ட அறிவினை பெற்றுக் கொள்ளும் வகையில் வடக்கு கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த பனை சார்ந்த கைப்பணி போதனாசிரியர்கள் தாய்லாந்திற்கு செல்லவுள்ளனர்.

இலங்கை வர்த்தகத் கைத்தொழில் சம்மேளனங்களின் ஒன்றியம் மேற்படி பயணத்திற்கான ஏற்பாடுகளையும் வழிகாட்டல்களையும் ஒக்ஸ்பாம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதிப் பங்களிப்புடன் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமைச்சரும் அவரது ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைவாக பனை அபிவிருத்தி சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம் தலைமையில் 25 பேர் அடங்கிய குழுவினர் தாய்லாந்து செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# வாரம் ஒரு தகவல்

## எடை போடுவது எப்படி?

ஒரு மனிதனை எடை போடுவது எப்படி?

உருவத்தைப் பார்த்து எடை போடுவதா? உடையைப் பார்த்து எடைபோடுவதா? இவ்வினாவிற்குத்தான் பதிலாக 1930 ஆம் ஆண்டுப் பகுதியில் இடம்பெற்ற விடயம் அமைகின்றது.

அக்காலத்தில் ஒரு அமெரிக்காவில் ஒரு பெரிய உற்பத்தி நிறுவனம் இயங்கி வந்தது. அந்நிறுவனம் பலவகை இயந்திரங்களை ஏற்றுமதி செய்து கொண்டிருந்தது.

அச்சமயம் ஜப்பான் நாட்டிற்கு அவ் இயந்திரம் ஒன்று தேவைப்பட்டது.

எனவே, ஜப்பான் அந்த அமெரிக்க உற்பத்தி நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு தமது இயந்திரத் தேவையை அறிவித்தது.

இதையடுத்து குறித்த நிறுவனம் ஓர் இயந்திரத்தை ஜப்பானுக்கு அனுப்பி வைத்தது.

இயந்திரம் நன்றாகவே வேலை செய்தது. என்றாலும் சில நாட்களில் அதில் கோளாறு ஏற்பட்டது. இதனால் இயந்திரம் வேலை செய்ய மறுத்தது.

எனவே, இயந்திரத்தை தயாரித்து அனுப்பிய அமெரிக்க நிறுவனத்திற்கே அவசரச் செய்தி ஒன்றை அனுப்பி வைத்தனர்.

அதில் இயந்திரம் சரியாக இயங்கவில்லை... அதைச் சரி செய்து கொடுக்க அவசரமாக ஒருவரை இங்கே அனுப்பி வைக்கவும் என கேட்டுக் கொண்டனர்.

இதையடுத்து அவ் உற்பத்தி நிறுவனமும் ஒருவரை ஜப்பானுக்கு அனுப்பி வைத்தனர். அவர் அங்கு போய் சேர்ந்ததும் மீண்டும் ஜப்பானிலிருந்து அந்நிறுவனத்திற்கு செய்தி வந்தது.

அதில் "நீங்கள் அனுப்பி வைத்திருக்கும் நபர் மிகவும் இளையவராக இருக்கிறார்... தயவு செய்து வயதான அனுபவமுள்ளவரை அனுப்புங்கள்" என கோரப்பட்டிருந்தது.

அவர்கள் அவரை தவறாக எடை போட்டுள்ளனர் என அறிந்து கொண்ட நிறுவனத்தினர் ஓர் அதிர்ச்சியான உண்மை தகவலை அவர்களுக்கு வழங்கினர்.

"ஏற்கனவே நாங்கள் அனுப்பி வைத்துள்ள இளைஞரையே பயன்படுத்திக் கொள்ளுங்கள். ஏனெனில்... அவர்தான் அந்த இயந்திரத்தையே கண்டு பிடித்தவர்" என பதில் அனுப்பினர்.

அப்போதுதான் தாம் வயதை பார்த்து எடை போட்டது தவறு என அவர்கள் உணர்ந்து கொண்டனர்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# இராசி பலன்

21.04.2013
சித்திரை 08, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு
தசமி காலை 6.16 மணிவரை
மகம் பிற்பகல் 5.51 மணிவரை
இராகுகாலம் 4.31-6.01 மணிவரை
சுபநேரம் 9.01-10.31 மணிவரை

**மேடம்** சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், பிள்ளைகள் குடும்ப பொறுப் புணர்ந்து நடந்து கொள்வர், இல்லம் தேடி இனிய தகவல்கள் வந்து சேரும்.

**இடபம்** கண்ணன் வழிபாடு காரிய வெற்றி தரும், விருந்தினர் வருகையுண்டு, பெற்றோரின் தேவையை பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், கல்விக்காக செலவு செய்யும் சூழ்நிலை உருவாகும்.

**மிதுனம்** வருமானம் திருப்தி தரும், இழுபறியாக இருந்த பிணக்குகளில் முன்னேற்றம் காண்பீர்கள், கோயில் திருப்பணிகளில் அதிக ஆர்வம் ஏற்படும், இனிய அனுபவங்கள் ஏற்படலாம்.

**கடகம்** உங்களின் மணியான யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், புதிய பொருட்சேர்க்கையுண்டு, நன்மைகள் நடைபெறும் நாள், சுப செய்திகள் வந்துசேரும் நாள்.

**சிங்கம்** இறை வழிபாட்டில் இனிமை காண வேண்டிய நாள், ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள்,போசன நன்மையுண்டு.

**கன்னி** சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள், அலைச்சல்கள் கூடும், குடும்பத்தில் உணர்ச்சி வசப்படும் சூழ்நிலை உருவாகலாம், முயற்சிகளில் சில தாமதங்கள் ஏற்படலாம்.

**துலாம்** எதிர்பாராத நன்மைகள் இடம்பெறலாம், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவி செய்ய முன்வரலாம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும்.

**விருச்சிகம்** தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு, பணத் தேவைகள் பூர்த்தியாகும், மதிப்பும் மரியாதையும் உயர்வடையும், போசன சுகமுண்டு.

**தனுசு** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், குடும்பத்தில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், உதாசீனப் படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம்.

**மகரம்** எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம், சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக் கலாம், பயணத்தின் போது பொருட் களில் கவனம் தேவை.

**கும்பம்** களஸ்திர நன்மையுண்டு, மதிநுட்பத் தால் மகத்தான காரியமொன்றை செய்து முடிப்பீர்கள், இனிய அனுபவங்கள் ஏற்படலாம், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**மீனம்** சச்சரவை விட்டு சாதித்து காட்டுவீர்கள், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், உடல் நலனில் ஏற்பட்ட பாதிப்புகள் அகலும், கௌரவமான நாள்.

வளவன்

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|
| கத்தரிக்காய் | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 120 | 140 |
| தக்காளி | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 |
| கோவா | 80 | 60 |
| கரட் | 140 | 160 |
| பூசணி | 50 | 50 |
| புடோல் | 80 | 40 |
| வாழைக்காய் | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 100-150 | 60-140 |
| பெரிய வெங்காயம் | 80 | 70 |
| பாகற்காய் | 120 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | -- | 100 |
| பயற்றங்காய் | 120 | 80 |
| லீக்ஸ் | 140 | 120 |
| பீற்றூட் | 60 | 60 |
| கறிமிளகாய் | 120 | 120 |
| முருங்கைக்காய் | 600 | 400 |
| போஞ்சி | 120 | 80 |
| கத்தரிதம்புள்ள | 30 | -- |
| கீரை - 1 பிடி | 30 | 20 |
| தேசிக்காய் | 60 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40-45 |
| இராசவள்ளி | 120 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரியாலை கிழக்கு பகுதிகளுக்கு மூன்று மாதங்களில் மின்சாரம்

(யாழ்ப்பாணம்)


பூம்புகார் மற்றும் அரியாலை கிழக்கு பகுதிகளுக்கு இன்னும் மூன்று மாதங்களுக்குள் மின்சாரம் வழங்கப்படும் என இலங்கை மின்சார சபையின் யாழ்ப்பாண பிரதேச மின்னத்தியட்சகர் என்.அருள்தாசன் தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த 18 ஆம் திகதி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்ட அப்பகுதி மக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கும் குற்றச்சாட்டுகளுக்கும் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இலங்கை மின்சார சபையினால் அரியாலை கிழக்கு மற்றும் பூம்புகார் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இன்னும் மூன்று மாதங்களுக்குள் குறித்த பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)




நன்றி: அததெரண

## கலாபூஷணம் விருதுக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது

(பண்டத்தரிப்பு)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வலிகாமம் மேற்கு பிரதேச கலைஞர்களிடம் இருந்து இவ்வாண்டு கலாபூஷணம் விருதுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கமைய சிற்பம், ஓவியம், நடனம், வாய்ப்பாட்டு,தவில், நாதஸ்வரம், நாடகம், நாட்டுக்கூத்து, நாட்டுப்புறவியல், ஊடகத்துறை, சினிமா ஆகிய கலைத்துறைகளில் மிகவும் சிறப்புடன் சேவையாற்றி எதிர்வரும் டிசெம்பர் மாதம் 15ஆம் திகதி அன்று 60 வயதைப்பூர்த்தி செய்யும் நிலையில் உள்ள கலைஞர்களே இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் உள்ள மேற்படி தகைமை உள்ள கலைஞர்கள் இதற்கான விண்ணப்பங்களை சங்கானை பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் மேமாதம் 23ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், சங்கானை என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (அ-30)

# சமுர்த்தி பயனாளிகளை அதிகரிக்க வேண்டாம்

## சுற்றறிக்கை வெளிவந்தது

(யாழ்ப்பாணம்)

சமுர்த்திப் பயனாளிகளை அதிகரிக்க வேண்டாம் என சுற்றறிக்கை வெளி வந்துள்ளதாக நல்லூர் பிரதேச செயலாளர் பி.செந்தில் நந்தனன் தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் கடந்த 18 ஆம் திகதி செயலக மர்நாட்டு மண்டபத்தில் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சில்வேஸ்திரி அலென்ரின் தலைமையில் இடம்பெற்றது.

இதில் சமுர்த்திப் பயனாளிகளைப் புதிதாக இணைப்பது தொடர்பாக வேண்டுகோள் விடுக்கப்பட்டபோதே பிரதேச செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாடளாவிய ரீதியில் சமுர்த்திப் பயனாளிகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு வருகின்றது. அத்தோடு புதிதாக எவரையும் சமுர்த்திப் பயனாளிகளாக இணைக்க வேண்டாம் என பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் சுற்றறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.


இருப்பினும் ஏற்கனவே பயனாளிகளாகவுள்ளவர்களின் குடும்ப நிலைகள் தொடர்பில் ஆராய்ந்து அவர்களை நீக்கி விட்டு புதிதாக பயனாளிகளை இணைப்பது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

## துப்புரவு செய்யப்படுகின்றது பாரதி.ச.ச.நிலைய வளாகம்

(நல்லூர்)

நாயன்மார்கட்டு பாரதி மன்ற சனசமூக நிலைய வளாகம் கடந்த பல வருடங்களாக பற்றைக் காடாகவும் பள்ளமாகவும் இருந்ததை அடுத்து பாரதி மன்ற சனசமூக நிலையத்தினரால் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றது.

மேற்குறித்த வளாகத்தில் மண் பறிக்கப்பட்டு பற்றைகள் அகற்றப்பட்டு வருவதுடன் விளையாட்டு மைதானமாகவும் இதனை பயன்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளனர். (அ-3-134)




## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் பழம் வீதி அருள் மிகு ஞான வைரவப் பெருமான் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று முன்தினம் புதன்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இவ் அலங்கார உற்சவம் தினமும் மாலை 6.30 மணிமுதல் 7.30 மணிவரை மதுரகவி காரை எம்.பி. அருளானந்தம் வழங்கும் மகாபாரம் எனும் சிறப்புச் சொற்பொழிவு இடம் பெறவுள்ளது. (அ-5)

# மக்களுக்கு மலசலகூடம் அமைப்பதில் சிக்கல்

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட கோண்டாவில் காரைக்கால் சிவன் கோவில் பகுதியிலுள்ள முகாமில் வாழ்ந்து வரும் குடும்பங்களுக்கு மேலதிக மலசலகூடம் ஒன்று அமைத்துக் கொடுக்கும்படி நல்லூர் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சில்வேஸ்திரி அலென்ரின் தலைமையில் கடந்த 18 ஆம் திகதி இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் வலி.வடக்கு பிரதேச சபையின் உப தவிசாளர் சஜீபன் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்.

இதற்கு பதிலளித்த நல்லூர் பிரதேச செயலர் பி.செந்தில்நந்தனன் அந்தக் குடும்பங்கள் தங்கியுள்ளது கோவில் காணி என்பதால் மலசலகூடம் அமைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்ததோடு மலசலகூடம் ஒன்று அமைத்துத் தருமாறு ஏற்கனவே அந்த முகாம் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர் எனவும் தெரிவித்தார். (அ-6)

# கணனி கற்கை நெறிகள் ஆரம்பம்

யாழ்ப்பாண கல்வி வலயத்தில் அமைந்துள்ள கணனி வள நிலையத்தில் கணனி கற்கை நெறிகளுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன. பாடசாலையை விட்டு விலகியோர், தொழில் புரிவோர் மற்றும் கணனி கற்க ஆர்முடைய அனைவருக்கும் ஏற்ற வகையில் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட Office Automation, Web Designing, DBMS, Computer Hardware, Programming Languages போன்ற Diploma கற்கை நெறிகள் Windows மற்றும் Linux Operating System களில் இடம்பெறவுள்ளன. விண்ணப்பப் படிவங்களை வலய கணனி வள நிலையத்தில் பெற்று எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கணனி வள நிலைய முகாமையாளர் கேட்டுள்ளார். (அ)

## இறுதிச்சுற்று போட்டியும் பரிசளிப்பு விழாவும்

(மானிப்பாய்)

புத்தாண்டை முன்னிட்டு மானிப்பாய் மேற்கு இளைஞர் கழகமும் நியூஸ்ரார் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்திய கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியும் பரிசில் வழங்கும் நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நவாலி அட்டகிரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வலி.தென்மேற்கு பிரதேச சபை தவிசாளரும் சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளத்தின் முன்னாள் தலைவருமான அ.ஜெபநேசன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக மருதடி விநாயகர் சனசமூக நிலையத் தலைவர் ஆ.வாஷிங்டன், பிரபல வர்த்தகர் யோ.சுகந்தன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். கௌரவ விருந்தினராக இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் பே.சுபாகர் கலந்து கொள்ளவுள்ளார்.

இச்சுற்றுப் போட்டியில் மாவட்டத்தின் 30 முன்னணி விளையாட்டுக் கழகங்கள் பங்கு பற்றியமை குறிப்பிடத்தக்கது. (அ-3-23)

## பிரதான தபாலகத்தை பழைய இடத்திற்கு மாற்றுக

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதான தபாலகத்தை பழைய இடத்தில் செயற்பட வைக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இத்தபாலகம் 25 வருடங்களுக்கு மேலாக நிரந்தர கட்டடத்தில் இயங்கி வந்த நிலையில் தற்போது இடம்பெயர்ந்து தனியார் கட்டடத்தில் செயற்பட்டு வருகிறது.

இதனால் தபாலக உத்தியோகத்தர்களுக்கும் பொதுமக்களுக்கும் பெரும் சிரமங்கள் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் பருத்தித்துறை பிரதான தபாலகத்தை மீண்டும் பழைய இடத்தில் இயங்க வைக்க ஆவன செய்ய வேண்டுமென்பதே அப்பகுதி மக்களின் வேண்டுகோளாகும். (அ-3-10)

# மஹோற்சவம்

(தும்பளை)

மாதனை ஸ்ரீகற்பக பிள்ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவம் கடந்த 15 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறுகின்றது.

இதில் ஏழாம் நாளாகிய இன்று ஞாயிற்றுக்கிழமை வேட்டைத் திருவிழாவும் நாளை திங்கட்கிழமை சப்பறத் திருவிழாவும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

அதைத் தொடர்ந்து எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தோற்சவமும் மாலை கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளன. (அ-3-19)

## கல்வியியற் கல்லூரி சான்றிதழ் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் 2009/2011 ஆம் கல்வி ஆண்டில் கற் பித்தலில் தேசிய டிப்ளோமாப் பயிற்சி நெறியை பூர்த்தி செய்த ஆசிரியர்களுக்கான டிப்ளோமாச் சான்றிதழ் வழங்கு வைபவம் எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி திங்கட்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கென ஒவ்வொரு ஆசிரியர்களுக்கும் 2500 ரூபா செலவாகவுள்ளமையால் ஏற்கெனவே அவர்களின் வைப்புப் பணம் 1500 ரூபாயை விட மிகுதி 1000 ரூபாயை உடனடியாக கல்லூரிக்கு செலுத்த வேண்டும் என வும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் பயிற்சியை முடித்துக் கொண்ட ஆசிரியர்கள் ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதிக்கு முன் குறித்த தொகையை கல்லூரியில் செலுத்து மாறும் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே. யோக நாதன் அறிவித்துள்ளார். (ஏ)

## பொங்கல் உற்சவம்

(தும்பளை)

கற்கோவளம் ஸ்ரீகும்பி முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவத்தின் ஆரம்ப நிகழ்வு கடந்த 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 25 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இக்கோயில் விழாக் காலத்தில் மரபு வழி கும்மியடித்தலும் நடைபெறவுள்ளது.

இறுதி நாள் விசேட பொங்கல் பூசை நிகழ்வும் கரகாட்டம் போன்ற நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (அ-3-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு:**
T.P : 021 321 0815, 021 567 1540
E-mail : valampuriijaffna@gmail.com


## மானிப்பாய் ஆனைக்கோட்டையில் வைத்திய நிலையம்

- எமது வைத்திய நிலையம் 11.04.2013 வியாழக் கிழமை தொடக்கம் 04 ஆம் கட்டை, யாழ்.றோட் (புக்கை தின்னிப் பிள்ளையார் கோயிலடி) ஆனைக் கோட்டையில் மாற்றப்பட்டுள்ளது என்பதை மிகவும் மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**எமது சேவைகள்**

- ✔ சகலவிதமான நோய்களுக்கும் சிறந்த சிகிச்சை அளிக்கப்படும்.
- ✔ இரத்தம், சிறுநீர் (ஆய்வுகூட சேவைகள்) நவீன முறையில் செய்து கொடுக்கப்படும்.
- ✔ விடுமுறையில் செல்பவர்களுக்கான வைத்தியச் சான்றிதழ் வழங்கப்படும்.

**தினமும் பார்வையிடும் நேரங்கள்**

காலை 08.30 மணிமுதல் - 1.00 வரை
மாலை 04.30 மணிமுதல் - 8.30 வரை

**கஜமுகன் வைத்திய நிலையம்**

04 ஆம் கட்டை,
(புக்கை தின்னி பிள்ளையார் கோயிலடி)
யாழ்.றோட், ஆனைக்கோட்டை. (சி-3067)


## போதைப் பொருளுடன் இருவர் கைது

(கொழும்பு)

ஹெரோயின் போதை பொருளுடன் இருவர் ஹற்றன் குற்ற புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த தகவலையடுத்து கினிகத் ஹேனையில் நேற்று முன்தினம் இருவர் சந்தேகத்தின் பெயரில் கைதாகியுள்ளனர்.

அவர்களிடமிருந்து பல இலட்சம் ரூபா பெறுமதியான 25 பைக்கெற்று ஹெரோயின் போதைப் பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

பைக்கெற் ஒன்றின் பெறுமதி சுமார் 15 ஆயிரம் ரூபாய்க்கு மேல் இருக்கும் எனவும் இது தொடர்பிலானமேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவற்றை இவர்கள் மலவாயிலில் மறைத்துக் கொண்டு வந்ததாக தெரிவிக்கும் பொலிஸார் இவர்கள் கொழும்பு பகுதியை சேர்ந்தவர்கள் எனவும் குறிப்பிட்டுள்ளனர். (அ-2)


**யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி**
**வதிரி - கரவெட்டி**

**க.பொ.த.உ.தர புதிய மாணவர் அனுமதி - 2015**

மேற்படி எமது கல்லூரியின் கலை, வர்த்தகம், விஞ்ஞான பிரிவுகளுக்கான அனுமதிகள் யாவும் 22.04.2013 அன்று மேற்கொள்ளப்படும். அன்றைய தினம் காலை 10 மணிக்கு உரிய ஆவணங்களுடன் கல்லூரிக்கு சமுகம் தரவும்.

- அதிபர்



## கணனி தட்டச்சாளர் தேவை

சர்வதேச சட்டநிறுவனம் ஒன்றிற்கு கணனிதட்டச்சாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்:**
1. க.பொ.த.(உ.தர)பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.
2. க.பொ.த.(சா.தர)பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச்சித்தி பெற்றிருத்தல்.
3. தமிழிலும் ஆங்கிலத்திலும் சுயமாக அலுவலக ஆவணங்கள் தயாரித்து கணனியில் தட்டச்சுசெய்து பிரதியெடுக்கக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:** 25-40 வயது

**அனுபவம்:**
மூன்று வருடங்களுக்கு மேற்பட்ட கணனித்துறை அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.
புகைப்படக்கலையில் தேர்ச்சியுடையவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.
ஆண்கள் ,பெண்கள இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும். இந்நிறுவனத்தின் தலைமைக் காரியாலயம் கொழும்பிலும் வெளிநாட்டிலும் இயங்குவதால் தேவையேற்படின் அங்கும் சென்று பணியாற்றக்கூடியவராக இருத்தல் வேண்டும்.விண்ணப்பிக்க விரும்புவோர் சுய மாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் தமது சுயவிபரங்களை பூரணப்படுத்தி 31.04.2013 ற்கு முன்னராக sinniahadvicelegal@yahoo.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.



திடநம்பிக்கையுடனான முதலீட்டிற்கு...

பங்குச் சந்தையில் முதலீடு செய்ய சரியான முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

# முதலீட்டுக்கான அறிவு
# யாழ்ப்பாணம்

2013 ஏப்ரல் 27 மற்றும்
மே 04, 11, 18, 25 ஆம் திகதிகளில்
மு.ப 09.00 முதல் நண்பகல் 12.00 வரை
கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையம்
யாழ்ப்பாணக் கிளை

பங்கு முதலீடு பற்றிய அறிமுகம் ◂
நிதிக்கூற்றுக்களை விளங்கிக் கொள்ளல் ◂
பங்குகளைத் தெரிவு செய்தலும் தீர்மானமெடுத்தலும் ◂
பங்குகளில் முதலீடு செய்தல் ◂

மொழி மூலம்: தமிழ்
பதிவுக் கட்டணம் ரூபா. 500/-

கொமர்ஷல் வங்கிக் கணக்கு இல: 1416075401 இல் வைப்பிலிட்டு, பற்றுச்சீட்டை 021 2221466 என்ற இலக்கத்திற்கு பெக்ஸ் செய்யவும். அல்லது www.cse.lk என்ற எமது இணையத்தளத்தில் பதிவு செய்யவும்.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்:
021-2221455, 0777-822014

CSE COLOMBO STOCK EXCHANGE

(சி/3054)



இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 4<br>உயரம்: 5'7"<br>கி.பா: 27<br>தகைமை/தொழில்: A/L, கல்வியியற் கல்லூரி டிப்ளோமா (தகவல் தொழில்நுட்பம்) ஆசிரியர்<br>தொ.இ: B -1610 | பிறப்பு: 1987 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூரட்டாதி 1, 1இல் செவ்.<br>உயரம்: 5'2"<br>தகைமை/ தொழில்:வெளிவாரி B.Com<br>தொ.இ: G -1680 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பரணி 4<br>உயரம்: 5'7"<br>கி.பா: 74, 12 இல் செவ்.<br>தகைமை/தொழில்: B.Com அரச தொழில்<br>தொ.இ: B -1670 | பிறப்பு: 1970 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூரம் 3<br>உயரம்: 5'6"<br>சூரி, செவ் ஒரே வீட்டில்<br>தகைமை/ தொழில்: BA, BEd, MEd ஆசிரியர்<br>தொ.இ: G-1683 |
| பிறப்பு: 1982 இந்து குருகுலம்<br>நட்சத்திரம்: புனர்பூசம் 4<br>உயரம்: 5'6"<br>கி.பா: 12<br>தகைமை/ தொழில்: Physical Education (பிரான்ஸ் PR)<br>தொ.இ: B -1671 | பிறப்பு: 1974 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: சுவாதி 2<br>சூரி, செவ் ஒரே வீட்டில்<br>உயரம்: 5'6"<br>தகைமை/ தொழில்: BA,BEd MEd ஆசிரியர்<br>தொ.இ: G -1684 |
| பிறப்பு: 1978 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: ரோகினி<br>உயரம்: 5'4"<br>கி.பா: 6.5<br>தகைமை/தொழில்: பட்டதாரி வியாபாரம், கடை பஸ் (உரிமையாளர்)<br>தொ.இ: B -1672 | பிறப்பு: 1987 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அவிட்டம் 3<br>உயரம்: 5'3"<br>கி.பா: 42, சூரி, செவ் ஒரே வீட்டில்<br>தகைமை/ தொழில்: HND IT (அரசதொழில்)<br>தொ.இ: G -1687 |

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி



உபஹார இன்டர்நெட்
அரச சேவைக்காக

இந்த புதுவருட காலத்தில் அரச சேவையிலுள்ள மொபிடெல் உபஹார பாவனையாளர்களான உங்களுக்கு

5GB தரவுப் பொதி டொங்கல் இலவசம்



தொலைத் தொடர்பாடல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சு
Sri Lanka Telecom Mobitel
வாடிக்கையாளர் சேவை இலக்கம் 1717
அனைத்து கட்டணங்களும் அரச வரிகள் மற்றும் தீர்வைகளுக்கு உட்பட்டது. நிபந்தனைகளுக்குட்பட்டது.
(சி/3056)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துமிந்தவின் உடல் நிலை தேறி வருகின்றதா?

## ஹிருணிகா கேள்வி

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவின் உண்மையான உடல் நிலை தொடர்பில் தெரிந்து கொள்ள ஆவலாக உள்ளதாக ஹிருணிகா பிரேமச்சந்திரா தெரிவித்துள்ளார்.

துமிந்த சில்வா கடந்த சில நாட்களாக கொலன்னாவ மற்றும் கொடிகாவத்தை பிரதேச சபை உறுப்பினர்கள் பலரை வைத்தியசாலையில் சந்தித்து தமது எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடி வருவதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. ஆனால் துமிந்தவின் வழக்கறிஞர்களே அவரது உடல் நிலை சீராக இல்லையெனவும் அவரால் நீதிமன்றில் ஆஜராக முடியாது உள்ளதாகவும் தெரிவித்துவருவதாகவும் ஹிருணிகா சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால் அவரது உண்மையான உடல் நிலை குறித்து அறிந்து கொள்ளும் பொருட்டு தனது வழக்கறிஞர் ஊடாக அவரை வைத்தியசாலைக்கு சென்று பார்வையிட அனுமதி கோரியதாகவும் ஆனால் அது மறுக்கப்பட்டதாகவும் ஹிருணிகா குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# இந்துக் குருமார்களுக்கு இந்தியாவில் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

இந்துக் குருமார்களை புலமைப்பரிசில் மூலம் இந்தியாவிற்கு அனுப்பி அவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாக அகில இலங்கை இந்துமா மன்ற தலைவர் கந்தையா நீலகண்டன் தெரிவித்தார்.

இவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

இங்குள்ள பிராமணர்களுக்கு இந்து சமயத்தின் அனைத்து சமய சம்பிரதாய முறைகளும் தெரியும் எனக் கூறமுடியாது.

எனினும் இந்திய நாட்டிற்கு அவர்களை அனுப்பி பயிற்சி வழங்குவதன் மூலம் சிறந்தவொரு குருவாக அவர்கள் மிளிர முடியும்.

தற்போது கொண்டு வரப்பட்டுள்ள புராதன ஏடுகளில் எமக்குத் தெரியாத எத்தனையோ சமய முறைகள் இதில் உள்ளடக்கப்பட் டுள்ளன.

அந்த வகையில் இங்குள்ள பிராமணர்கள் இவ்வேடுகளை சிறந்த முறையில் பயன்படுத்தி சிறந்த இந்து சமய குருவாக பயிற்றப்பட்டு திகழ வேண்டும் என்றார். (அ-4)

# மரண அறிவித்தல்



## திருமதி மகேஸ்வரி ஆறுமுகம்

பத்தன் மோட்டை,
கண்டாவளை, கிளிநொச்சி

மாசார் பளையைப் பிறப்பிடமாகவும் பத்தன்மோட்டை கண்டாவளையை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி ஆறுமுகம் 20.04.2013 அன்று வவுனியாவில் காலமானார்.

அன்னார் கார்லஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை- சின்னத்தங்கம் தம்பதியினரின் கனிஷ்ட புதல்வியும் சின்னத்தம்பி ஆறுமுகத்தின் அன்பு மனைவியும் சரோஜா தேவி, தேவராஜா (அஞ்சல் ஊழியர், உப தபாலகம், தர்மபுரம்), தவராஜா (லண்டன்), தவராணி (ஆசிரியை, பரந்தன் இ.ம.வி),தயாளினி (சுவிஸ்), ராஜினி (லண்டன்), சுபாஸ்கரன் (ஆசிரிய ஆலோசகர், வலயக் கல்வி அலுவலகம், வவுனியா தெற்கு, வலம்புரி ஊடகவியலாளர், வவுனியா), சுபாஜினி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சபாரஞ்சன், யோகநந்தினி (ஆசிரியை, பிரமந்தனாறு ம.வி.), ரஞ்சிதமலர் (லண்டன்), சிவநேசர் (அதிபர், பரந்தன் இந்து ம.வி.), சிவரூபன் (சுவிஸ்), பிரபாகரன் (லண்டன்), கிரியா (உளவளத் துணையாளர், பிரதேச செயலகம், வவுனியா), மனோகரன் (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும் எழிலோன், சாம்பவி, பிரணவி, அபிஷன், அன்ஷி, அஜந்தி, சஷ்டிகன், அரவிந்தை, பிரியந், சந்யா, யாதவி, கனியவன், அக்ஷயா, ஆதித்யா, மாதுளா, மகிஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 22.04.2013 திங்கட்கிழமை அன்று நண்பகல் 12 மணிக்கு தர்மலிங்கம் லேன், கல்வியியற் கல்லூரி வீதி, பூந்தோட்டம், வவுனியாவிலுள்ள மகன் சுபாஸ்கரனின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் பூந்தோட்டம் இந்து மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தர்மலிங்கம் லேன், கல்வியியற் கல்லூரி வீதி,
பூந்தோட்டம், வவுனியா.

தகவல்: குடும்பத்தினர்
தொ.பே:0778862546, 0773328687

(சி-3068)

# புலிகளுடனான போரில் மரபு ரீதியான தந்திரோபாயங்களே பயன்படுத்தப்பட்டன-கோத்தா

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக மரபு ரீதியான இராணுவ தந்திரோபாயங்களே பயன்படுத்தப்பட்டதென பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், சிவில் யுத்தம் இடம்பெற்றகாலத்தில் படையினர் மரபுரீதியான போராட்டத்தையே முன்னெடுத்தனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அதி நவீன ஆயுதங்கள், இராணுவத் தள பாடங்கள் மற்றும் யுத்தக் கப்பல்கள் இன்றியே படையினர் வெற்றிகரமாக யுத்தத்தை முன்னெடுத்துள்ளனர்.

பிராந்திய வலயத்தின் நட்பு நாடுகளுடன் பயங்கரவாத ஒழிப்பு மற்றும் யுத்த தந்திரோபாயம் பற்றிய தகவல்களைப் பரிமாறிக் கொள்ள தாம் விரும்புவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில் சீனா, பங் களாதேஷ், பாகிஸ் தான் போன்ற நாடுகளைச் சேர்ந்த படைவீரர்களுக்கு இலங்கையில் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி பெற்றவர்களுக்கு பாதுகாப்புச் செயலாளர் சான்றிதழ்களை வழங்கியிருந்தார். (அ-2)

# மு.காங்கிரஸின் அரசியல்பீடத்தை உடனடியாக கூட்டுமாறு கோரிக்கை

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் அரசியல் உயர் பீடத்தை உடனடியாக கூட்டுமாறு அதன் உறுப்பினர்கள் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் கட்சியின் தலைமைக்கு அவர்கள் விசேட கடிதம் ஒன்றையும் எழுதி அனுப்பியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

தற்போது காணப்படுகின்ற சூழ்நிலைகளில் அரசாங்கத்துடன் இணைந்திருப்பதா அல்லது விலகுவதா என்பது தொடர்பில் விவாதிப்பதற்காகவே உயர்பீடத்தைக் கூட்டுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசியலில் பயணிப்பதற்கு கட்சியினுள் காணப்படுகின்ற முரண்பாடுகள் தீர்த்துக் கொள்ளப்படவேண்டும் என்றும் அதன் உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-2)

# வலயச் சம்பியனானது யூனியன் கல்லூரி

வலிகாமம் வலய மட்டத்தில் இடம்பெற்ற மேசைப்பந்தாட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி 3 பிரிவுகளில் வலயச்சம்பியனாகியுள்ளது. கடந்த 4 ஆம் திகதி தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மேசைபந்தாட்ட திடலில் இடம்பெற்ற போட்டியில் 19, 15 வயதுப் பிரிவு பெண்கள் அணி, 19 வயதுப் பிரிவு ஆண்கள் அணி என்பன வலயச்சம்பியனாக தெரிவு செய்யப்பட்டதுடன் 15 வயதுப் பிரிவு ஆண்கள் அணி 2 ஆம் இடத்தினையும் பெற்றுக் கொண்டது. அதேவேளை கடந்த 6 ஆம் திகதி யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற வலயமட்ட கொக்கிப் போட்டியில் 19 வயதுப் பிரிவு ஆண்கள் அணி 2 ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டதுடன் மாகாண மட்டப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-2-21)


Yogi's Beauty




குறுகிய கால அழகுக்கலை புதிய வகுப்புகள் ஆரம்பம்

பல புதிய மாற்றங்களுடன் கூடிய ஒப்பனைகள்

- யாழ்.நகரில் முதன் முறையாக அறிமுகமாகும் Air Brush make up, Bridal make up
- மற்றும் புதிய யுக்திகளுடன் கூடிய Dance Make Up
- Film Make Up
- Camouflage Make Up (T.V & Photographic)
- Natural Society Make Up
- Permanent Nail Fixing
- புதிய தொழில்நுட்பங்களுடன் கூடிய Hair Rebonding & Curling

அத்துடன் கேக் Icing அலங்கார பயிற்சி வகுப்புகளும்

புதிய பிரிவுகள் : 27.04.2012 ஆரம்பமாக உள்ளன

சேர விரும்புவோர் உடன் தொடர்பு கொண்டு பதிவுசெய்துகொள்ளவும்.


75, அம்மன் வீதி. நல்லூர், யாழ்ப்பாணம்.

Mrs.Yogini Shanmuganathan
Dip.in High Tec Aesthetics & Cosmetalogy (India)
Dip.in Advanced Bridal make up& Charactor make up (India)
Dip.in Home Economics (Srilanka & India)
Dip.in Latest Make up & Hair Rebonding , Curling (India)
Yogisbeauty@gmail.com 021 222 2796, 0777164923

(சி/3017)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதடி தனியார் சிறுவர் இல்லத்தில் நடந்தது என்ன?



கைதடிப் பகுதியிலுள்ள தனியார் சிறுவர் இல்லத்தில் ஏற்பட்ட குழப்ப நிலை, நீதிமன்ற உத்தரவின் பேரில் சிறுவர் பராமரிப்பு திணைக்களத்தின் நடவடிக்கைகளின் மூலம் இயல்பு நிலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளபோதும் பல கேள்விகள் இந்த சிறுவர் இல்லம் தொடர்பில் எழுந்துள்ளன.

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை சிறுவர் மற்றும் பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள், கடத்தல், காணாமல் போதல் போன்ற சம்பவங்கள் புதியனவல்ல. இருப்பினும் 30 வருட கால நீண்டதொரு யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு சமாதானச் சூழல் ஏற்பட்டுள்ள நிலையில் 16 பதின்ம வயதுச் சிறுமிகள் காணாமற் போயுள்ளனர் என்ற செய்தி எல்லோரையும் அதிர்ச்சிக்கும் ஆச்சரியத்திற்கும் உட்படுத்தியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கைதடிப் பகுதியிலுள்ள தனியார் சிறுவர் இல்லத்திலிருந்து 16 சிறுமிகள் வெளியேறி காணாமல் போயுள்ளனர் என சாவகச்சேரி பொலிஸார் கடந்த 15 ஆம் திகதி இரவு 7 மணியளவில் ஊடகங்களுக்கு உறுதிப்படுத்தியிருந்தனர்.

பொலிஸ் நிலையத்தின் பதில் பரிசோதகர் ராஜசிங்கம் இந்தத் தகவலை உறுதிப்படுத்தியிருந்ததோடு இவற்றையெல்லாம் செய்திகளாக்கி பிரசுரிக்க வேண்டாம் எனவும் வினயமாகக் கேட்டுக் கொண்டார்.

16 சிறுமிகள் ஒரு இல்லத்தை விட்டு வெளியேறி காணாமற் போயுள்ளனர் என்பதை மூடி மறைக்க அவர் உள்ளிட்ட பலர் எடுத்த முயற்சிகள் மறுநாள் பத்திரிகைச் செய்திகள் ஊடாக வெளிப்பட்டதோடு இணையத்தளங்களிலும் மாறுபட்ட தகவல்களுடன் செய்திகள் வெளியாகி மக்களைக் குழப்பத்தில் தள்ளின.

இல்லத்தில் தங்கியிருந்தவர்கள் 35 சிறுமிகள் என்றார் இல்லத்தின் பொறுப்பதிகாரி. இல்லை இல்லை 24 சிறுமிகள்தான் இருந்தனர் என்றனர் அரச அதிகாரிகள்.

மறுநாளும் குழப்பம். மாறுபட்ட தகவல்களுடன் பத்திரிகை மற்றும் இணையத்தளச் செய்திகள். இவ்வாறு அந்த நாளும் கடந்தது.

மறுநாள் 17 ஆம் திகதி புதன்கிழமை மாலை 5.30 மணியளவில் உண்மை எனக் கூறி பத்திரிகையாளர்களுக்கு நடந்தவற்றை விளக்கினார் வடக்கு மாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்கள ஆணையாளர் செல்வி உமா தங்கவேல். கைதடி சிறுவர் இல்லத்திலிருந்தவர்கள் 24 சிறுமியர்கள் தான். அதில் 12 சிறுமியர்கள் தான் இல்லத்தை விட்டு வெளியேறியிருந்தனர். ஆனால், ஒரு சில நிமிடங்களில் அவர்களில் ஒருவர் திரும்பவும் இல்லத்திற்கு வந்து விட்டார்.

அடிப்படையில் சிறுமியர்களுக்கும் இல்லத்தின் நிர்வாகத்தினருக்கும் முரண்பாடு ஏற்பட்டதனால்தான் சிறுமிகள் இல்லத்தை விட்டு வெளியேறியுள்ளனர்.

இல்லத்திலிருந்த சிறுமியர்கள் மீது பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக எழுந்த குற்றச்சாட்டுக்களையும் முற்றாக என்னால் மறுக்க முடியும். இதற்கு யாழ்.போதனா வைத்தியசாலை ஊடாக யாழ்.சிறுவர் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை சான்றாகவுள்ளது.

மேலும் சிறுவர் இல்லத்திலிருந்து சிறுமியர்கள் வெளியேறுவதற்குக் காரணமாயிருந்தவர் என்ற குற்றச்சாட்டின் பேரிலும் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையிலும் இல்லத்தின் பொறுப்பதிகாரி கைது செய்யப்பட்டு எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நடந்தவை இவைதான் எனக் கூறி முடித்தார் ஆணையாளர் உமா தங்கவேல்.

இதனையடுத்து ஊடகவியலாளர்கள் தாம் அறிந்தவற்றைக் கூறியபோது, வடக்கு மாகாணத்திலுள்ள வெளிக்கள உத்தியோகத்தர்களின் வண்டவாளம் தண்டவாளத்திலேறியது.

சிறுவர் இல்லம் ஒன்றினை மேற்பார்வை செய்யச் செல்லும் நன்னடத்தை உத்தியோகத்தர் மற்றும் குறித்த இல்லத்தினை நடத்தியவர்கள் செய்த தவறுகளும் வெளிக்கிளம்பின.

மேற்பார்வை செய்ய வேண்டிய உத்தியோகத்தர் உரியமுறையில் தனது கடமையைச் செய்யத் தவறியதனால் ஏற்பட்ட விளைவுதான் இதுவென்றார் ஆணையாளர்.

உத்தியோகத்தர் இல்லத்திற்கு சென்று மேற்பார்வை செய்தமைக்கான கையேடுகள் எவையும் பாவனையிலிருந்திருக்கவில்லை.

இவ்வாறு எத்தனை இல்லங்களில் முறைகேடுகள் இடம்பெற்றுக்கொண்டு இருக்கின்றனவோ தெரியவில்லை என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியது கையேடு விவகாரம்.

நன்னடைத்தை உத்தியோகத்தர் குறித்த இல்லத்திற்கு பல மாதங்களாக செல்லவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இன்னும் சொல்லப் போனால் சிறுமிகள் இல்லத்தை விட்டு வெளியேற தூண்டுதலாக அவரது கடமை தவறிய நடவடிக்கை அமைந்திருந்தது எனலாம்.ஆக தம்மீதான குற்றச் சாட்டுக்களை மறைப்பதற்காக ஊடகங்களுக்கு உண்மைத் தகவல்களைக் கொடுக்க சம்பந்தப்பட்டவர் மறுத்ததோடு உண்மைகளை மறைக்க முற்பட்டமையும் தெரியவந்துள்ளது.

இல்லத்தை விட்டு வெளியேறிய சிறுமிகள் மீட்கப்பட்டு மருத்துவ பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட நிலையில் நீதிமன்ற உத்தரவின் பேரில் மீண்டும் அதே இல்லத்துக்கு கொண்டு வரப்பட்டு தங்க வைக்கப்பட்டுள்ளனர். பெண்களை மட்டும் உள்ளடக்கிய புதிய நிர்வாகமும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இத்துடன் சிறுவர் இல்ல விவகாரம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளதா என்றால் அதற்கு பதில் கூற முடியாத நிலையொன்றுள்ளது.காரணம் கைது செய்யப்பட்ட நபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இருப்பினும் கைதடி சிறுவர் இல்ல விவகாரத்தையடுத்து ஆண் பணியாளர்களுக்கு ஆப்பு வைக்கும் வகையில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தீர்மானம் ஒன்றினை எடுக்கப் போவதாக அறிவித்துள்ளார்.

அதாவது சிறுவர் மற்றும் பெண்களைப் பாதுகாக்கும் ஆண்களால் பிரச்சினைகள் ஏற்படக் கூடிய விடயங்களில் பெண் பணியாளர்களை மட்டும் அனுமதிப்பது என்ற தீர்மானமாகும்.

இந்த தீர்மானம் எவ்வளவு தூரம் நடைமுறைக்கு சாத்தியமாகும் என்பது. தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களுடன் ஆராயப்படவில்லை. இருப்பினும் இதனை நடைமுறைக்கு கொண்டு வந்தால் பிரச்சினைகளைக் கட்டுப்படுத்தலாம் என்பது அரசாங்க அதிபரின் கருத்து.



**எஸ்.ஆர். கரன்**

இவ்வாறு கைதடி சிறுவர் இல்ல விவகாரம் எல்லோரையும் படாதபாடு படுத்திவிட் டது என்பதற் கப்பால் சிறுவர் இல்லங் களில் தொடர்ந்தும் முறை கேடுகள் இடம் பெறு வதையும் அதனால் அங் குள்ள வர்களுக்கு பல பிரச்சினைகள் ஏற்படு வதையும் நோக்கும்போது அது அவற் றைத் தடுக்க வேண்டிய அதிகாரிகளின் அசண்டையீனத்தையே பறைசாற்றி நிற்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்



## அருமை

தாயின் அருமை பிள்ளைக்குத்
தெரியும்
உறவின் அருமை தனிமையில்
தெரியும்
குளிரின் அருமை கடும் வெயிலில்
தெரியும்
பணத்தின் அருமை வறுமையில்
தெரியும்
மழையின் அருமை கோடையில்
தெரியும்
மகிழ்ச்சியின் அருமை சோகத்தில்
தெரியும்
வெளிச்சத்தின் அருமை இருளில்
தெரியும்
பெற்ற தாயின் அருமை இறந்த பின்தான்
தெரியும்
படைத்த இறைவனின் அன்பு இல்லாவிட்டால்தான்
தெரியும்

ச.அபிஷன்(நவாலி)
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## வீதியின் விதியாள் என் காதல்

கண்ணாடி வளையல் போட்டு காலிலே கொலுசு போட்டு
காதிலே கம்மல் போட்டு
நடந்து வரும் பெண்ணவள் மெதுவாகப் பேசுகிறாள்
செல்ல மொழி கூறிடுவாள் நடனமாடிக் காட்டிடுவாள்
என் மனதை கொள்ளை கொண்டவள் – என் கால்களை
வீதி ஓரத்தில் காக்க செய்தவள்
இன்று கல்லறையில் காக்க செய்துவிட்டாள்
அரைகுறையாய் இருக்கின்ற நம் நாட்டு வீதியில்
மெதுவாகச் சென்றும் விபத்துக்குள் மாட்டிக் கொண்டாள்
இவ்வரிகளை என் பேனா எழுதும்போதும் – என் கண்ணில்
கண்ணீர்த் துளிகள் – இக் கண்ணீர் துளிகளை
என்னவளிற்கு காணிக்கை ஆக்குகின்றேன்

தாவடியூர் எம்.நித்தி

## இமயம் தொட

கண்களுக்கு
புலப்படுவதெல்லாம்
உண்மையாகிடாது
உன் கண்ணையும் தாண்டி
உண்மை ஒழிந்திருக்கும்
இருள் சூழ்ந்த அறை
எதனாலும் முழுமை பெறாது
ஒரு சிறிய தீபம் போதும்
தீபம் போல்தான் நீ
முழுமையாகிடு...

மாவை நா.கஜேந்திரன்

## நட்பின் பிரிவு


என்றும் என் பெயர் சொல்லும்
உன் உதடுகள்
இன்று அதனை சொல்ல வெறுத்ததேன்?
என்னை மறந்தாயோ நண்பியே

### நட்பு

நட்பிற்கு அந்த வானமும் இணை இல்லை
நட்பிற்கு அந்த பூமியும் இணை இல்லை
நட்பிற்கு அந்த கடலும் இணை இல்லை
என்னுயிர் நண்பியே என்றென்றும்
நீயே நட்பிற்கு இணையடி...

### நட்பின் வலி

நண்பியே...
நீ எனக்காய் வாழ்ந்த காலங்கள்
என் நினைவில் நிசப்தமாய் ஓட
இன்று நீ சொன்ன ஓர் வார்த்தை
என் நெஞ்சை வதைக்கிறது
இனி நான் எனக்காய் வாழ போகிறேன்
அந்த ஓர் நிமிடத்தில் பிரிந்தது நட்பு




கௌசி - பருத்தித்துறை

## உண்மைகள்

நான்
உண்மைகளை
சொல்ல
மறுதலித்தாய்
நீ
மறுதலித்தது
மட்டும் அல்ல
செருப்பால் அடித்தது
போல
சொல்லால்
அடித்தாய் என்
நெஞ்சில்
இப்போது
நீ மறுதலித்த உண்மைகள்
பவனி
வருகிறது
சமுதாயத்
தெருவில்
சில வேளை
நீ நினைக்கலாம்
விதிதான்
வாழ்க்கை
என்று
அது பொய்
ஏனென்றால்
விதி வாழ்க்கை
என்றால்
கடவுள் மோசேயிடம்
கொடுத்திருக்க மாட்டான்
பத்துக்
கட்டளை

உயிரோவியன்



## கலாசார மாற்றம்

இரண்டு பிஞ்சு மனங்களின்
மழலை மொழியின் அர்த்தம்
கூடி ஒன்றாய் பல விடயம் பேச
வேண்டும் என்பதுதான்
இருந்தாலும் பொருட்கள் வாங்கும்
பெற்றோர் மனங்கள் அறியுமா?

அருள் யோன்சன்
கிளிநொச்சி

## மாறாத அன்பு

தாய் தந்தையர்
பிரிந்திருந்தாலும்
ஒருதாய்
பிள்ளைகளின் அன்பு
மட்டும் மாறாது
ஒருவருக்கொருவர்
இப்படி
உறவாடுகின்றனரே

சு.ஜெயரூபன்
பருத்தித்துறை

## பிரிவினை

ஜாதி மதம் இனம்
அறியாத இந்தப்
பிஞ்சு நெஞ்சங்கள்
இன்று கைகோர்த்து
உறவாடினாலும்
நாளை பிரிவினை
என்னும் கூரிய அம்பால்
தாக்கப்படுவார்கள்

கொற்றையூர்
பா.அனு

## வேற்றுமையில் ஒற்றுமை

இனம் மொழி
நிறம் பண்பாட்டினால்
வேறுபட்டாலும்
மனிதன் என்ற ஒற்றுமையில்
குழந்தைகள் இரண்டும்
தமது மழலை மொழிகளில்
கதைக்கின்றனர்

செ.நிவேதா
யாழ்ப்பாணம்

# மௌனத்தின் தேடல் – 150

## அன்புமொழி

மதத்தால்
மொழியால்
இனத்தால் வேறுபட்ட
இரு மழலைகள் இங்கு
யாருக்கும் புரிந்திடாமல்
பேசிக்கொள்ளும் மொழி
அன்பு மொழியோ?

லீலா சிவவடிவேல்
இணுவில் மேற்கு

## அப்பாவைச் சொகுசாய் வைப்போம்

அப்பா முதுகில் அமர்ந்திருந்து
அமைதி காக்க முடியவில்லை
இப்போ நாங்கள் பின்னாலே
இருப்போம் ஒருநாள் முன்னேறி
சொக்கா வாங்கும் அப்பாவை
சொகுசாய் வைப்போம் முன்னாலே
இப்போ இருவர் நாம் சேர்ந்து
சொல்லும் வார்த்தை திடமாக

விஜய றபின்சன்
புன்னை நீராவி

## வாழ்வளியுங்கள்

வளமுடன் வாழ்கின்ற
வசதி படைத்தவர்களே
வகை வகையான
உணவுப்பொதிகளை
தரம் பார்த்து ருசிக்க
நினைக்கின்றீர்கள்
ஒருவேளை உணவினை
உண்ண வழியின்றி
வாடுகின்ற வறியவர்களுக்கு
வாழ்வளிக்க நினையுங்கள்

ய.தருண்
மானிப்பாய்

## மறுபக்கம்

விறுவிறுப்பான உலகிலே
சுறுசுறுப்பான வாழ்வுக்கு
குறும்புக்கார குழந்தைகள்
சிறுதடையாக இருப்பதால்
பொறுப்போடு மார்பில் சுமக்காமல்
வெறுப்போடு முதுகில் சுமக்கின்றீர்கள்
நறுமணம் வீசும் பாசமலர்களாய்
உறுதியான அன்போடு குழந்தைகள்
மாறுபடா அன்பே மறுபக்கம்

அபர்ணா [illegible]

## மலர்வதெப்போ?

இருவேறு இனமக்கள்
அருமைக்குழந்தைகளைப்
பெருமையோடு முதுகில் தாங்கி
விருப்போடு பொருள் எடுக்க
இன மத பேதமறியா
இளஞ்சிறுவர் கைநீட்டி
உறவாடும் இனிய பண்பு
நம் நாட்டில் மலர்வதெப்போ?

துரை
தென்மட்டுவில்

## கடன் தீர்ப்பாய்

அன்பைச் சொரியும் அம்மா
போற்றி வளர்க்கும் அப்பா
கண் இமை காப்பது போல
எங்களைக் காக்கிறீர்களே!
உங்களுக்கு எங்கள்
கடன் செய்திடுவோம்
வையகத்தில் நீங்கள்
வாழ்க வாழ்க

ஆ.ரூபகரன்
யா/மட்டுவில் கமலாசனி
வித்தியாலயம்

## மந்திராலோசனை

ஆரவாரமின்றி
ஆலோசனை கேட்பதில்
தெரிவுக் கவனத்தில்
எதிரும் புதிருமானாலும்
ஊஞ்சலாடும் குட்டி
சுட்டியின் விருப்பம்
மட்டும் வித்தியாசமானது
பட்டியலிலில்லாதது

அரு.கனகராசா

## யோசனை என்ன?

நிறத்தில் வேறுபட்டாலும்
மொழியில் வேறுபட்டாலும்
இனத்தில் வேறுபட்டாலும்
வஞ்சமில்லா குழந்தைகள் நீங்கள்
விந்தையாக நீங்கள்
எதைப் பற்றிப் பேசுகின்றீர்கள்

அ.அன்ரன்
யாழ்ப்பாணம்

## வேலையா குழந்தையா?

பச்சைக் குழந்தையை
பையிலே போட்டு
வேலை உலகம் இதில்
வேகமாக செயற்படும்
உங்களுக்கு முக்கியம்
வேலையா? குழந்தையா?


த.மோகனரூபன்
சுழிபுரம்

## இப்படியும் ஒரு சந்திப்பா?

பலர் கூடும் இடங்களில்
இனம் தெரியாதோர் பெரியோர்
அவர்களின் உதவியுடன்
வந்த உங்களுக்கு
இப்படியும் ஒரு சந்திப்பா?
மோசமடையும் கலியுகத்தில்
இனிவரும் காலங்களும்
இப்படியா?

ச.வனிஸ் டொறிஷா
யாழ்ப்பாணம்

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் –151



### அன்பு வாசகர்களே !


உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 26.04.2013 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளிற்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விக்கிலீக்ஸின் அதிர வைக்கும் அம்பலங்கள்!



ஜூலியன் அஸாங்கே

விக்கிலீக்ஸ் இணையத்தளம் வெளியிட்டு வரும் இரகசிய ஆவணங்கள் இதுவரை அமெரிக்க அரசாங்கத்தின் கண்களில் விரலை விட்டு ஆட்டி வந்தது என்றால் இப்போது இந்திய அரசியலிலும் அது பல அதிர்வுகளை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது.

கடந்த வாரம் விக்கிலீக்ஸ் வெளியிட்ட பல ஆவணங்கள் இந்திய அரசியல் மற்றும் தமிழக அரசியல் சம்பந்தப்பட்டவை. அவை குறிப்பிடும் பல செய்திகள் இந்தியாவின் உள்நாட்டு விவகாரங்களிலும் அரசியலிலும் அமெரிக்கா மிகத் தீவிரமாக தொடர்பு வைத்திருந்தது அம்பலமாகிறது. உலகெங்கிலுமுள்ள அமெரிக்க தூதரகங்கள் உண்மையில் அமெரிக்காவின் உளவு அமைப்புக்களாகத்தான் செயற்பட்டு வருகின்றன. அந்தநாட்டின் ஒவ்வொரு அரசியல் பிரச்சினைகளைப் பற்றி மிகச்சிறிய தகவல்களைக் கூட தூதரக அதிகாரிகள் தாங்கள் நாட்டு அரசாங்கத்திற்கு அனுப்பி வந்திருக்கிறார்கள். அந்தவகையில் ஒவ்வொரு நாட்டையும் பற்றி இலட்சக்கணக்கான பக்கங்களிலான ஆவணங்கள் அமெரிக்கா வசம் உள்ளன. அந்த ஆவணங்களைத் தான் விக்கிலீக்ஸ் கைப்பற்றி இப்போது வெளியிட்டு வருகிறது.

ஈழப்பிரச்சினையில் பலருடைய நிலைப்பாடுகள் கடந்த காலத்தில் எப்படியிருந்தன என்பதற்கு விக்கிலீக்ஸ் பல சுவாரஸ்யமான உண்மைகளை வெளிப்படுத்துகிறது. இப்போது ஈழத்தை மலரச் செய்யப்போகிறவராகவும் ஈழத்தாயாகவும் வர்ணிக்கப்படும் தமிழக முதல்வர் ஜெயலலிதா 1991இல் ராஜீவ் காந்தி கொலைக்குப் பின்பு புலிகளை தமிழகத்திலிருந்து எந்தஅளவுக்கு துடைத்தெறிய வேண்டும் என்பதில் ஆவேசம் காட்டினார் என்பதை அது வெளிப்படுத்துகிறது. அப்போது சென்னையிலிருந்த அமெரிக்கதூதரக அதிகாரி ஆன்ட்ரூ சின் கின் அமெரிக்காவுக்கு அனுப்பிய செய்தியில் ஜெயலலிதா புலிகளைத் தமிழகத்திலிருந்து வேரறுப்பதில் ஒரு இரும்புப் பெண்மணியாகச் செயற்பட்டு வருகிறார் என்றும் தமிழகத்தின் முக்கிய பொறுப்பு வகித்த அதிகாரி ஒருவரிடம் புலிகளை அழிக்க எந்த நடவடிக்கைக்கும் தயங்கவேண்டாம். தேவைப்பட்டால் புலிகளோடு தொடர்புடையவர்களை போலி என்கவுண்டரில் கொல்லவும் செய்யலாம் என்றும் உத்தரவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய முன்னாள் தூதரும் ராஜீவ் காந்தியின் ஆலோசகருமான ஜி.பார்த்தசாரதி சொன்ன ஒரு கருத்தையும் விக்கிலீக்ஸ் சுட்டிக்காட்டுகிறது. கருணாநிதி கடந்த காலத்தில் விடுதலைப்புலிகளோடு கருத்து வேறுபாடு கொண்டிருந்தபோதும் 1989 இல் ஆட்சிக்கு வந்ததும் புலிகளின் ஆதரவாளராக மாறினார் என்றும் தமிழகத்தில் புலிகளை வளரவிட்டதே அவர் செய்த தவறு என்றும் ஆனால் ஜெயலலிதா புலிகளை முற்றாக ஒழித்துக்கட்டுவதன் மூலம் தனது சட்டபூர்வ கடமையை சிறப்பாக நிறைவேற்றி வருவதாக பார்த்தசாரதி கூறியதை விக்கிலீக்ஸ் தெரிவிக்கிறது.

ஆனால் விக்கிலீக்ஸ் 2007 ஆம் அண்டு மார்ச் 29ஆம் திகதி தமிழக மீனவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதற்கு காரணம் விடுதலைப்புலிகள்தான் என அப்போதைய தமிழக முதல்வர் கருணாநிதி சட்டசபையில் தெரிவித்ததை இங்குள்ள அமெரிக்க தூதரகம் பதிவு செய்து வோஷிங்டனுக்கு செய்தி அனுப்பியதையும் அது சுட்டிக்காட்டுகிறது. அத்தோடு அந்த ஆவணம் நிற்கவில்லை. கருணாநிதி இலங்கை அரசுக்கு இந்திய அரசு இராணுவ உதவியளிப்பதை ஒருபோதும் தி.மு.க. ஆதரிக்காது என அப்போதே எச்சரித்ததையும் சுட்டிக்காட்டுகிறது. இந்தத் தகவல் அனுப்பப்பட்ட காலத்தில்தான் விடுதலைப்புலிகளின் கப்பல்களை இலங்கை இராணுவம் நடுக்கடலில் வைத்து அழிப்பதற்கு இலங்கை இராணுவத்திற்கு அமெரிக்க இராணுவம் உதவி செய்ததை நாம் நினைவுபடுத்திக்கொள்வது நல்லது.

மேலும் விக்கிலீக்ஸ் 2011 இல் வெளியிட்ட சில ஆவணங்களில் 2007 போரில் இலங்கை அரசாங்கம் இந்தியா தனக்குக் கொடுத்த ரேடார்கள் தனக்கு போதவில்லையென்று அமெரிக்காவிடம் ரேடார்களை அளித்து உதவுமாறு கேட்டதையும் வெளிப்படுத்துகிறது. 2007 மார்ச் மாதத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தின் மீது புலிகளால் நடத்தப்பட்ட வான்வெளி விமானத் தாக்குதல்களால் இந்தியாவிடம் இருந்து பெறப்பட்ட எம்.ஐ. ரக ஹெலிகொப்டர்களும் சேதமடைந்தன. இந் தியா அளித்திருந்த இரு பரிமாண ரேடார்களால் புலிகள் வந்ததை கண்டறிய முடியவில்லை. எனவே சீனாவிடமிருந்த முப்பரிமாண ரேடார்கள் பெறுவதாக முடிவு செய்யப்பட்டுள்ளதாக கோத்தபாய ராஜபக்ஷ அமெரிக்க தூதரிடம் தெரிவித்ததையும் அதே சமயம் இந்தியாவிற்குத் தெரியாமல் இதுபோன்ற நடவடிக்கைகளில் இறங்கக்கூடாது என கோத்தபாய ஒப்புக்கொண்டதையும் அந்தத் தகவல் தெரிவிக்கிறது.

மேலும் இலங்கையின் கடற்பரப்பைக் கண்காணிப்பதற்காக அமெரிக்கா கொடுத்த ரேடார்களை வடபகுதியில் நிறுவக்கூடாது என்று இலங்கை அரசாங்கத்திற்கு ஒருமுறை இந்தியா ஆட்சேபம் தெரிவித்ததையும் இலங்கை அதற்கு உடன்படாததால் இந்தியா தனது எதிர்ப்பைக் கைவிட்டுவிட்டதையும் விக்கிலீக்ஸ் சுட்டிக்காட்டுகிறது. எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பாக 2008 இல் விடுதலைப்புலிகளுக்கெதிரான இறுதிப்போர் நின்றுவிடாத வகையில் சர்வதேச நெருக்கடிகளிலிருந்து இலங்கை அரசாங்கத்தை இந்திய அரசாங்கம்தான் காப்பாற்றியது என்பதற்கான ஆதாரங்களையும் விக்கிலீக்ஸ் வெளியிட்டுள்ளது. 2009 இல் இலங்கைக்கு பயணம் மேற்கொண்ட அப்போதைய அமைச்சர் பிரணாப் முகர்ஜி பொதுமக்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் பட்சத்தில் போரைத் தொடரலாம் எனக் கூறியதாக அமெரிக்கத் தூதரிடம் இந்திய துணை தூதர் சொன்னதையும் விக்கிலீக்ஸ் அப்போதே வெளியிட்டது.

இதன்மூலமாக புலிகளை ஒடுக்குவதில் இந்தியா, இலங்கை, அமெரிக்கா ஆகிய மூன்று நாடுகளுமே எவ்வாறு கூட்டாகச் செயற்பட்டு வந்திருக்கின்றன என்பதை நாம் தெள்ளத் தெளிவாகப் புரிந்துகொள்ளலாம்.


தமிழக அரசியலில் மட்டுமல்ல இந்திய தேசிய அரசியலிலும் விக்கிலீக்ஸ் தொடர்ந்து புயலைக் கிளப்பி வருகிறது. ஏற்கனவே 2011 இல் அது வெளியிட்ட ஒரு ஆவணத்தில் பா.ஜ.க. அணுசக்தி ஒப்பந்த விவகாரத்தில் எப்படி இரட்டை நிலைப்பாட்டுடன் வேடம் போடுகிறது என்பதை வெளிப்படுத்தியது. 2009 ஆம்ஆண்டு மே 13ஆம் திகதி மக்களவை தேர்தல் முடிவுகள் வருவதற்கு முந்திய தினத்தில் அமெரிக்க தூதரக உயர் பொறுப்பிலிருந்து பீட்டர் பாலிக அதவானியைச் சந்தித்தார். அவரிடம் அத்வானி பா.ஜ.க. ஆட்சியமைத்தால் அமெரிக்கா-இந்தியா இடையிலான அணுசக்தி ஒப்பந்தத்திற்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையிலான எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாது எனக்கூறினாராம். 2009 இல் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி இரண்டாவது முறையாக ஆட்சிப்பொறுப்பேற்றபோது பிரணாப் முகர்ஜிக்கு நிதித்துறை வழங்கப்பட்டதை கேள்விப்பட்டு அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளின்டன் அதிர்ச்சிக்கு ஆளானாராம். மோன் டெக்சின் அலுவாலியா அல்லது ப.சிதம்பரத்திற்குத்தான் நிதித்துறை அளிக்கப்படவேண்டும் என்று அமெரிக்க அரசாங்கம் விரும்பியது. இந்த முடிவு குறித்து தனது தூதரகத்திற்கு ஹிலாரி கிளின்டன் எழுப்பிய கேள்விகளை விக்கிலீக்ஸ் வெளியிட்டது. இந்திய அரசாங்கத்தின் முக்கிய பொறுப்புக்களில் சாதகமாக யார் இருக்கவேண்டும் என்பது வரை அமெரிக்க தீர்மானமான தலையீடுகளை செய்து வந்திருக்கிறது என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணம்.

கடந்த வாரம் வெளிவந்த பல விக்கிலீக்ஸ் தகவல்கள் பலருக்கும் பெரும் சங்கடங்களை ஏற்படுத்தியிருக்கின்றன. 1970 களில் ராஜீவ்காந்தி சுவீடன் நாட்டுக் கம்பனியிடமிருந்து இந்திய இராணுவத்திற்கு ஜெட் விமானங்கள் வாங்க நடந்த பேரத்தில் இடைத்தரகராகச் செயற்பட்ட விவகாரம் புயலை ஏற்படுத்தி வருகிறது. அதேபோல இந்திராகாந்தியின் இன்னொரு மகனான சஞ்சய்காந்தி அவர் பெரும்பான்மை பங்குகளை வைத்திருக்கும் மாருதி நிறுவனத்தின் சார்பாக பிரிட்டிஷ் ஏர் கோர்ப்பரேசனுடன் வர்த்தக நடவடிக்கைகளில் ஏஜென்டாக செயற்பட்டதை வெளிப்படுத்தியிருக்கிறது. நெருக்கடி நிலை காலத்தின்போது இந்திராகாந்தியின் வீட்டிலேயே ஒரு அமெரிக்க உளவாளியை 1975- 1977 வரை அமெரிக்கா வைத்திருந்த அதிர்ச்சித் தகவலையும் விக்கிலீக்ஸ் வெளியிட்டுள்ளது. மேலும் அப்போது நெருக்கடி நிலையை செயற்படுத்துவதில் யாரெல்லாம் முக்கிய பங்குவகித்தார்கள் என்பதையும் ஏ.கே. அன்டனி போன்றவர்கள் சஞ்சய் காந்தியை எதிர்த்ததையும் அமெரிக்கா தன் உளவாளிகளின் மூலம் தெரிந்து வைத்திருந்தது. நெருக்கடி நிலையின்போது இந்தியாவில் அமெரிக்காவின் செயற்பாடுகள் காங்கிரசோடு நிற்கவில்லை. அப்போது முக்கிய எதிர்க்கட்சித் தலைவரும் அமெரிக்க எதிர்ப்பாளரும் சோசலிசக் கொள்கைகளைப் பேசுபவருமான ஜோர்ஜ் பெர்னாண்டஸ் மத்திய அரசுக்கெதிராக சீர்குலைவு நடவடிக்கைகளில் ஈடுபட சி.ஐ.ஏயிடம் நிதியுதவி கோரினாராம்.

அதேபோல நெருக்கடி நிலையை அப்போதைய தி.மு.க அரசு எதிர்த்தபோது மத்திய அரசுக்கும் அதற்கும் கடும் மோதல் ஏற்பட்டது. அந்தச் சமயம் தொழிலாளர் மற்றும் வீட்டு வசதித்துறை அமைச்சராக இருந்த கே.ராஜாராம் அமெரிக்க தூதரிடம் தமிழகம் இந்தியாவிலிருந்து தனியாகப் பிரிந்து போக விரும்பினால் அதற்கு அமெரிக்கா உதவுமா என்று கேட்டதாக விக்கிலீக்ஸ் கூறுகிறது. இந்திராகாந்தியை சோவியத் ரஷ்யா ஆதரிப்பதால் அதற்கெதிராக ராஜாராம் இந்த உதவியைக் கேட்டாராம்.

என்ன தலைசுற்றுகிறதா? இந்திய அரசியலைப்பற்றி, தமிழக அரசியலைப்பற்றி நம்மைவிட அமெரிக்காவுக்குத்தான் நன்கு தெரியும் என்பது மட்டும் நன்றாகப்புரிகிறது. இப்போது விக்கிலீக்ஸ் வெளியிட்டு வரும் தகவல்கள் எல்லாம் பொய் என்று காங்கிரஸ் புலம்ப ஆரம்பித்திருக்கிறது. விக்கிலீக்ஸை அது மத்திய கணக்கு தணிக்கைக் குழுவைச் சித்திரிப்பது போல சித்திரித்து வருகிறது. லண்டனிலுள்ள ஈகோடார் தூதரகத்தில் சரணடைந்து வாழும் விக்கிலீக்ஸின் தலைவர் ஜூலியன் அசாஞ்சே காங்கிரசுக்கு எதிராகப்பிரசாரம் செய்து ராகுல்காந்திக்கு எதிராக அடுத்த தேர்தலில் நிற்கவா போகிறார்?

**மனுஷ்ய புத்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஆவது திருத்தத்தை நீக்கியபின் வடக்கில் தேர்தலை நடத்துக

## குணதாச அமரசேகர கோரிக்கை

13 ஆவது அரசமைப்புத் திருத்தத்திற்கு சமாதி கட்டிவிட்டே அரசு வடமாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் வலியுறுத்தியுள்ளது.

அதேவேளை 13 ஐ நீக்காது அரசு தேர்தலுக்குச் செல்லுமானால் விடுதலைப் புலிகளின் தாயகக் கனவு நிறைவேறிவிடும் என்றும் அவ்வமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

செப்ரெம்பர் மாதத்தில் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள வடமாகாண சபைத் தேர்தல் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது,

அரசமைப்பிலிருந்து 13 ஆவது திருத்தத்தை நீக்குமாறு நாம் பல தடவைகள் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளோம். ஆனால், இவ் விடயத்தில் அரசு இன்னும் உத்தியோகபூர்வ அறிவிப்பை விடுக்காது மௌனம் காத்து வருகின்றது. இந்நிலையில் வடக்குத் தேர்தலை செப்ரெம்பரில் நடத்துவதற்கும் அரசு உத்தேசித்துள்ளது. இது பயங்கரமான செயலாகும்.

13 ஆவது அரச்மைப்புத் திருத்தத்தை நீக்காது அரசு வடக்குத் தேர்தலை நடத்துமானால் அதன் பின்னர் இறுதிக் கட்ட யுத்தத்தை விட பயங்கரமான சவால்களைச் சந்திக்க நேரிடும் அபாய நிலை ஏற்படும். எனவே, வடக்குத் தேர்தல் அறிவிப்பை விடுப்பதற்கு முன்னர் 13 ஒழிப்பு அறிவிப்பை அரச தரப்பிலிருந்து நாம் எதிர்பார்க்கின்றோம்.

அரசமைப்பில் மாற்றம் கொண்டுவரப்படவுள்ளது என செய்திகள் வெளியாகியுள்ளன. இந்த சீர்திருத்தத்தின்போது 13 இற்கு முடிவு கட்டப்படும் என நாம் நம்புகின்றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# மின்கட்டண உயர்வு தவிர்க்க முடியாதது

## அமைச்சர் கெஹலிய

(கொழும்பு)

சகல கிராமங்களிலும் அனைவருக்கும் மின்சாரம் என்ற திட்டம் அமுல்படுத்தப்படுவதாலும் நாட்டில் மின்வெட்டு அமுல்படுத்தப்படாத காரணத்தினாலும் மின் கட்டண உயர்வைத் தவிர்க்க முடியாதுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் தகவல் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியல்லாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோது ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இங்கு அமைச்சர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

நாட்டின் தேவைக்கு ஏற்ப மின் உற்பத்தி நடைபெறாத நாடுகளில் மின்சார வெட்டு அமுல்படுத்தப்படுகின்றது. ஆனால், இலங்கையில் மின்வெட்டு இடம்பெறுவதில்லை.

35 சதவீத நீர் மின்சார உற்பத்தியை இலங்கை மின்சாரசபை எதிர்பார்த்தது. ஆனால், 16 சதவீத நீர் மின்சாரமே தற்போது கிடைக்கின்றது.

அனல் மின் நிலையங்கள் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்வதால் பாரிய செலவு ஏற்படுகின்றது. இதனால் நிலக்கரி மின் உற்பத்தி மற்றும் காற்றாடி மின் உற்பத்திகளை ஊக்குவிக்க அரசு கவனம் செலுத்தி வருகின்றது.

இந்த கட்டண உயர்வு மாற்ற முடியாததொரு தீர்மானமல்ல. சாதகமான ஒரு நிலை உருவாகினால் கட்டணங்கள் மறு சீரமைக்கப்பட இடமுண்டு என்றார். (அ-2)

# ஆஸி. பயணித்த 61 பேர் கிழக்கு கடலில் கைது

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா சென்று கொண்டிருந்த 61 இலங்கையரைக் கடற்படையினர் கடந்த 17 ஆம் திகதி கிழக்கு கடற்பகுதியில் வைத்து கைது செய்துள்ளனர்.

10 குழந்தைகள், 8 பெண்கள் உட்பட 61 பேரும் ஆழ்கடலில் வள்ளத்தில் பயணித்துக் கொண்டிருந்தபோதே கடற் படையினரால் கைது செய்யபப்பட்டனர்.

மட்டக்களப்பு கடற்படை தளத்திலிருந்து விரைந்த கடற்படையினரே இவர்களைக் கைது செய்துள்ளதாக கடற்படையின் பேச்சாளர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர்களில் 60 தமிழர்களும் ஒரு சிங்களவரும் இருப்பதாகவும் இவர்கள் திருகோணமலை, கிளிநொச்சி ஆகிய பிரதேசங்கீளைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்டவர்கள் திருகோணமலை துறைமுக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் கைது செய்யப்பட்டவர்களுள் 4 பேர் முன்னாள் புலி உறுப்பினர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-2)

# மின் கட்டணங்களைக் குறைக்க நடவடிக்கை எடுங்கள்

## அமைச்சர்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை

(கொழும்பு)

நாட்டில் அசாதாரணமாக மின்சாரக் கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ளதாகவும் இதனைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் அமைச்சர்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அண்மையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

அதில் மக்களுக்கு நிவாரணம் வழங்கக் கூடிய வகையில் மின்சாரக் கட்டணங்கள் திருத்தி அமைக்கப்பட வேண்டுமென தெரிவித்துள்ளனர். எதிர்வரும் அமைச்சரவைக் கூட்டத்தின்போது இது தொடர்பில் விரிவாக ஆராயப்படவுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

அத்துடன் அசாதாரணமாக மின்சாரக் கட்டணம் உயர்த்தப்பட்டிருப்பதனால் மக்கள் மத்தியில் செல்ல முடியாத நிலைமை் ஏற்பட்டுள்ளதாக சில ஆளும் கட்சி அமைச்சர்கள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவிடம் முறைப்பாடு செய்துள்ளனர். (அ-2)

# தனியார் பேருந்துகளில் முற்கொடுப்பனவு அட்டை

(கொழும்பு)

தனியார் பேருந்துகளில் கட்டணங்களை செலுத்தும் பணத்திற்குப் பதிலாக முற்கொடுப்பனவு அட்டையை பயன்படுத்தும் திட்டத்தை செயற்படுத்தவுள்ளதாக இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டத்தை கொழும்பு ஹோமாகம 138 ஆம் மார்க்க இலக்க பேருந்துகளில் இருந்து ஆரம்பிக்கவுள்ளதாக அச் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன தெரிவித்துள்ளார்.

இந்த மார்க்கத்தில் முதல் 6 மாத காலத்திற்கு அதனை செயற்படுத்தி பின்னர் மேல் மாகாணத்திலும் அதனை தொடர்ந்து நாடு பூராகவும் செயற்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளோம் எனவும் சங்கம் தெரிவித்துள்ளது.

பேருந்துகளில் கட்டணங்களை செலுத்தும்போது பணத்திற்குப் பதிலாக முற்கொடுப்பனவு அட்டையை பயன்படுத்தும் திட்டத்தை எதிர்வரும் மே மாதத்தில் இருந்து ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளதாகவும் இதற்கென சம்பந்தப்பட்ட தரப்பினர்களுடன் ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன. (அ-2)

# சிறுமியை துஷ்பிரயோகம் செய்த இளைஞர் ஒரு வருடத்தின்பின் கைது

(யாழ்ப்பாணம்)

பாடசாலைச் சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்திற்குள்ளாக்கிய இளைஞரொருவர் ஒருவருடத்திற்கு பின்பு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இப் பாலியல் துஷ்பிரயோகச் சம்பவம் கடந்த வருடம் பங்குனி மாதப் பகுதியில் பருத்தித்துறையில் இடம்பெற்றுள்ளது.

அல்வாய் வட மேற்கினைச் சேர்ந்த 14 வயது நிரம்பிய பாடசாலை சிறுமியை அல்வாய் கிழக்கைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞர் பாலியல் துஷ்பிரயோகத்திற்குள்ளாக்கியுள்ளார்.

இப்பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பில் பாதிக்கப்பட்ட சிறுமியின் குடும்பத்தினரால் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வந்தபோதிலும் சந்தேக நபர் தொடர்பில் சரியான தகவல்கள் வழங்கப்படாமையினால் சந்தேக நபரை உடனடியாக கைது செய்ய முடியவில்லை எனவும் அவர் சிறிது காலம் தலைமறைவாகியிருந்தார் எனவும் பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் கடந்த 13 ஆம் திகதி சந்தேக நபரான அல்வாய் கிழக்கைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞர் இனங்காணப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பாலியல் குற்றவாளி பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ-4)

# பரீட்சை மீளாய்வுக்கான விண்ணப்பம் கோரல்

க.பொ.த. சாதாரணதர பரீட்சை 2012 இன் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின. இப்பரீட்சை மீளாய்வுக்கான விண்ணப்பங்களை மாணவர்கள் எதிர்வரும் மே மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதற்கமைவாக பாடசாலை பரீட்சார்த்திகள் அதிபர் மூலமும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் நேரடியாகவும் பரீட்சைகள் திணைக்களத்திற்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (அ-2)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமராட்சி உயில்கலை இலக்கிய சங்கத்தின் ஏற்பாட்டில் கலை இலக்கிய சந்திப்பொன்று அண்மையில் வதிரி வடக்கு மெ.மி.த.க.பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. இவ் ஒன்றுகூடலில் இடம்பெற்ற பூத்திடும் பனந்தோப்பு எனும் நூலின் அறிமுக நிகழ்வின்போது...



# மாமன்னன் சங்கிலியன்

21



**ஊ**டுபோக்குவரி ஒழுங்காக வசூலிக்கப்பட்டு வருகின்றன. பெறப்படும் லாஞ்சினைப்பேறு அரசிறையில் ஒழுங்காகக் கட்டப்படுகிறது. லாஞ்சினைப்பேறு குறித்து



சங்கிலியன் அரண்மனை மாளிகை

மன்னர் சமூகத்திற்கு ஒரு விண்ணப்பம்... என்ற நீலகண்டனை சங்கிலி நிமிர்ந்து பார்த்தான்.

"என்ன?"

"லாஞ்சினை வருவாயில் இரண்டு சதவீதம் தருகிறீர்கள். நிர்வாகச்செலவிற்கு அது போதுமானதல்ல... பணியாளரின் ஊதியம் அதிகரிக்க வேண்டியுள்ளது"

நீலகண்டனின் கோரிக்கை நியாயமாகப்பட்டது.

"ஒரு வீதம் அதிகரித்து விடுகிறேன்..."

சங்கிலி மன்னனின் வன்னி திக்விஜயம் வெற்றிகரமாக அமைந்தது. அத்திக்விஜயத்தில் வன்னியர்கள் எதுவிதமான எதிர்ப்பும் காட்டவில்லை. மன்னனையும் பரிவாரங்களையும் மனநிறைவோடு வரவேற்று உபசரித்தனர். பனங்காமத்தில் ஒரு பிரச்சினையை எதிர்கொள்ள

## வன்னி திக்விஜயம்

நேர்ந்தது.

பனங்காமத்தின் ஆட்சியில் பெரிதான பிரச்சினைகளில்லை. முதலியார்களும் அவர்களின் கீழ் பண்டாரப்பிள்ளை; கங்காணி, உடையார், தலையாரி என்போர் நிலவரி, தானியவரி, இனவரி என்பனவற்றைக் கிரமமாக வசூலிக்கின்றனர். ஒரு முதலியார் மட்டும் பிரச்சினை தருகிறார்.

"இந்தப் பனங்காமத்தை தாபித்தவர் உத்துங்கராஜ வன்னிமை... அவர் வழியில் வந்தவர் நீங்கள். உங்களால் ஒரு முதலியாரைக் கட்டுப்படுத்த முடியவில்லையா? யார் அந்த முதலியார்? ஓமந்தையர்கோனா?"

"அறிந்திருக்கிறீர்களே? அவர் வயதில் என் தந்தையைப் போன்றவர். அதனால்..."

அதேவேளை தவில் மேளச் சத்தம் எழுந்தது.

"ஓமந்தையர் கோனுக்கு ஆயுள் நூறு. இப்போதுதான் பேசினோம். தங்களைக் காண வருகிறார். வரும்போது தமக்குரிய பதவிச் சின்னங்களான வில்லுக்குஞ்சம், பாவாடை, கொடி,தாரை, தம்பட்டம், முரசு, தவில், நாதஸ்வரம் என்பனவற்றுடன் ஆடம்பரமாக வருகிறார். எங்கு விஜயம் செய்யும் போதும் பதவிச்சின்னங்களை அணியாது விடார் என்ற பனங்காம வன்னியனை ஆழமாக நோக்கிய மன்னன், அதில் தவறில்லை பொதுமக்களிடம் இருந்து தன்னை அதிகாரிகள் வேறுபடுத்தத்தான் வேண்டும். அவருடைய பிரச்சினை என்ன?" என்று கேட்டான்.

தன்னுடைய கிராமத்தை தனியாக்கி தன்னை அதற்கு வன்னிமையாக்க வேண்டுமாம்.

"உங்களுடைய ஆள்பரப்புப் பெரிதுதானே? இரண்டாகப்பிரித்தால் என்ன?"

"மன்னர் விருப்பம்"

பிரச்சினை இவ்வளவு இலகுவாகத் தீரும் என கனகராஜன் நினைக்கவில்லை. பனங்காம வன்னிமை இவ்வளவு இலகுவில் தனது பிரதேசத்தை விட்டுக்கொடுப்பானென அவன் எண்ணவில்லை.

அந்த மண்டபத்திற்கு ஓமந்தையர்கோன் வந்தார்.

"வருக வன்னியரே..." என்ற சங்கிலியின் அழைப்பைக் கேட்டு ஓமந்தையர்கோன் திகைத்துப்போனார்.

"என்னை நீங்கள் ஒன்றும் கேலி செய்யவில்லையல்லவா?"

"இல்லை. ஆனால், ஒரு திருத்தம். நீங்கள் இன்றிலிருந்து வன்னிமையாக்கப்படுவீர்கள். பழுகாம வன்னிமை மாவன்னி ஆக்கப்படுவார். நீங்கள் அவருக்குட்பட்டே வன்னிமைத் தொழில் ஆற்ற வேண்டும். காலகதியில் உங்கள் பிரிவு தனி வன்னிமையாக்கப்படும்" கனகராஜனுக்கு மன்னனின் திட்டம் புரிந்தது. ஓமத்தையர்கோன் ஒப்புக்கொள்வதைத் தவிர வேறொன்றும் பேச வில்லை. பேச முடியவில்லை.

பலவற்றையும் பேசிக்கொண்டார்கள். இராச்சியத்தின் பல அம்சங்களும் அலசப்பட்டன... இரவு படரத் தொடங்கி இருந்தது. விடைபெறும் கட்டத்தில் பழுகாமம் வன்னிமை விண்ணப்பித்தான்.

"மன்னா... உங்களுடன் தனிமையில் சில பேச வேண்டும். இரகசியமானது; அவசியமானது"

சங்கிலி ஒத்துக்கொண்டான். பழுகாமம் வன்னியன் பேசினான்:

"தாங்கள் வன்னி திக்விஜயம் மேற்கொண்டு ஒரு திங்களாகின்றது. நாட்டின் நிர்வாகத்தை மகாமந்திரி கவனிக்கிறார். மாற்றங்கள் நிகழ்ந்திருக்கலாம். இதைச் சொல்வதற்கு மன்னியுங்கள். யாரையும் நம்புவதற்கில்லை. போர்த்துக்கேயருக்கு உப்புமாலில் கொள்வனவு வியாபாரம் செய்ய நீங்கள் அனுமதித்தீர்கள். அவர்கள் நாட்டிற்கு இறங்கி வியாபாரம் செய்ய உங்கள் தமையனார் மகாமந்திரி உங்கள் சமூகமின்மையைச் சாதகமாக்கி அனுமதி வழங்கியுள்ளாராம். ஒரு களஞ்சியசாலை கட்ட அனுமதி கேட்கினமாம். அதுக்கும் நீங்கள் இல்லாத வேளையில் அனுமதி கிடைக்கலாம். ஆதலால் அரசே, வன்னி திக்விஜயம் போதும் நிறுத்திக்கொள்ளுங்கள் இராசதானிக்கு உடன் திரும்புங்கள்..."

நாட்டிற்கு உடன்திரும்பும்செய்தி கேட்டு கனகராஜன் திகைக்கவில்லை.

(தொடரும்)

---

# தகர்ந்துபோன தீர்மானங்கள்!

புலம்பெயர் சமூக வரலாற்றில் முதன்முறையாக தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை உருவாக்கிய பெருமை கனடாவாழ் தமிழ் மக்களையே சாரும்.

அத்துடன் அவ்வாறானதொரு சந்தர்ப்பத்தைக் கொடுத்து கனடியத் தமிழர்களை ஓர் அரசியல் சமூகமாக நிறுவியதில் என்.டி.பி. கட்சியினருக்கு கணிசமான பங்கு உண்டு. அதிலும் குறிப்பாக என்.டி.பி. கட்சியின் மறைந்த தலைவர் ஜாக் லெயிற்றனுக்கு மிக முக்கிய பங்குண்டு.

இக்கட்சியின் தேசிய மாநாடு கடந்த வாரம் வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் மொன்றியல் நகரில் நடைபெற்றது. இலங்கையில் இடம்பெற்ற போரின் போது நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலைகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் எதிர்த்துக் கண்டனத் தீர்மானங்கள் இன்று உலகம் முழுவதும் நிறைவேற்றப்படுகின்றன.

பலநாட்டு அரசுகள் அரசியற் கட்சிகள், மனித உரிமை அமைப்புகள், தனி மனித ஆளுமைகள் இத்தகைய செயற்பாட்டில் தங்களைப் பகுதியாகவோ, முழுமையாகவோ ஈடுபடுத்தி வருகிறார்கள். தமிழக சட்டசபையில் ஈழத்தமிழ் மக்களுக்கு ஆதரவான தீர்மானம் அனைத்துக் கட்சிகளின் ஒப்புதலுடன் (தமிழக சட்டசபை வரலாற்றிலேயே அனைவரும் ஒருமனதாக ஆதரித்த விடயம்) நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்நிலையில் புலம்பெயர் தமிழ்மக்கள் அதிகம் வாழ்ந்து கொண்டிருக்கும் நாடான கனடாவில் என்ன நடக்கும் என்பது தற்போது உலகத் தமிழ் மக்கள் எதிர்பார்த்திருக்கும் முக்கிய விடயங்களில் ஒன்றாக உள்ளது.

அவ்வாறான ஒரு சூழ்நிலையில் கனடாவில் வாழும் சிறுபான்மைச் சமூகங்களுக்கு ஆதரவளித்தும் உலகளவில் அடக்கப்படும் மக்களது போராட்டங்களை ஆதரித்து வரும் தேசியக் கட்சியான என்.டி.பி கட்சியிடமிருந்து பாதிக்கப்பட்ட ஈழத்தமிழர்கள் சார்பாக ஏற்கனவே உலகளவில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானங்களை மேலும் பலப்படுத்தக்கூடிய வகையில் நிறைவேற்றப்படும் என கனடியத் தமிழர்கள் முழு நம்பிக்கையுடன் எதிர்பார்த்திருந்தார்கள்.

இதற்கு முன்னோடியாக என்.டி.பி கட்சியின் ஸ்காபுறோ- ரூஜ்ரீவர் (தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினரது தொகுதி) 'தொகுதிக்கிளையின் நிர்வாக சபையைத் தேர்வு செய்வதற்காக அண்மையில் நடைபெற்ற பொதுக் குழுக் கூட்டத்தில் ஈழத் தமிழர்கள் பிரச்சினை தொடர்பான தீர்மானம் ஒன்று இப்பிரதேச தமிழ் என்.டி.பி உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டிருந்தது.

அத்தீர்மானமானது இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக நடைபெற்ற அனர்த்தங்கள் பற்றிய அனைத்துலக விசாரணையைக் கோருகின்றது. தமிழ் மக்களுக்கான சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கின்றது. தமிழ் மக்கள் தங்களது அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதற்கான ஐக்கிய நாடுகள் அவையின் மேற்பார்வையிலான சர்வஜன வாக்கெடுப்பைத் தமிழர் தாயகத்தில் கோருகின்றது. இந்த ஆண்டு கொழும்பில் நடைபெறவுள்ள பொது நலவாய நாடுகளின் உச்சிமாநாட்டை, கனடாவைப் பகிஷ்கரிக்குமாறு கோருகிறது.

அன்றைய பொதுக்கூட்டத்தில் ஏகமனதாக ஒப்புக் கொள்ளப்பட்ட இத்தீர்மானங்




கள் மொன்றியலில் இடம் பெறுகின்ற தேசிய மாநாட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு நிறைவேற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையிலேயே முன்னெடுக்கப்பட்டது. இத்தீர்மானத்தின் அவசர, அவசிய நிலை கருதி, என்.டி.பி கட்சியின் தீர்மான நிறைவேற்றுக் குழுத் தலைமையின் முழு ஆதரவைத் திரட்ட எமது இத்தீர்மான வடிவத்தை முன்னுரிமைப்படுத்துவதில் எமது தமிழ் பாராளுமன்ற உறுப்பினரின் முழு ஆதரவும் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் கட்சி மாநாட்டுக்காக மொன்றியல் சென்ற என்.டி.பி தமிழ் உறுப்பினர்கள் தமது பங்களிப்புக்காகக் காத்திருந்தனர். ஆனால், அத்தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கான வாய்ப்பு எட்டப்படவில்லை.


(தொடரும்)

-இணையம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரை மாத இராசி பலன்கள்

# 14.04.2013-14.05.2013



## துலாம்

சித்திரை 3,4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்

கவனத்துடன் செயற்பட்டால் காரியங்களில் வெற்றி!

எதிர்கால சிந்தனைகளிலேயே எப்பொழுதும் மூழ்கியிருக்கும் துலாம் இராசி நேயர்களே!

## இது ஒரு உன்னதமான காலம்!

உங்களுக்கு இந்த சித்திரைமாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, மாதத்தொடக்கத்திலேயே ஜென்ம இராகுவும் ஜென்ம சனியும் உங்கள் இராசியிலேயே இருப்பதாலும் சப்தம ஸ்தானத்தில் கேது பலம் பெற்றிருப்பதாலும் எண்ணங்கள் எளிதில் நிறைவேற இறைவழிபாட்டை மேற்கொள்ள வேண்டிய மாதமாகவே இருக்கின்றன.

தனாதிபதி செவ்வாயும் வலிமை இழந்திருக்கிறார். ராசிநாதன் சுக்ரனும் வலிமை இழக்கிறார். எனவே, ஆரோக்கியத்திலும் கவனம் தேவை. அன்றாட வாழ்க்கையின் ஒவ்வொரு செயற்பாடுகளிலும் கூடுதல் கவனம் தேவை. அப்பொழுதுதான் அமைதி காண இயலும். செவ்வாய், சனியின் பார்வை காலமாக இருப்பதால் வீண் வம்புகள் வீடு தேடி வரலாம். விரயங்கள் கூடலாம்.

இனம்புரியாத கவலை மேலோங்கும் இந்த நேரத்தில், மனம்போன போக்கில் செல்லாமல் மகத்தான யோசனைகளை சொல்லும் சான்றோர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது. அஷ்டமத்தில் உள்ள குரு மாறும் வரை சற்று பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும். அதன்பிறகு படிப்படியான முன்னேற்றங்களை நீங்கள் சந்திக்க இயலும். குறிப்பாக ஜென்ம சனியின் ஆதிக்கம் நடைபெறுகின்ற பொழுது எத்தனை யாவது சுற்று என்பதை அறிந்து வைத்துக் கொள்ளுங்கள்.

முதல் சுற்றாக இருந்தாலும் மூன்றாவது சுற்றாக இருந்தாலும் முன்னேற்றங்களில் தடை ஏற்படாமல் இருக்க சனி பகவானுக்குரிய சிறப்பு ஸ்தலங்களுக்குச் சென்று வழிபட்டு வருவது நல்லது. இரண்டாவது சுற்று நடப்பவர்கள் பொங்குசனிக்குரிய வழிபாட்டை மேற்கொண்டு புதிய வாழ்க்கையை அமைத்துக்கொள்வது நல்லது. சனியின் ஆதிக்கத்தில் நன்மை கிடைக்க சனி கவசம் பாடி வழிபடுவது நல்லது. ஆஞ்சநேயருக்கு ராம ஜெய மாலையை சூட்டலாம். என்ன இருந்தாலும் கடைசி நேரத்திலேயே காரியங்கள் கைகூடும். இடமாற்றம், ஊர் மாற்றங்களும் ஒருசிலருக்கு வந்து சேரும்.

**புதனின் மேட, இடப சஞ்சாரங்கள்!**

மேட இராசிக்கும் ஏப்ரல் 21 ஆம் திகதியன்று புதன் செல்கிறார். உங்கள் ராசிக்கு 9,12 க்கு அதிபதி மேடத்தில் சஞ்சரிக்கும் பொழுது குடும்ப செலவுகள் கூடும். குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட பிரச்சினைகள் மாறும். கடுமையாக முயற்சித்தும் நடைபெறாத பயணங்கள் இப்பொழுது நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும். சொத்துக்களை வாங்கும் பொழுது பத்திர பதிவுகளை சரி பார்த்து வாங்குவது நல்லது.

மே 7 ஆம் திகதி இடப இராசிக்குள் புதன் சஞ்சரிக்கப் போகிறார். இது ஒரு உன்னதமான காலம். பன்னிரண்டுக்கு அதிபதி எட்டில் சஞ்சரிக்கும் பொழுது விபரீத ராஜயோகம் செயற்படும். எனவே, திட்டமிடாது செய்யும் காரியங்களில் சில வெற்றி பெறும். வெறுப்பாக இருந்து உங்களை விட்டு விலகிய வர்கள், இப்பொழுது விருப்போடு உங்களுடன் வந்து இணைந்து கொள்வர்.

**இடப சுக்ரனின் சஞ்சாரம்!**

இடப இராசியில் சுக்ரன் மே 5 ஆம் திகதி சஞ்சரிக்கப் போகிறார். புதனோடு சுக்ரன் இணையும் இந்த பொன்னான நேரத்தில் தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. அதிக பயணங்களை மேற்கொள்வீர்கள். பெண் குழந்தைகளின் பூப்புனித நீராட்டு விழாக்கள், பெற்றோர்களின் மணி விழாக்களை நடத்துகிற வாய்ப்பு கிட்டும். சுப விரயங்கள் அதிகரிக்கும் இந்த நேரத்தில், சொல்லை செயலாக்கிக் காட்டுவீர்கள்.

இம்மாதம் ராகு, கேது பரிகாரம் செய்வதோடு அனுமன் வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள்.

## சிவல்புரி சிங்காரம்

விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை

**விருப்பங்கள் நிறைவேறும் மாதமிது!**

**எல்லோருடைய எதிர்காலமும் இனிமையாக இருக்க வேண்டுமென்று விரும்பும் விருச்சிக இராசி நேயர்களே!**

## தித்திப்பான செய்திகள் வந்து சேரும்!

உங்களுக்கு இந்த சித்திரை மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, முத்தான பலன்களும் முன்னேற்றங்களும் வருமென்றே சொல்ல வேண்டும். குருவும் சந்திரனும் இணைந்து உங்கள் இராசியைப் பார்க்கிறார்கள். எனவே, கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும். கூடுதல் லாபம் தொழிலில் வந்து சேரும். எந்தக் காரியத்தையும் எடுத்தோம் முடித்தோம் என்று செய்து முடிப்பீர்கள்.

ஏழரைச்சனியின் ஆதிக்கம் நடப்பதால் எல்லா நாட்களும் இனிய நாட்களாக அமைய சனிக்கிழமை தோறும் விநாயகப்பெருமான், அனுமன், சனிபகவான் ஆகிய மூவரையும் வழிபட்டு வருவது நல்லது. இயற்கையிலேயே தெய்வ பலம் பெற்ற உங்களுக்கு இது போன்ற தெய்வ வழிபாடுகளை மேற்கொள்கிற பொழுது செய்யும் காரியங்கள் சீக்கிரமாக முடிவடையும்.

வீடுகட்ட அல்லது வீடு வாங்க எடுத்த முயற்சிகளில் வெற்றிகளைக் கொடுக்கும் விதம், விரய சனி சஞ்சரிக்கிறார். சனி வக்ரம் பெறுவது ஒரு வகைக்கு நன்மைதான். பயணங்களால் பலன் கிடைக்கும். அலைச்சல் குறைந்து ஆதாயம் கூடும். இராசி நாதன் செவ்வாய், சூரியன், சுக்ரன், கேது ஆகிய மூன்று கிரகங்களுடன் இணைந்து சஞ்சரிக்கிறார்.

6 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் செவ்வாய் 12 ஆம் இடத்திற்கு அதிபதியான சுக்ரனுடன் இணைந்து விபரீத இராஜயோக அடிப்படையில் சஞ்சரிப்பதால் திட்டமிடாது செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கும். திறமை மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து உதவிக்கரம் நீட்டுவர். தொழில் மாற்றம், கிளைத் தொழில் தொடங்கும் வாய்ப்பு, ஊதிய உயர்வு போன்றவைகள் எதிர்பார்த்தபடி வந்து சேரும்.

பன்னிரண்டில் சஞ்சரிக்கும் இராகு, சகாய ஸ்தானாதிபதியுடன் இணைந்து சஞ்சரிப்பதால் அரவுக் கிரகங்களுக்கு பரிகாரம் செய்தால் அனைத்துக் காரியங்களிலும் வெற்றி கிடைக்கும். தடைகள் அகன்று தனலாபமும் வந்து சேரும்.

**புதனின் மேட, இடப சஞ்சாரங்கள்!**

ஏப்ரல் 21 ஆம் திகதி மேட இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். 8 க்கு அதிபதி 6 இல் சஞ்சரிக்கும் பொழுது மனதில் நினைத்த சில காரியங்கள் நடைபெற்று மகிழ்ச்சியை வழங்கும். அத்தியாவசியப் பொருட்கள் மட்டுமன்றி ஆடம்பரப் பொருட்களும் வாங்குவதற்காக எடுத்த முயற்சி கைகூடும். கடன்சுமை குறையும். வங்கி சேமிப்பு உயரும்.

மே 7 ஆம் திகதி இடப இராசியில் புதன் சஞ்சரிக்கும் பொழுது விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும். மாமன், மைத்துனர் வழியில் நடைபெறும் மங்கல நிகழ்ச்சிகளை முன்நின்று நடத்துவீர்கள். பணியாளர்களால் ஏற்பட்ட தொல்லை அகலும். வியக்கும் செய்தி வெளிநாட்டில் இருந்து வந்து சேரும். இளைய சகோதரத்தால் ஏற்பட்ட இடையூறுகள் அகலும்.

**இடப சுக்ரனின் சஞ்சாரம்!**

மே 5 ஆம் திகதி இடப இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். 7க்கு



## விருச்சிகம்

அதிபதி 7 இல் சஞ்சரிக்கும் போது யோகம்தான். வாகன யோகம் ஏற்படும். புதிதாக வாகனங்கள் வாங்க நினைப்பவர்களுக்கு எதிர்பார்த்தபடியே வங்கிகளின் ஒத்துழைப்புக் கிடைக்கும். பழைய வாகனங்கள் வைத்திருப்பவர்கள் அதைக்கொடுத்துவிட்டு புதிய வாகனங்கள் வாங்க முயற்சிப்பர். ஒருசிலருக்கு நீண்டதூரப் பயணங்களால் பலன் கிடைக்கும்.

இம்மாதம் ஆனைமுகப்பெருமானுக்கு அறுகம்புல் மாலை சூட்டி வழிபாடு செய்யுங்கள். தேனான வாழ்க்கை அமையும். தித்திப்பான செய்திகளும் வந்து சேரும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

434



## வீண் பழி

முற்காலத்தில் ஒரு வியாபாரி இருந்தான். அவனுக்கு முத்துச்சாமி என்ற மகனும் முத்துலட்சுமி என்ற மகளும் இருந்தனர். வியாபாரிக்கு மிகவும் வயதாகிவிட்டது. அவன் மரணப்படுக்கையில் இருக்கும் போது தன் மகனை அழைத்து அப்பா எனக்கோ வயதாகி விட்டது. இனி அதிக நாட்கள் உயிர் வாழமாட்டேன். எனக்கு பின்பு நம் வியாபாரத்தை கவனித்துக்கொள். உன் தங்கையையும் சுகமாக இருக்கச் செய். இதுதான் நான் உன்னிடம் கடைசியாகச் சொல்வது என்றான். அவனும் அப்படியே செய்வதாக வாக்களித்தான்.

தந்தை இறந்த சிறிது காலத்திற்குப் பின்பு மூன்று கப்பல்களில் பொருட்களை ஏற்றிக் கொண்டு அயல்நாடுகளில் வியாபாரம் செய்யப் புறப்பட்டான். புறப்படும் முன் தன் தங்கையைப் பார்த்து நான் திரும்பி வர வெகு நாட்கள் ஆகும். நீ ஜாக்கிரதையாக இரு. வெளியில் போகாமல்,

### அம்புலிமாமா கதைகள்

அந்நியருடன் பேசாமல் இருந்து நம் குலப்பெயரைக் காப்பாற்று என்று சொல்லி தன் உருவப் படம் ஒன்றை அவளிடம் கொடுத்து அவளது உருவப்படத்தை தன்னுடன் எடுத்துக்கொண்டு பிரயாணத்தை ஆரம்பித்தான். இரண்டு வாரங்கள் ஆகின. முத்துச்சாமி சுதர்மன் என்னும் அரசனின் நாட்டை அடைந்தான். அவன் சில அபூர்வ பொருட்களை அரசனுக்கு வெகுமதியாக கொடுத்து அந்நாட்டில் வியாபாரம் செய்ய அனுமதி கோரினான். அவ் அரசனும் முத்துச்சாமி கொடுத்த வெகுமதிகளை ஏற்றுக்கொண்டு மற்றும் அவனிடம் இருந்த அதிசயப் பொருட்களைப் பார்க்கையில் முத்துலட்சுமியின் உருவப்படம் அவன் கண்களில் பட்டது. அதைப் பார்த்ததும் இது யார்? மிகவும் அழகாய் இருக்கிறாள் என்று முத்துச்சாமியிடம் கேட்டான். அதற்கு முத்துச்சாமி இது என் தங்கையின் படம். எனவே அரசனும் அப்படியா? நல்ல குணவதியாக இருந்தால் நான் இவளையே என் பட்டத்து ராணி ஆக்கிக்கொள்வேன் என்றான். இதை அருகிலிருந்து கேட்ட சேனாதிபதிக்கு பொறாமையும் அருவருப்பும் எற்பட்டது. வணிககுலத்தில் உதித்த ஒரு பெண்ணா நாட்டை ஆளும் அரசியாவது என்று நினைத்து பொறுமிக் கொண்டான். உடனே அவன் அரசனைப் பார்த்து அரசே! நான் இந்தப் பெண்ணை நன்கு அறிவேன். இவள் ஒழுக்கம் கெட்டவள் என்றான். இதைக் கேட்டதும் அரசனுக்கு முத்துச்சாமியின் மீது கடும் கோபம் ஏற்பட்டது. உடனே என்னை ஏமாற்றவா பார்க்கிறாய்? இதோ என்னுடைய சேனாதிபதி சொல்வதைக் கேட்டாயா? என்று அரசன் கேட்க, முத்துச்சாமி பிரபோ உங்கள் சேனாதிபதி சொல்வது முற்றிலும் பொய். இப்பெண்ணை இவர் நன்கு அறிவார் என்றால் இவளின் அங்க அடையாளங்களைச் சொல்லட்டும். இவன் மோதிரத்தை வாங்கிவரட்டும்.



சேனாதிபதி சற்றுத்திகைத்தான். ஆனால் தன்னை சமாளித்துக் கொண்டு இரண்டு மாத அவகாசம் கோரினான். அரசனும் அவ்விதமே அவகாசம் கொடுத்து நீ தக்க அங்க அடையாளங்களை கூறி அவள் மோதிரத்தைக்கொண்டு வரா விட்டால் உன் தலை போய்விடும் என்று சேனாதிபதியிடம் கூறினான்.

சேனாதிபதியும் உடனே புறப்பட்டு முத்துச்சாமியின் ஊரை அடைந்தான். அங்குள்ள ஓர் ஏழைக் கிழவியைப் பிடித்து அவளுக்கு நிறையப் பணம் கொடுத்து தான் அங்கு வந்த காரணத்தைத் தெரிவித்தான். அவளும் அவனுக்கு உதவி செய்ய ஒப்புக்கொண்டாள்.

கிழவியும் முத்துலட்சுமி வீட்டுக்குப்போய் தந்திரமாகப் பேசி அவள் முதுகில் இடதுபுறத்தில் உள்ள மச்சத்தைப் பற்றி அறிந்து கொண்டாள். அவளுக்குத் தெரியாமல் அவளது மோதிரத்தையும் திருடிக் கொண்டு வந்து அந்த சேனாதிபதியிடம் கொடுத்தாள். அவனும் அதை எடுத்துக்கொண்டு மச்சத்தைப் பற்றிய விபரத்தையும் அறிந்து கொண்டு தன் நாட்டிற்குத் திரும்பினான்.

அரசனிடம் மோதிரத்தைக் கொடுத்து சேனாதிபதி முத்துலட்சுமியின் முதுகில் இருந்த மச்சத்தைக் கூறவே முத்துச்சாமி திடுக்கிட்டான். அப்போது அரசன் சேனாதிபதி கூறியதை உண்மை எனத் தீர்மானித்துக்



கொண்டான். முத்துச்சாமியை நோக்கி எல்லாம் சரிதானா என்று கேட்ட அவனும் ஆம் என்று தலையசைத்தான். அரசன் தன்னை அவன் ஏமாற்ற முயன்ற குற்றத்திற்காக அவனுக்கு மரணதண்டனை விதித்தான். அப்போது முத்துச்சாமி பிரபோ! நான் இந்தத் தண்டனையை



ஏற்கிறேன். ஆனால் இறக்கும்முன் என் தங்கையை ஒருமுறை பார்க்க விரும்புகிறேன். அவளுக்கு இந்தத் தகவலைச் சொன்னால் உடனே வருவாள் என்றான். அரசனும் அவனது கோரிக்கைக்கு இணங்கினான்.

விபரம் அறிந்த முத்துலட்சுமி மிகவும் மனம் வருந்தினாள். தான் முன்பின் அறியாத ஒரு கிழவியிடம் பேசியது எவ்வளவு தூரம் விபரீதத்தில் கொண்டுபோய் விட்டுவிட்டது என்பதை நினைத்து மிகவும் மனம் வருந்தினாள். உடனே கப்பல் ஏறி தன்னுடைய அண்ணன் சிறைப்பட்டிருந்த நாட்டை அடைந்தாள். கப்பலை விட்டு இறங்கியதும் நேரே அரசனிடம் சென்று அரசே என் காது கம்மலைப் பாருங்கள் என்று ஒரு கம்மலைக் கொடுக்க அவனும் அதைப் பார்த்துவிட்டு இதில் நவரத்தினங்கள் இருக்கின்றன என்றான். அரசே என்னிடம் ஒரு ஜதை கம்மல் இருந்தது. அவற்றில் ஒன்றை உங்கள் சேனாதிபதி திருடிக் கொண்டு விட்டான் என்று கூறினாள் முத்துலட்சுமி.

அரசனும் சேனாதிபதியை வரவழைத்துக்கேட்க அவனோ! அரசே இந்த ஸ்திரியை இதற்கு முன் பார்த்ததேயில்லை. இன்னாரென்றும் எனக்குத் தெரியாது. இவளிடம் இருந்து எப்படி நான் கம்மலைத் திருடியிருக்கமுடியும் என்றுகேட்டான்.

அப்போது முத்துலட்சுமி பிரபோ என்னைப் ப்ாராமலே எப்படி என்னுடைய அங்க அடையாளங்களை இவரால் கூறமுடிந்தது. என் மோதிரத்தை எப்படித் தங்களிடம் கொடுக்க முடிந்தது. நான்தான் இப்போது தங்களால் மரண தண்டனை விதிக்கப்பட்ட முத்துச்சாமியின் தங்கை என்றாள்.

இதைக்கேட்டதும் அரசன் சேனாதிபதி ஏதோ சூது செய்திருக்கிறான் என்பதை அறிந்து கொண்டான். உடனே அவனைக் கைது செய்யச்சொல்லி விசாரிக்க சேனாதிபதியின் மோசச்செயல் வெளிப்பட்டது. முத்துச்சாமி விடுதலை அடைந்தான். சேனாதிபதிக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. அரசன் முத்துலட்சுமியை மணந்துகொண்டு சுகமாக வாழ்ந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூக்கு மரநிழலில் மூவர்; கருணை மனு ஏற்கப்படுமா?




வேலூர் சிறையில் இருக்கும் பேரறிவாளன், டெல்லியில் இருக்கும் தகவல் ஆணையரிடம் வீடியோ கான்பரன்ஸிங் மூலமாகத் தன்னுடைய கருணை மனு ஏன் நிராகரிக்கப்பட்டது என்ற கேள்வியைக் கேட்கிறார். இந்தியாவிலேயே சிறையில் இருக்கும் கைதி ஒருவருடன் தலைமை-தகவல் ஆணையர் பேசுவது இதுவே முதல்முறை. என்றாலும், பேரறிவாளன் கேட்ட கேள்விகளுக்குப் பதில் கிடைக்குமா என்பது விடை தெரியாத கேள்விதான்!

1993 இல் டெல்லியில் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் ஒன்பது பேர் பலியானார்கள். இந்த குண்டு வெடிப்பின் குற்றவாளியாக பஞ்சாபில் தனிநாடு கோரிய காலிஸ்தான் அமைப்பைச் சார்ந்தவர் என்ற குற்றச்சாட்டின் பேரில் தேவேந்தர் பால்சிங் புல்லருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

அவர் 2003 இல் ஜனாதிபதிக்குக் கருணை மனு தாக்கல் செய்தார். எட்டு ஆண்டுகளாக அவருடைய கருணை மனு நிலுவையில் இருக்க புல்லரின் மனைவி உச்ச நீதிமன்றத்தில், "கருணை மனு மீது முடிவெடுக்க ஏற்படும் இந்தக் காலதாமதம் தூக்கில் நிறுத்தப்பட்டுள்ளவரை அன்றாடம் தூக்கில் ஏற்றுகிறது" என்று மனுத்தாக்கல் செய்தார்.

மனுத்தாக்கலைத் தொடர்ந்து சில நாட்களிலேயே புல்லரின் கருணை மனு 2011 இல் முன்னாள் குடியரசுத் தலைவர் பிரதீபா பாட்டீலால் நிராகரிக்கப்படுகிறது. விசாரணையின்போது ஏன் அவசர அவசரமாகக் கருணை மனு நிராகரிக்கப்பட்டது? என உள்துறை அமைச்சகத்தைக் கடிந்து கொண்டார் நீதிபதி சிங்வி.

இதற்கிடையில் பாலாறு வெடிகுண்டு வழக்கில் சைமன், ஞானபிரகாசம், மாதையன், பிலவேந்திரன் ஆகியோரும் ஒன்பது ஆண்டுகள் காலதாமதமாகக் கருணை மனு நிராகரிக்கப்பட்ட கோரிக்கையோடு உச்சநீதிமன்றத்தில் போய் நிற்க, புல்லரின் வழக்கைப் பொறுத்தே இவர்களின் கோரிக்கையிலும் நீதிமன்றம் முடிவெடுக்கும் என்று இவர்களின் தூக்கும் ஆறு வாரங்கள் தடை விதித்தது உச்சநீதிமன்றம்.

இப்போது புல்லரின் வழக்கில் தீர்ப்பு வந்திருக்கிறது. கருணை மனு மீது முடிவு எடுக்க காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்ற வாதத்தை நீதிமன்றம் ஏற்கிறது. ஆனால், அந்த முடிவின் மீது கேள்வி எழுப்பும் மனுதாரரின் வாதத்தை நீதிமன்றம் ஏற்கவில்லை என்று புல்லரின் மனுவைத் தள்ளுபடி செய்துள்ளது உச்சநீதிமன்றம்.

இனி அடுத்தடுத்து காலதாமதத்தைக் காரணம் காட்டி தூக்குத் தண்டனையில் இருந்து விலக்குக் கோரிய 14 பேரின் வழக்குகளும் அடுத்தடுத்து தீர்ப்புகளுக்காக வரவிருக்கும் சூழல்!

இந்த நிலையில் மூவர் தூக்குக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞர் ராம்ஜெத்லானியோடு ஆஜரான வழக்கறிஞர் குழுவில் ஒருவரான சந்திரசேகனிடம் "புல்லரின் தீர்ப்பு மூவரின் மேல் முறையீட்டு மனுவைப் பாதிக்குமா?" என்று கேட்டபோது,

எங்கள் எதிர்பார்ப்புக்கு மாறாக புல்லரின் வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டு இருக்கிறது. குஜராத்தில் திருவேனி பென்... தன் கணவருடைய கருணை மனு மீது முடிவெடுக்க காலதாமதம் ஏன்? என்ற கேள்வியோடு உச்ச நீதிமன்றம் செல்ல தூக்கை ஆயுளாகக் குறைக்க இரண்டாண்டு கால தாமதமாக போதுமானது என்று தூக்கை ஆயுள் தண்டனையாக மாற்றியது உச்ச நீதிமன்றம். அந்த வழக்கை புல்லர் மனுவில் சுட்டிக் காட்டியபோது... இது தடா என்கிற சிறப்புச் சட்டத்தின் கீழான வழக்கு என்பதால் இதுவும் அதுவும் ஒன்றல்ல! என்பது பதிலாகக் கிடைத்திருக்கிறது.

ராஜீவ் வழக்கைப் பொறுத்தவரை தடா சட்டத்தின் கீழ் ராஜீவ் வழக்கை விசாரித்தது செல்லாது என்றும் இந்த வழக்கை விசாரிக்கத் தீவிர வாதச் சட்டமோ அதற்குச் சமமான சட்டங்களோ தேவையில்லை. சாதாரண தண்டனைச் சட்டங்களே போதுமானது என்றும் நீதிமன்றம் சொல்லியிருப்பதால் புல்லரின் வழக்கு எந்த விதத்திலும் மூவர் தூக்கைப் பாதிக்காது என்றே நம்புகிறேன்.

உண்மையில் புல்லரின் மனு தூக்குத் தண்டனை தொடர்பாக நீதிமன்றத்துக்கு உள்ளும் வெளியிலும் நடைபெறும் விவாதங்களை அடுத்த கட்டத்துக்கு நகர்த்திச் சென்றிருக்கிறது. விரைவில் தூக்குத் தண்டனைக்கே விடை கிடைக்கும் என்றார்.

காலதாமதத்துக்குக் காரணமாக நீதிமன்றத்தில் மத்திய அரசு சொன்ன காரணங்களில் ஒன்று உலகெங்கிலும் இருந்து குடியரசுத் தலைவரின் செயலகத்துக்குத் தனி நபர்கள், அரசியல் சமூக அமைப்புகள், மனித உரிமை அமைப்புகள் என ஏராளமானோர் அனுப்பும் கருணை மனுக்களை வாசித்து முடிப்பதிலேயே காலதாமதம் ஏற்படுகிறது என்றது மத்திய அரசு. அதை நீதிமன்றமும் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தியாவிலேயே முருகன், சாந்தன், பேரறிவாளன் வழக்குக்குத்தான் உலகெங்கிலும் இருந்து சுமார் 8000 கோரிக்கை மனுக்கள் ஜனாதிபதியின் செயலகத்துக்கு அனுப்பப்பட்டன என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

உச்ச நீதிமன்றத்தில் 14 அமர்வுக்ள் உள்ளன. தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்கக் கோரும் ஒருவரின் மனு, எந்த நீதிபதியின் மேஜையில் தீர்ப்பு எழுதப்படுகிறது என்பதைப் பொறுத்தே பெரும்பாலும் தீர்ப்புகள் உள்ளன என்கிற நிலையில் ராஜீவ் கொலை வழக்கில் தூக்கை எதிர்கொள்ளும் மூவரின் வழக்கும் புல்லரின் மனுவை நிராகரித்த நீதிபதி சிங்வியின் முன்பே வரவிருக்கிறது.

இந்தத் தீர்ப்புக்குப் பின்னர் தமிழகத்தில் மௌனம் நிலவுகிற நிலையில் வேலூர் சிறையில் உள்ள மூவரிடமும் வழக்கறிஞர்கள் மூலமாகப் பேசினோம்.

பேரறிவாளன்:

"அரசாங்கத்தாலும் நீதிமன்றங்களாலும் முடிவுகள் எடுக்கப்படும் ஒவ்வொரு தருணத்திலும் நான் நிரபராதி என்ற ஒன்றை வாக்கியத்தை மட்டுமே சொல்ல விரும்புகிறேன். என்னை நம்பிக்கையோடு நகர்த்திச்செல்லும் என் தாயார் அற்புதம்மாளுக்கு எந்தப் பின்னடைவும் வந்து விடக் கூடாது என்றே நான் கவலை அடைகிறேன். நீதியின் பாலும் நீதிமன்ற அறத்தின்பாலும்தான் எங்களைப் போன்றோர் கடைசிவரை நம்பிக்கை கொள்ள முடியும். தமிழக மக்களும் எங்கள் உயிரின் மீது அக்கறை கொண்டிருப்போரும் எங்களுக்கு அந்த நம்பிக்கையை வழங்குகிறார்கள்.

என் தாயார் மீண்டும் ஜனாதிபதிக்குக் கோரிக்கை மனு அனுப்பியிருக்கிறார். நான் தமிழக ஆளுநருக்கு மீண்டும் கருணை மனு அனுப்பியிருக்கிறேன். தமிழக முதல்வரும் எங்களுக்கு ஆதரவாக அமைச்சரவையில் தீர்மானம் நிறைவேற்றுவார் என்று நம்புகிறோம். தூக்கு மர நிழலில் ஆடிக்கொண்டிருக்கும் ஒருவனின் மன உணர்வுகள் இதுவல்லாமல் வேறு எதுவாக இருக்க முடியும்?" என்று கேட்கிறார் பேரறிவாளன்.

தனது படிப்பில் அதிகக் கவனம் செலுத்தும் முருகன் தன் மனைவி நளினியைப் புல்லர் வழக்குத் தீர்ப்புக்குப் பின் சந்தித்து வந்திருக்கிறார்.

"ஜூன் மாதத்தோடு நான் சிறைக்கு வந்து 22 ஆண்டுகள் முடிகின்றன. என் குழந்தை அரித்ராவுக்கு 20 வயது ஆகிறது. முள்ளிவாய்க்கால் படுகொலைகளின் முன்னரும் பின்னரும் என் வாழ்க்கை தொடர்பாகப் பலவிதமான குழப்பங்களுக்கு ஆளானேன். 19 பேர் தீக்குளித்தும் பெரிய ஆர்ப்பாட்டங்கள் நடத்தியுமே ஒன்றரை லட்சம் மக்கள் கொலையை நிறுத்த முடியவில்லை.

நாமெல்லாம் எம்மாத்திரம் என்ற மன உணர்வே எஞ்சியிருந்தது. ஆனால், மூவர் தூக்குக்கு எதிராக எழுந்த எழுச்சி நம்பிக்கை அளித்தது. உண்மையில் இந்த வழக்குக்கும் எங்களுக்கும் எந்தத் தொடர்புகளும் இல்லை. இது இந்த வழக்கோடு தொடர்புடையவர்களுக்கும் தெரியும் என்கிற நிலையில் நான் உண்மையைப் பேசுகிறேனா பொய் பேசுகிறேனா? என்பதை ஆய்வுக்கு உட்படுத்தி என் விடயத்தில் அரசே ஒரு முடிவுக்கு வரட்டும்!" என்று முடித்துக்கொண்டார் முருகன்.

சாந்தனின் தந்தை இந்த செய்தியை அவரிடம் சொன்னபோது அதைச் சலனமற்று எதிர்கொண்டிருக்கிறார் சாந்தன், "கடவுளிடம்தான் நான் தஞ்சம் அடைந்திருக்கிறேன். 2000ஆண்டு கால ஆன்மீகப் பாரம்பரியம் மிக்க இந்தியாவில் நான் நம்புகிற கடவுள் என்னைக் காப்பாற்றுவார்" என்கிறார் சாந்தன் சாந்தமாக.

புல்லர் வழக்குக்கும் முந்தைய பச்சன் சிங் வழக்கில் தொடங்கி கடந்த 30 ஆண்டுகளாக அரிதினும் அரிதான வழக்குகளில் மட்டுமே மரண தண்டனை வழங்கப்படுகிறது. எந்தக் குற்றத்துக்கு எல்லாம் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படுகிறதோ அந்த வழக்குகள் அனைத்தும் அரிதினும் அரிதான பிரிவின் கீழ் அடங்குகிறது. அரிதினும் அரிதான என்ற சொல்லுக்குச் சட்டரீதியான விளக்கங்களோ, பொருளோ அரசியல் சட்டத்தில் ஏதும் இல்லாத நிலையில் அது தீர்ப்பை எழுதும் நீதிபதியின் மத, கலாசார, சமூக விழுமியங்கள்சார்ந்த ஒன்றாகி விட்டது என்கிறார்கள் மனித உரிமை ஆர்வலர்கள்.

-விகடன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2012 ஆம் ஆண்டில் மட்டும் 1740 பலாத்கார வழக்குகள்

## சட்டமா அதிபர் திணைக்களம் தகவல்

2012 ஆம் ஆண்டு ஆயிரத்து 740 பலாத்கார வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டதாகவும் அதில் ஆயிரத்து 464 வழக்குகளில் 18 வயதுக்குட்பட்ட பெண்கள் பாதிக்கப்பட்டவர்களாக காணப்பட்டதாகவும் சட்டமா அதிபர் திணைக்களத் தரவுகள் தெரிவித்துள்ளன.

அறிவிக்கப்பட்ட வல்லுறவு வழக்குகளில் 89 சதவீதமானவர்கள் பாதிக்கப்பட்டவர்களாக பெண்களே இருக்கின்றனர். 11 வீதமானவர்கள் ஆண்கள்.

இவற்றில் ஒரேயொரு வழக்கைத் தவிர ஏனையவற்றில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் ஆண்களாக காணப்பபட்டனர். 96 சதவீதமான வழக்குகளில்துஷ்பிரயோகம்செய்தவர் பாதிக்கப்பட்டவருக்கு தெரிந்தவராக இருந்துள்ளனர்.

அதிகமாக இவர்கள் உறவினர்களாக, கருக்குடும்ப அங்கத்தவர்களாக, அயலவர்களாக, காதலனாக, சமயத் தலைவர்களாக மற்றும் பாடசாலை ஆசிரியர்களாக காணப்பட்டுள்ளனர் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சிறுவர்கள் பாலியல் ரீதியில் துன்புறுத்தப்பட்டுள்ளதாக ஆயிரத்து 159 முறைப்பாடுகளும் சிறுவர்களுக்கு எதிரான 723 மிகமோசமானபாலியல் துஷ்பிரயோகங்கள் இடம்பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் திணைக்களம் கூறியுள்ளது. (அ-2)

# 128 சிறுவர்களுக்கு பிறப்பு சான்றிதழ்கள்

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள நான்கு சிறுவர் இல்லங்களைச் சேர்ந்த 128 சிறுவர்களுக்கு பிறப்புச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண நன்னடத்தை சிறவர் பராமரிப்பு திணைக்கள ஆணை யாளர் செல்வி உமா தங்கவேல் தெரிவித்தார்.

மகாதேவா சைவ சிறுவர் இல்லம், கருணாலயம்காந்தி, திருக்குடும்ப கன்னியர்மடம் உள்ளிட்ட நான்கு சிறுவர் இல்லங்களைச் சேர்ந்த 128 சிறுவர்களுக்கே இவ்வாறு நேற்று முன்தினம் பிறப்புச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# மார்ச் மாதத்தில் மட்டும் 168 வாகன விபத்துக்கள்

(கொழும்பு)

இலங்கையில் மார்ச் மாதத்தில் மட்டும் 168 மோசமான வாகன விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதாகவும், இதில் 181 பேர் கொல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் படி ஜனவரி மாதத் தில் 156 விபத்துக்களில் 163 பேரும் பெப்ரவரி மாதத்தில் 146 வாகன விபத்துக்க ளில் 154 பேரும் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை 2012 ஆம் ஆண்டில் 2 ஆயிரத்து 300 மோசமான வாகன விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதாகவும் இதில் 2 ஆயிரத்து 425 பேர் இறந்துள்ளனர் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்விபத்துக்கள் கவனயீனமாக வாகனத்தைச் செலுத்துதல், மது போதையில் வாகனத்தைச் செலுத்துதல் என்பனவற்றாலேயே அதிகம் நிகழ்ந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# மஹிந்த அரசைத் துரத்துங்கள்

## மங்கள எம்.பி.

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கம் தொடர்ந்தும் நாட்டை ஆட்சி செய்ய இடமளிக்க முடியாது என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மின்சார கட்டணம் அதிகரிக்கப்பட்டமை தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

மேலும் கடந்த மார்ச் மாதம் முதல் அரசாங்கம் நாடகம் ஒன்றை நடத்தி அதன் அடிப்படையிலேயே கட்டணத்தை அதிகரித்துள்ளது. தொடர்ந்தும் இந்த அரசாங்கம் ஆட்சியில் இருந்தால்நாட்டுமக்களால் இலங்கையில் வாழ முடியாது போகும் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (அ-2)

# 36 இலங்கையர்களுக்கு சர்வதேச பிடிவிறாந்து

(கொழும்பு)

பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 36 இலங்கையர்களுக்கு எதிராக சர்வதேச பிடிவிறாந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய பயங்கரவாத நடவடிக்கைகள், போலி காணி உறுதி தயாரித்தல் உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களுக்கே இவ்வாறு பிடிவிறாந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம்கள் இந்தப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளனர். இதில் ஒருவர் சட்டத்தரணி எனத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள், விடுதலைப் புலிகள் இயக்கத்திற்காக பணம் திரட்டியவர்கள், செலிங்கோ குழும நிறுவனத்தின் முன்னாள் தலைவர் லலித் கொத்தலாவலவின் மனைவி உள்ளிட்டோருக்கு எதிராக சர்வதேச பிடிவிறாந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (அ-2)




★ 1509-ஏழாம் ஹென்றியின் இறப்புக்குப் பின்னர் அவனது மகன் எட்டாம் ஹென்றி லண்டனின் மன்னனாக முடிசூடினான்.

★ 1526-பானிப்பட்டில் முதலாவது போர் டில்லியின் சுல்தானுக்கும் தைமூர் வம்சத்தைச் சேர்ந்த பாபருக்கும் இடையில் இடம்பெற்றது. பாபர் இந்தியாவில் முகலாயப் பேரரசை நிறுவினான்.

★ 1792-பிரேசில் நாட்டின் விடுதலைக்குப் போராடிய டைராடெண்டெஸ் தூக்கிலிடப்பட்டான்.

★ 1863-கடவுளின் தூதர் தாமே என பகாவுல்லா பகிரங்கமாக அறிவித்தார். ரித்வான் தோட்டத்தில் செய்த இந்த அறிவிப்பு நாள் உலகம் முழுவதும் உள்ள பஹாய்களால் ரித்வான் முதல் நாள் என விழாவாக ஆண்டு தோறும் கொண்டாடப்படுகின்றது.

★ 1916-இலங்கையில் அமெரிக்க மிசனரிகள் ஒன்றுகூடி முதன்முதலில் ஒரு திருச்சபையை ஆரம்பித்தனர்.

★ 1822-இலங்கையில் அமெரிக்கத் திருச்சபையின் குருக்களாக (Pastor) முதற் தடவையாக உள்ளூரில் இருந்து தெரிவு செய்யப்பட்டனர். ஜோர்டன் லொட்ஜ், நத்தானியேல் நைல்ஸ், சார்ள்ஸ் ஹொட்ஜ், எபனேசர் போர்ட்டர் ஆகியோர் தெரிவானார்கள்.

★ 1944- பிரான்சில் பெண்களுக்கு வாக்குரிமை கிடைத்தது.

★ 1945-இரண்டாம் உலகப் போர்: பெர்லினில் சோவியத் படைகள் ஜேர்மனியின் உயர் தலைமைப் பீடத்தைத் தாக்கினர்.

★ 1960-பிரிசீலியா பிரேசிலின் தலைநகராக ஆக்கப்பட்டது.

★ 1967-கிரேக்கத்தில் பொதுத் தேர்தலுக்கு சில நாட்கள் இருக்கையில் இராணுவத் தளபதி ஜோர்ஜ் பப்பட பவுலோஸ் ஆட்சியைக் கைப்பற்றி அடுத்த ஏழாண்டுகளுக்கு பதவியில் இருந்தார்.

★ 1975-வியட்நாம் போர்: தெற்கு வியட்நாம் ஜனாதிபதி நூயென் வான் டியூ சாய்கோனை விட்டு வெளியேறினார்.

★ 1987-இலங்கையின் தலைநகர் கொழும்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 106 பேர் உயிரிழந்தனர்.

★ 1989-பீஜிங் நகரில் தியன்மென் சதுக்கத்தில் கிட்டத்தட்ட ஒரு இலட்சம் மாணவர்கள் சீர்திருத்தத் தலைவர் ஹீ யாபாங்கின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தத் திரண்டனர்.

★ 1994- சூரியக் குடும்பத்துக்கு வெளியே கோள்கள் இருப்பதை முதன் முதலில் வானியலாளர் அலெக்சாண்டர் வோல்ஸ்க்சான் அறிவித்தார்.

### பிறப்புக்கள்

★ 1651-யோசப் வாஸ் அடிகள், இலங்கையில் சேவையாற்றிய கத்தோலிக்க மதகுரு (இ.1711)

★ 1837-பிரெட்ரிக் பேஜர், நோபல் பரிசு பெற்றவர் (இ.1922)

★ 1864-மக்ஸ் வெபர், ஜேர்மனிய சமூகவியலாளர் (இ.1920)

★ 1882-பேர்சி பிரிட்ஜ்மன், நோபல் பரிசு பெற்ற வேதியியலாளர் (இ.1961)

★ 1889-பவுல் காரெர், நோபல் பரிசுபெற்ற வேதியியலாளர் (இ.1971)

★ 1926-இரண்டாம் எலிசபெத், ஐக்கிய இராச்சியத்தின் மகாராணி

★ 1956-மங்கள சமரவீர, இலங்கை அரசியல்வாதி

### இறப்புக்கள்

★ 1910-மார்க் டுவைன், அமெரிக்க எழுத்தாளர் (பி.1835)

★ 1946-ஜான் மேனார்ட் கெயின்ஸ், பிரித்தானியப் பொருளியலாளர் (பி.1883)

★ 1964-பாரதிதாசன், புரட்சிக் கவிஞர், பாவேந்தர் (பி.1891)

★ 1965-எட்வர்ட் ஆப்பில்டன், நோபல் பரிசு பெற்றவர் (பி.1892)

### பாரதிதாசன்



பாரதிதாசன் பாண்டிச்சேரியில் (புதுச்சேரியில்) 1891 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி கனகசபை முதலியார்– இலக்குமி அம்மாள் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார்.

இவருடைய இயற்பெயர் சுப்புரத்தினம். தமிழாசிரியராக பணியாற்றிய இவர் சுப்பிரமணிய பாரதியார் மீது கொண்ட பற்றுதலால் பாரதிதாசன் என்று தம் பெயரை மாற்றிக் கொண்டார். பாரதிதாசன் தம் எழுச்சி மிக்க எழுத்தால் புரட்சிக் கவிஞர் என்றும் பாவேந்தர் என்றும் அழைக்கப்பட்டார்.

இவர் சிறுவயதிலேயே பிரெஞ்சு மொழிப் பாடசாலையில் பயின்றார். ஆயினும் தமிழ்ப் பாடசாலையில் பயின்ற காலமே கூடியது.

சிறுவயதிலேயே சிறுசிறு பாடல்களை அழகாக சுவையுடன் எழுதி தனது நண்பர்களுக்கு பாடிக் காட்டுவார். பிரபல எழுத்தாளரும் திரைப்படக் கதாசிரியரும் பெரும் கவிஞருமான பாரதிதாசன் அரசியலிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். புதுச்சேரி சட்டமன்ற உறுப்பினராக 1954 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1946 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29 ஆம் திகதி அறிஞர் அண்ணா அவர்களால் புரட்சிக்கவி என்று பாராட்டப்பட்டு 25 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

கவிஞருடைய படைப்பான பிசிராந்தையார் என்ற நாடக நூலுக்கு 1970 இல் சாகித்திய அக்டமியின் விருது கிடைத்தது. இவர் 1964 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி மரணமடைந்தார். இவ[illegible] அரசினரால் 1990 ஆம் ஆண்டில் பொது உடைமையாக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிஸ் முறைப்பாட்டு பிரதிகள் சிங்கள மொழியில் வழங்கப்படுகின்றன

## மக்கள் விசனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பொலிஸ் நிலையத்தில் மக்களுக்கு வழங்கப்படும் முறைப்பாட்டு பிரதிகள் சிங்கள மொழியில் வழங்கப்படுவதாக பாதிக்கப் பட்டோர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

முறைப்பாட்டு பிரதிகள் சிங்கள மொழி யில் வழங்கப்படுவதால் அதில் என்ன எழுதப் பட்டுள்ளது என்பதனை அறிய முடியாத நிலை காணப்படுவதாகவும் கவலை தெரிவிக் கப்படுகின்றது.

ஏதாவது குற்றச் சம்பவங்கள் இடம் பெற்றால் பாதிக்கப்பட்டவரிடம் பொலிஸா ரினால் வாக்கு மூலம் பெறப்படுகின்றது.

இதில் சம்பவம் எங்கே? எப்போது? எவ் விடத்தில் நடைபெற்றது? என்ன சம்பவம்? தொடர்பான அனைத்து விடயங்களும் முறைப்பாட்டாளர்களிடமிருந்து பொலிஸாரி னால் பெறப்பட்டு அது எழுத்துமூலமாக் கப்படுகின்றது.

இவ்வாக்கு மூலம் எடுத்துக் கொள்ளப் படும் போது முறைப்பாட்டாளர் எந்த மொழி யினை சார்ந்தவரோ அந்த மொழியில் எடுக்கப்படல் வேண்டும் என்பது பொலிஸ் திணைக்களத்தின் சுற்று நிருபத்தில் உள்ளது.

இந் நடைமுறை யாழ். மாவட்டம் மற்றும் வடக்கு மாகாண பொலிஸ் நிலையங்களிலும் அதிகமாக பின்பற்றப்படுகின்ற போதிலும் மன்னார், வவுனியா மற்றும் போரில் பாதிப் படைந்த மாவட்டங்களில் மிகக் குறைவாகவே பின்பற்றப்படுகின்றது என அம் மாவட்டங் களின் மக்கள் சிலர் தெரிவித்தனர்.

இம் மாவட்டங்களில் இரு மொழி தெரிந்த பொலிஸார் போதுமான அளவு இல்லை யென காரணம் கூறப்பட்டாலும் அனைத்து வசதிகளுமுடைய யாழ். மாவட்டத்தில் முறை ப்பாட்டு பிரதிகள் சிங்கள மொழியில் வழங் கப்படுவது ஏன்? என கேட்கப்படுகின்றது.

இவ்வாறு சிங்கள மொழியில் வழங்கப் படுகின்ற முறைப்பாட்டு பிரதிகளின் மூலம் தமிழ் மொழியில் காணப்படுகின்ற போதிலும் சிங்கள மொழியிலேயே வழங்கப்படு கின்றமை கேள்விக்குரியதொன்றாகும்.

வாக்குமூலம் தமிழில் கொடுக்கப்பட்ட போதிலும் சிங்கள மொழியில் எவ்வாறு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது என்பதனை அறிய முடியாத சந்தர்ப்பம் காணப்படுவ தாகவும் அவர்களால் சுட்டிக்காட்டப் படுகின்றது.

முறைப்பாட்டு பிரதியொன்றுக்கு ரூபா 25 பொலிசாரினால் அறவிடப்படுகின்றது.

சிங்கள மொழியில் ஏன் முறைப்பாட்டு பிரதி வழங்கப்படுகின்றது என தாம் யாழ் ப்பாண பொலிஸாரிடம் வினவியபோது, தமி ழில் நீங்கள் வெளியில் மொழி பெயர்த்து கொள்ளுங்கள் என பதிலளிக்கப்படுவதாக பொதுமக்களால் விசனம் தெரிவிக்கப்படு கிறது.

பொலிஸாரின் இந் நடவடிக்கையை மாற் றியமைத்து பொதுமக்களின் சிரமத் தினை பொலிஸ் உயரதிகாரிகள் நீக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது. (அ-4)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த பண்ணிசைப் போட்டி, மாணவர்களின் நலன் கருதி எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்போடப்பட்டுள்ளதாக திரு நெறிய தமிழ் மறைக் கழகம் அறிவித்துள்ளது. (அ)

# போதைப்பொருள் பாவனை அதிகரிப்பு

கொழும்பு நகரில் மாத்திரம் பயன் படுத்தப்பட்டு வந்த போதைத்தூள் பழக்கம் தற்போது கிராமிய பிரதேசங்களுக்கும் பரவியுள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளு மன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

வத்தளை உணுப்பிட்டிய ஸ்ரீ தர்மாராம விகாரையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்ட வாறு கூறியுள்ளார்.

நாட்டில் தற்போது, சூதாட்ட நிலையங் களை ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வருகின்றன. எனினும் மதுபானம், சூதாட்டம் போன்றவற்றினால் நாட்டை அபி விருத்தி செய்ய முடியாது எனவும் கரு ஜய சூரிய சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# கிழக்கு பல்கலைக்கழகத்தின் 17ஆவது பட்டமளிப்பு விழா

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 17ஆவது பட்டமளிப்பு விழா நேற்று காலை கிழக்கு பல்கலைக்கழகத்தில் ஆரம்ப மானது.

இந்நிகழ்வில் முதல் அமர்வின் போது கலைகலாசார பீடத்தினால் முன்னாள் அமைச்சரும் சட்டத்தரணியுமான கே.டபி ள்யூ. தேவநாயகத்திற்கு இலக்கியத்துக்கான கௌரவ கலாநிதிப பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

வந்தாறுமூலையிலுள்ள கிழக்குப் பல்கலைக்கழக நல்லையா மண்டபத்தில் நடைபெற்ற முதல் அமர்வில் விருந்தினர் களாக பிரதி உயர்கல்வி பிரதி அமைச்சர் நந்திமித்திர ஏக்கநாயக்க, கிழக்கு பல்கலைக்கழக வேந்தர் கலாநிதி யோகா இராசநாயகம், பேராதனைப் பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞானத்துறை சிரேஷ்ட பேராசிரியர் காமினி சமரநாயக்க உட்பட பலர் கலந்துகொண்டனர்.



இரண்டு நாட்கள் 5 தொகுதிகளாக நடை பெறவுள்ள இந்த பட்டமளிப்பு விழாவின் முதல் நாளான நேற்று 580 பட்டதாரிகளுக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன. அதேபோன்று 412 பட்டதாரிகளுக்கு இன்று பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

கிழக்கு பல்கலைக்கழக வரலாற்றில் முதல் தடவையாக மருத்துவ பீடத்தில் கல்வி கற்று வெளியேறிய 27 வைத்தியத்துறை சார்ந்தவர்களுக்கும் (எம்.பி.பி.எஸ்) பட்ட மளிப்பு நேற்று நடைபெற்றது.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் விவசாய, கலை கலாசாரம், வியாபார முகாமைத் துவம், விஞ்ஞான, சௌக்கியபராமரிப்பு, உள்ளிட்ட ஏழு பீடங்களைச் சேர்ந்த 912பேர் இம்முறை பட்டம் பெற்றுள்ளனர். (அ-2)

# மாவட்டமட்ட தமிழ்த்தினப்போட்டி

முல்லைத்தீவு மாவட்ட மட்டத்திலான அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டிகள் எதிர்வரும் 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணி வரை மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியால யத்தில் நடைபெறவுள்ளதாக துனுக்காய் வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி எல் மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக் கையில், முல்லைகல்விவலயம், துணுக்காய் கல்விவலயம் ஆகிய இருவல யங்களினதும் வலயமட்ட போட்டிகளில் முதல் இடத்தைப் பெற்றுக் கொண்ட போட் டியாளர்களைபொ று ப்பாசிரியர்களுடன் போட்டிக்குரிய ஆயத்தத் தோடு உரிய நேரத்திற்கு முன்பாக சமுகம் கொடுப்பதற்கு ஏற்ற ஒழுங்கமைப் புக்களை ஏற்படுத்தி கொடுக்குமாறு அவர் பாடசாலை அதிபர் களுக்கு அறிவித்துள்ளார். (அ-3-15)

# மின் பாவனையாளர்களுக்கு பாதிப்புகள் ஏற்படாதாம்

## இலங்கை மின்சாரசபை தலைவர் கூறுகிறார்

புதிய மின்சாரக்கட்டணத் துக்கு அமைய ஒன்று முதல் 30 வரையான மின அலகு களைப் பயன்படுத்துபவர்களுக்கு நாளொன் றுக்கு 2 ரூபா 50 சதம் மாத்திரமே உயர்த்தப் பட்டிருப்பதாக இலங்கை மின்சார சபையின் தலைவர் டபிள்யூ. பீ.கணேகல தெரிவித் துள்ளார்.

மின் பாவனையாளர்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையிலேயே மின்சாரக் கட்டண த்தில் மாற்றம் செய்யப்பட்டிருப்பதாக வும் ஒன்று முதல் 30 வரையான அலகு களைப் பயன்படுத்தும் ஆயிரத்து 67 மில்லியன் பாவனையாளர்கள் உள்ளனர்.

இவர்களுக்கு இதுவரை மாதமொன்றுக்கு 142 ரூபாவே அறவிடப்பட்டு வந்தது. புதிய திருத்தத்தின் படி 217 ரூபா அறவிடப்பட வுள்ளது. இதற்கமைய நாளொன்றுக்கு 2 ரூபா 50 சதமே அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஒரு அலகு மின்சாரத்தை உற்பத்தி செய் வதற்கு 23 ரூபா 30 சதம் செலவாகின்ற போதும் 15 ரூபா 65 சதத்துக்கே ஒரு அலகு மின்சாரம் பாவனையாளர்களுக்கு வழங்கப் படுகிறது. பாவனையாளர்களுக்கு மின்சாரம் வழங் குவதற்காக அரசாங்கம் 10ஆயிரத்து 500 மில்லியன் ரூபாவை மானியமாக வழங் குகின்றது. ஒரு அலகு மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான செலவீனம் அதிகரித்ததன் காரணமாகவே மின் அலகு க்கான கட்டணத்தை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. (அ-2)

# வங்குரோத்து அடைந்ததனை அரசு ஒப்புக் கொண்டுள்ளது

## ஹர்ஷ டி சில்வா எம்.பி. தெரிவிப்பு

வங்குரோத்து அடைந்தனை அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

பொருளாதாரத்தை நிர்வாகம் செய்ய முடி யாது என்பதனை அரசாங்கம் இறுதியில் பகிரங்கமாக ஏற்றுக் கொண்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தொடர்ந்தும் மக்களுக்கு நிவாரணங்களை வழங்க முடியாது என அண்மையில் ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித் திருந்தார். இந்த கருத்தின் மூலம் அரசாங்கம் வங்கு ரோத்து அடைந்துள்ளமை புலனாகி யுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாகவே அரசாங்கம் பாரிய ளவில் மின்சாரக் கட்டணங்களை உயர்த்தி யுள்ளதாகவும் ஆளும் கட்சி அமைச்சர்கள், அரசியல்வாதிகள் மற்றும் உயர் அரசாங்க அதிகாரிகள் பாரியளவு சொகுசு வாழ்க்கையை வாழ்ந்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள் தங்களுக்கு கிடைக்கப்பெறும் சலுகைகளை தியாகம் செய்து முன்னுதாரணமாக திகழ வேண்டியது அவசியமானது என அவர் கூறினார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நான் இப்போ இல்லத்தரசி

கடந்த ஆண்டு நடிகர் பிரசன்னாவை காதல் திருமணம் செய்து கொண்ட இவர் திருமணத்திற்கு பிறகும் நடித்து வருகிறார். அண்மையில் வெளியான ஹரிதாஸ் திரைப்படத்தில் சினேகாவின் நடிப்பு அனைவராலும் பேசப்பட்டது. இதனிடையே சினேகாவை சந்தித்து இயக்குநர் ஒருவர் கதை கூறியிருக்கிறார். கதை மிகவும் பிடித்திருந்தும் அதில் நடிக்க மறுத்திருக்கிறார் சினேகா.

இது குறித்து அவர் கூறியதாவது:

கணவன்-மனைவியின் அன்யோன்யத்தை சொல்லும் நல்ல கதைதான். ஆனால் படுக்கையறை காட்சிகள் எல்லாம் வைத்திருக்கிறார்கள். அதுவும் மேலோட்டமாக இல்லாமல் ரொம்பவும் ஆழமாக வைத்திருக்கிறார்கள். திருமணத்திற்கு பிறகும் இதுபோன்று மற்ற நடிகர்களுடன் அதிக நெருக்கமாக நடித்தால் அது குடும்பத்தில் சர்ச்சைகளை உண்டாக்கும். முந்தைய படங்களில் இதுபோன்று நடித்தபோதெல்லாம் நான் தனி மனுஷி. ஆனால் இப்போது நான் இல்லத்தரசி என்றார்.

# ஜீவா நடிப்பில் 'என்றென்றும் புன்னகை'



அஹமது இயக்கும் இந்தப் படத்தில் ஜீவாவுக்கு ஜோடியாக திரிஷா நடிக்கிறார். இவர்களுடன் இணைந்து வினய், ஆண்ட்ரியா, சந்தானம் உட்பட பலர் நடிக்கின்றனர். இப்படத்தின் பாடல் காட்சியை வெளிநாட்டில் சென்று படம்பிடிக்க படக்குழு திட்டமிட்டுள்ளது. இதற்காக அவர்கள் விரைவில் சுவிட்சர்லாந்து செல்கின்றனர். அதனைத்தொடர்ந்து படத்தின் சில காட்சிகளை பிரான்ஸிலும் படமாக்க திட்டமிட்டுள்ளனர்.

தலைவா படப்பிடிப்பிற்காக அவுஸ்திரேலியாவில் முகாமிட்டுள்ள சந்தானம் திரும்பியவுடன் படக்குழு வெளிநாடு பறக்க இறக்கிறது. தொடர் தோல்விகளை சந்தித்து வரும் ஜீவா, 'என்றென்றும் புன்னகை' திரைப்படம் தனக்கு திருப்புமுனையாக அமையும் என்று நம்புகிறார்.

# மீண்டும் சதா

"ஜெயம் படத்தின் மூலம், தமிழில் அறிமுகமான, சதாவுக்கு, அதற்கு பின், "அந்நியன் போன்ற, பெரிய பட்ஜெட் படங்களில் நடிக்கும் வாய்ப்பு கிடைத்தது. ஆனாலும், தொடர்ந்து அவருக்கு சரியான வாய்ப்பு கிடைக்கவில்லை. சற்று இடைவெளிக்கு பின், "புலி வேஷம் என்ற படத்தில் நடித்தார். அந்த படமும், காலை வாரியதால், நடிப்பு ஆசையை ஒத்தி வைத்து விட்டு, சொந்த ஊருக்கு மூட்டையை கட்டினார். தற்போது, மீண்டும், தமிழ் திரையுலகிற்குள் நுழைந்துள்ளார். "மத கஜ ராஜா என்ற படத்தில், ஒரே ஒரு பாடலுக்கு குத்தாட்டம் போடுவதற்காக, சதாவை ஒப்பந்தம் செய்தனர். அந்த பாடலுக்கு, அவர் காட்டிய ஈடுபாட்டை பார்த்து, ஆச்சரியப்பட்ட இயக்குநர், சதாவுக்காக கூடுதலாக சில காட்சிகளை, அந்த படத்தில் சேர்த்து விட்டாராம். இதனால், அந்த படத்தில் ஒரு பாடலுக்கு மட்டும், குத்தாட்டம் போடாமல், சிறப்பு தோற்றத்தில் நடிக்கிறாராம், சதா.



# ராஜா ராணி

நிஜ வாழ்க்கையில் நயன்தாரா - ஆர்யா திருமணம் விரைவில் நடக்கப் போகிறது என பத்திரிகைகள் ஆரூடம் கூறிக் கொண்டிருக்கும் நிலையில், புனே தேவாலயத்தில் இருவரும் திருமணம் செய்து கொண்டனர்.

ஆனால் இது ராஜா ராணி படத்தில் வரும் ஒரு முக்கிய காட்சிக்காக! அட்லீ குமார் இயக்கும் இந்தப் படத்தில் நயனும் ஆர்யாவும் ஜோடியாக நடிக்கின்றனர். நயன்தாராவின் தந்தையாக சத்யராஜ் நடிக்கிறார். சந்தானம் முக்கிய வேடத்தில் வருகிறார். இந்தப் படத்தில் நயன்தாராவும் ஆர்யாவும் திருமணம் செய்து கொள்வது போன்ற காட்சியை புனேயில் உள்ள தேவாலயத்தில் எடுக்க முடிவு செய்த இயக்குநர், அதற்காக புனே செயின்ட் மேரீஸ் தேவாலயத்தில் அனுமதி பெற்றார். நாட்டில் உள்ள ஏஞ்சலிகன் தேவாலயங்களில் மிகப் பழமையானது இதுதான். ஒரு தேவாலயத்தில் நடக்கும் திருமணத்தில் என்னென்ன சடங்குகள் முறைப்படி நடக்குமோ, அதில் ஒன்றுவிடாமல் இருவருக்கும் நடத்தப்பட்டது. ஆர்யா கோட் சூட் அணிந்திருந்தார். நயன்தாரா பாரம்பரிய வெள்ளை கவுன் அணிந்து வந்தார். கிட்டத்தட்ட மூன்று நாட்கள் இந்த திருமணக் காட்சி படமாக்கப்பட்டது. ஆனால் அது சினிமாக்காட்சி போலவே தெரியவில்லை. நிஜ திருமணம் போலவே இருந்தது, என்கிறார்கள் அங்கிருந்த ராஜா ராணி குழுவினர்.



விவேக்

# உலக நாயகனுடன் முதன் முதலாக இணைகிறார் நகைச்சுவை நாயகன்

ரஜினி, விஜய், அஜீத், சூர்யா, என முன்னணி நடிகர்கள் அனைவருடனும் இணைந்து நடித்திருப்பவர் விவேக். இப்படி முன்னணி நடிகர்களுடன் இணைந்து நடித்த விவேக்கிற்கு எட்டா கனியாக ஒன்று இருந்தது. அது வேறு ஒன்றுமில்லை அவர் இதுவரை கமல்ஹாசனுடன் இணைந்து ஒரு படத்தில் கூட நடித்ததில்லை என்பதுதான். தற்போது அதுவும் கூடிய சீக்கிரம் நிறைவேற இருக்கிறது. விரைவில் கமல்ஹாசன்-விவேக் கூட்டணி புதிய படம் ஒன்றில் கைகோர்க்கிறது. இதனை அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உறுதிப்படுத்தியிருக்கிறார் கமல். இருப்பினும் அதிகாரபூர்வ அறிவிப்பு எதுவும் வெளியாகவில்லை. விஸ்வரூபம் 2 திரைப்படத்திற்கு பிறகு கமல் இயக்கும் புதிய படத்தை ஒஸ்கார் ரவிச்சந்திரன் தயாரிக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறநெறிக்கும் அறிவியலுக்கும் வித்தி யாசம் என்ன?

*பா.அனு, கொற்றையூர்*

அன்பின் வியாசரே!

ஆலயங்களுக்கு வருகின்ற மக்கள் கூட்டம் விழுந்து விழுந்து தமது குடும்பத்தின் பெயர்களை மாறிமாறிச் சொல்லி அர்ச்சனை செய்கின்றார்களே. இதனால் பயன் உண்டா?

*நல்லது நடக்குமா தீயது நடக்குமா எனும் வாதப் பிரதிவாதங்களை விட்டு நாம் நல்லது நினைத்தால் நல்லதே நடக்கும். தீயது நினைத்தால் தீயதே நடக்கும். இவையெல்லாம் மனம் சார்ந்த விடயங்கள். உன் நினைவுகளெல்லாம் நல்லதாகவும் ஆரோக்கியமானதாகவும் இருந்தால் போதும்.*

*செ.மிதுஷா, பருத்தித்துறை*

அன்பின் வியாசரே!

புதிய வருடத்திற்காக ஏதாவது புதிய திட்டம் தீட்டி வைத்திருக்கிறீரா?

*குடும்பச் செலவு அதிகரித்துக் கொண்டு செல்கிறது.(தொகையும்தான்) அதனால் வீட்டிலேயே ஏதாவது சுய தொழில் செய்யலாம் என்னும் திட்டம்.*

*ஜே.புருசோத், நெல்லியடி*

அன்பின் வியாசரே!

அறநெறிக்கும் அறிவியலுக்கும் வித்தியாசம் என்ன?

*அ.சீதாராம், பருத்தித்துறை*

அன்பின் வியாசரே!

உங்களை பார்க்கனும் போல் தோன்றுகின்றது. உங்கள் e.mail முகவரி தருவீர்களா வியா அண்ணா?

*பார்க்க வேண்டுமா? நேரில் வாரும் என் வீட்டுக் கதவு எப்போதும் தி...ற... ந்...தே...யிருக்கும்.*




*சமதிலா,*

அன்பின் வியா அண்ணா!

காதலித்து ஏமாற்றுவதால் அவர்களுக்கு என்ன பயன்?

*ஏதோ ஒரு பயனை எதிர்பார்ப்பார்கள். அந்தப் பயன் கிடைத்து விட்டாலும் கிடைக்காவிட்டாலும் ஏமாற்றம் நிச்சயம். எல்லாம் ஊழ்வினைப் பயன்தான்.*

*சௌனா, பருத்தித்துறை*

அன்பின் வியாசரே!

2013 இல் A/L Exam எழுதுகின்றேன். ரொம்ப பயமாக இருக்கு என்ன செய்யலாம்?

*நிறைய படித்தவனுக்கும் ஒன்றுமே படிக்காதவனுக்கும் பயம் வராது. நடுவில் நிற்பவனுக்குத்தான் பயம் வரும். எனவே, முதலாவதை பின் தொடரும் பயம் பறந்து போகும்.*

### இப்படித்தான் வாழ வேண்டும் என்பதை விட்டு எப்படியும் வாழலாம் என்பவர்களுக்கு தாங்கள் கூறும் அறிவுரை?

*பொ. இளவரசி, பருத்தித்துறை*

அன்பின் வியாசரே!

பொதுநலவாதிகளை விட சுயநலவாதிகளையே இன்று நல்லவர் என போற்றுகிறார்கள். அதைப்பற்றிய உங்களின் கருத்து என்னவோ?

*நடுவீதியில் ஒரு பாரிய கல் ஒன்று கிடக்கிறது. அதை யாரும் கண்டுகொள்ளவில்லை. அந்த வீதியால் வந்த பொது நலவாதி ஒருவன் அக்கல்லை தூக்கி ஓரமாக போட்டு விட்டுச் சென்று விட்டான். அந்த வழியால் வந்த சுயநலவாதி ஒருவன் அந்தக் கல்லின் பக்கத்தில் நின்று படமெடுத்து அதை தான் அகற்றியதென்றும் மக்கள் நலன்தான் தன் நலன் என்றும் விளம்பரப்படுத்து கின்றான். பொதுநலவாதி பொதுநலனை சுயநலமாக்க மாட்டான். சுயநலவாதி பொது நலத்தை சுயநலமாக்கி விடுவான்.*

*எம்.சுவாத்திகா, யாழ்ப்பாணம்*

அன்பின் வியாசரே!

யாழ்ப்பாணத்தின் கல்வி நிலைமை இவ்வாறு போனால் என்ன நடக்கும்?

*யாழ்ப்பாணம் பாழ்ப்பாணம் ஆகிவிடும்.*

*அறநெறி அதிகம் போதனை செய்யும். அறிவியல் அதிகம் சோதனை செய்யும்.*

*தர்மவேணி, நாவலூர்.*

அன்பின் வியாசரே!

முறை தலை இல்லாமல் பேசுகின்றான் என்று கூறுவார்களே! அதற்கு விளக்கம் தர முடியுமா?

*ஒருவன் அவசரமாக ஓடி வந்து ஐயா எனக்கு இன்று லீவு வேண்டும். என்னுடைய அம்மாவின் கணவரின் தகப்பனின் மனைவி இறந்து விட்டார் என்கிறான்.*

*சு.ஜெயரூபன், பருத்தித்துறை*

அன்பின் வியாசரே!

பெண்–மண்–பொன் இவற்றில் தாங்கள் எதை அதிகம் விரும்புவீர்கள்?

*ஒரு காலத்தில் மூன்றையும் அதிகம் விரும்பினேன். தற்போது மூன்றையும் அதிகம் வெறுகின்றேன். ஏனென்றால் மூன்றாலும் பட்டு நொந்தவன் நான்.*

*க.முத்துராசா, கட்டைக்காடு*

அன்பின் வியாசரே!

இப்படித்தான் வாழ வேண்டும் என்பதை விட்டு எப்படியும் வாழலாம் என்பவர்களுக்கு தாங்கள் கூறும் அறிவுரை?

*இவர்களுக்கு அறிவுரையா? இவர்கள் சைவம், அசைவம் அதனுடன் சேர்த்து கல்,மண் என அனைத்தையும் சேர்த்து சாப்பிட்டு விட்டு நம் நாட்டுத் தலைவர்கள் சிலைமேல் இருந்து அசிங்கம் செய்து விட்டு சென்று விடும் காக்கைகள் போன்றவர்கள். இவர்களுக்கு அறிவுரை கூறினால் அந்தச் சிலைகளின் நிலைதான் நாளை நமக்கும்.*

### வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும்....

**அரச சபை கூடியிருக்கிறது.**

**மந்திரி ஒருவர் அவசரமாக அரண்மனைக்கு ஓடி வருகின்றார்.**

**அரச சபையில் இருந்தவர்கள் வியப்பில் ஆழ்ந்திருக்க...**

**மந்திரி: மன்னா தாங்கள் போர்க்குற்றம் புரிந்து விட்டதாக எதிர்நாட்டு மன்னன் தங்கள் மேல் குற்றம் சுமத்தியுள்ளான் .**

**மன்னன்: அப்படியா நான் என்ன குற்றம் செய்தேன்.**

**மந்திரி: போர்க் களத்தில் தாங்கள் புறமுதுகு காட்டும் வேளை One, Two, Three சொல்ல முன்னர் ஓடிவிட்டீர்களாம்!**

### அன்பு வாசகர்களே....!

உங்கள் கேள்விகளை

ஆசிரியர், வியாசர் பதில்கள்

இல.3, 2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி , யாழ்ப்பாணம்
என்ற முகவரிக்கு அனுப்பி
வைக்கவும்

# இலத்திரனியல் கழிவுகளை முறைப்படி அழிக்க வேண்டும்

## சுகாதார அமைச்சின் செயலாளர் ஆலோசனை

(கொழும்பு)

வைத்தியசாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் இலத்திரனியல் கழிவுகளை அரசாங்க ஒழுங்கு விதிகளுக்கமைய அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சு விசேட சுற்று நிருபம் மூலம் சகல வைத்தியசாலைகளுக்கும் அறிவித்துள்ளது.

இலத்திரனியல் கழிவுகள் மனிதனுக்கு கேடு விளைவிக்கக் கூடிய மோசமான இரசாயன பதார்த்தங்களை கொண்டது என்பதால் அவற்றை மிகவும் கவனமாக அழிக்க வேண்டும் என சுகாதார அமைச்சின் செயலாளர் சகல வைத்தியசாலைகளுக்கும் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இலத்திரனியல் கழிவுகளை அழிப்பதனால் ஏற்படும் பாதிப்புக்களை தடுப்பதற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபை இலத்திரனியல் கழிவுகளை பொறுப்பேற்பதற்காக சில நிறுவனங்களே பதிவு செய்துள்ளன.

இதன்படி குறித்த இலத்திரனியல் கழிவுகளை மத்திய சுற்றாடல் அதிகார சபையில் பதிவு செய்துள்ள நிறுவனங்களுக்கு விலைமனுக்கோரி அரசின் சட்டம் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு ஏற்ப வழங்குமாறு புதிய சுற்று நிருபத்தினூடாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன் இலத்திரனியல் கழிவுகள் புதைக்கப்பட்டு எரிக்கப்பட்ட நிலையில் அழிக்கப்பட்டன.

இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் அவற்றிலிருந்து வெளியேற்றப்படும் சகல பகுதிகளும் இலத்திரனியல் கழிவுகளாக குறிப்பிடப்படுகின்றன. இலத்திரனியல் கழிவுகளினால் பல்வேறு சூழல் மாசுகள் ஏற்படுவது மட்டுமன்றி மனிதனுக்கும் கேடு ஏற்படுவதாக மருத்துவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ–2)

# சித்திரை பௌர்ணமி விழா

(யாழ்ப்பாணம்)

அல்வாய் மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி பீடத்தின் சித்திரைப் பௌர்ணமி விழா எதிர்வரும் 24,25 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இதற்கமைய 24 ஆம் திகதி புதன் கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றமும் அதனைத் தொடர்ந்து யாக ஆரம்ப பூஜையும் நடைபெறும். மறுநாள் வியாழக்கிழமை காலை 7 மணி தொடக்கம் சிறப்பு அபிஷேகம், திருவடிக்கு பாதபூஜை, யாக பூஜை என்பனவும் இடம்பெறவுள்ளதாக நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (அ)

# சிறுபோக பயிர்ச்செய்கையில் விவசாயிகளுக்கு ஆர்வமில்லை

(மல்லாவி)

முத்தையன்கட்டு குளத்தின் கீழ் சிறுபோக நெற் செய்கையில் ஈடுபடும் விவசயிகளுக்கான இறுதி விதைப்பு திகதி எதிர்வரும் 25 ஆம் திகதி வியாழக்கிழமையுடன் முடிவடைகின்றது. இன்னும் 75 சதவீதமான விவசாயிகள் நெல்விதைப்புக்குரிய அடிப்படை வேலைகளைக்கூட நிறைவு செய்யாத நிலையில் காணப்படுகின்றனர்.

இது தொடர்பில் தெரிய வருவது, இம் முறை முத்தையன்கட்டுக்குளத்தின் கீழ் 2 ஆயிரத்து 500 ஏக்கர் நெற்செய்கையும் ஆயிரம் ஏக்கரில் உப உணவுச் செய்கையும் மேற்கொள்ளவுள்ள நிலையிலேயே இவ்வாறு விவசாயிகள் மத்தியில் ஆர்வம் இன்மை காணப்படுகின்றது.

கடந்தகால போகம் மற்றும் சிறு போகங்களின் போது காலநிலை மாற்றத்தால் பெரும் அழிவுகளை விவசாயிகள் சந்தித்தனர்.

இதனால் வங்கிகளில் கடன் பெற்ற கடனை மீள்ளிப்புச் செய்ய முடியவில்லை. இம் முறை விவசாய நடவடிக்கைக்கு வங்கிகள் பலருக்கு கடன் வழங்க மறுத்துள்ளமையால் விவசாயிகள் மத்தியில் ஆர்வமின்மை காணப்படுகின்றது.

எனவே, சமூக நலன் கொண்ட பொது அமைப்புக்கள் விதை நெல் மற்றும் உழவு வேலைக்குரிய உதவிகள் வழங்கி உதவ வேண்டும் என கோரிக்கை ஒன்றை விவசாயிகள் விடுத்துள்ளனர். (அ–3–15)

# பாதைகள் சீரின்மையால் போக்குவரத்து முடக்கம்

## மாந்தை கிழக்கு மக்கள் அந்தரிப்பு

(மல்லாவி)

மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களுக்கான பயணிகள் பேருந்து சேவை பாதைகள் சீரின்மை காரணமாக தற்காலிகமாக நிறுத்தப்படவுள்ளதாக தனியார் பேருந்து உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் தெரிவிக்கையில், வன்னி இறுதிப் போரின் போது பல வழிகளிலும் பாதிக்கப்பட்ட மாந்தை கிழக்குப் பிரதேச பாதைகள் மக்கள் மீள்குடியேறி 3 1/2 வருடங்கள் கடந்த நிலையிலும் சீர்செய்யப்பட வில்லை.

ஆபத்து நிறைந்த பயணமாகவே இவ் வீதியினூடான போக்குவரத்துப் பணி காணப்படுகின்றது.

எமது பேருந்துகள் பல்வேறு சம்பவங்களில் பலத்த சேதங்கள் ஏற்பட்ட போதும் மக்கள் நலன் கருதி சேவையாற்றி வரும் நிலையில் மிக அண்மைக்காலமாக மல்லாவி ஊடாக விநாயகபுரம், நெட்டாங்கண்டல் வரையான போக்குவரத்தும் வீதியும் மல்லாவி, பாலிநகர், சிவபுரம், பாண்டியன் குளம் ஊடாக நெட்டாங்கண்டல் வரையான போக்குவரத்து வீதியும் துவிச் சக்கரவண்டிகள் கூட பயணிக்க முடியாத நிலையில் காணப்படுகின்றது. இது தொடர்பாக பலரிடமும் நாம் அறிவித்தும் பயன் இல்லை.

எனவே, பாதை திருத்தம் செய்யும் வரை பயணிகள் சேவையை தற்காலிகமாக நிறுத்தி வைக்கவுள்ளோம் எனப் பேருந்து உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். (அ–3–15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் தேவைகளையும் கவனத்தில் கொள்ளுங்கள்

## விவசாயிகள் கோரிக்கை

இரணைமடுக்குளத்தின் மேற்குப் பக்க விவசாயிகளின் நலனில் அக்கறை கொண்டு சிறுபோக பயிர்ச்செய்கைக்கு உதவியது போன்று புதுமுறிப்புகுளத்தின்கீழ் கஷ்டத்துடன் பயிர் செய்து வரும் சிறு விவசாயிகளின் குறைபாடுகளை நீக்குவதற்கு பாராளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதி தலைவருமான மு.சந்திரகுமார் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று அப்பகுதி சிறு விவசாயிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

1984ஆம் ஆண்டு நெற்செய்கையை ஆரம்பித்த போது உள்வாய்க்கால்கள், உள்வீதிகள் குறித்து அடையாளம் காட்டப்பட்டிருந்தது.

இருப்பினும் இவ்வாய்க்கால்கள் வழியாக செல்லும் கழிவு நீர் வழிந்தோடுவதற்கு வழி இன்மையால் நெல் வயல்களுக்குள் செல்வதால் விவசாயிகள் பாதிப்பை எதிர்நோக்குகின்றனர். குறிப்பாக சிவன்சோலை என்ற கிராமம் அமைந்துள்ள பகுதியில் உள்ள கழிவு வாய்க்கால்கள் நீர் பாய்ச்சும் வாய்க்கால்களில் சென்று முடிவடைகின்றன. அத்துடன் 236 பயனாளிகளைக் கொண்ட சிவநகர் வயல் காணிகளில் கூடுதலாக பயிர் செய்யும் நடுப்பகுதியில் அமைந்துள்ள வீதியையாவது திருத்தம் செய்து தருமாறு பல தடவைகள் உரிய திணைக்களங்களிடமும் பாராளுமன்ற உறுப்பினரிடமும் முன்னர்கோரிக்கை விடப்பட்டு இருந்தது. இவைபோன்ற பல பிரச்சனைகளை இனங் கண்டு தீர்வு செய்ய ஏதுவாக புதுமுறிப்பு குளத்தின் கீழ் பயிர் செய்யும் அனைத்து விவசாயிகளையும் உரிய திணைக்களத்தினரையும் ஒருங்கிணைத்து பாராளுமன்ற உறுப்பினர் தீர்வு காணவேண்டுமென்பதே அப்பகுதி விவசாயிகளின் வேண்டுகோளாகும். (அ-3-254)

# வைத்தியசாலையில் பாடசாலைக் கல்வி

சுகயீனம் காரணமாக வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படும் பாடசாலை செல்லும் வயதுடைய மாணவர்களுக்கு வைத்தியசாலை களில் வைத்து கல்வி புகட்டுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன முன்வைத்த இந்த ஆலோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. முதற்கட்டமாக கொழும்பு லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெறும் சிறுவர்களுக்கு கற்பிப்பதற்காக 4 சிங்கள மொழிமூல ஆசிரியர்களையும் ஒரு தமிழ்மொழி மூல ஆசிரியரையும் நியமிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. புதிதாக கல்வியியல் கல்லூரிகளில் இருந்து வெளியேறும் 5 ஆசிரியர்கள் இங்கு சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். (அ-2)

# மரண அறிவித்தல்



## கனகசபை யோகேந்திரன் (கிளி மாஸ்ரர்)

அல்வாய் மேற்கு திக்கத்தை பிறப்பிடமாகவும் நெசவு சாலை ஒழுங்கை தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை யோகேந்திரன் (கிளிமாஸ்ரர்) நெல்லியடி திக்கம் கிறிஸ்ரல் சென்ரர் நிர்வாகியும் கணித ஆசிரியரும் 16.04.2013 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் செல்லம்மா காலஞ்சென்ற கனகசபை ஆகியோரின் செல்வப் புதல்வரும் இந்திரமாலா (மல்லாகம் ம.வி. ஆசிரியர்) இன் பாசமிகு கணவரும், செல்வமலர் கனகாம்பிகை, சூரியமூர்த்தி (லண்டன்), சந்திரமூர்த்தி (டென்மார்க்), சத்தியமூர்த்தி (டென் மார்க்), ஈஸ்வரமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற இரத்தினம் கனகநாயகி அம்மா ஆகியேரின் பாசமிகு மருமகனும் பாலகுமாரன் (இளைப்பாறிய நகரசபை - உத்தியோகத்தர்) பாலசுப்பிரமணியம், இந்திரஜித் (G.S.தெல்லிப்பழை) ஆகியோரின் ஆருயிர் மைத்துனரும் துஷாந், வினோத், பிரவீனா, தீபனா ஆகியோரின் சிறிய தந்தையும் ஆரணி, கார்த்திகன் ஆகியேரின் அன்பு மாமனாருமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது பிறப்பிடமாகிய திக்கத்தில் 21.04.2013 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திக்கம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித் தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:** மனைவி. குடும்பத்தினர்.

# விளையாட்டு விழா

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச பாதுகாப்பு படையினரால் சித்திரை புத்தாண்டையொட்டி நடத்தும் விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி தொடக்கம் சாவகச்சேரி நகராட்சி மன்ற மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாரம்பரிய விளையாட்டுக்களுடன் கலை நிகழ்வுகளும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-29)

# மரண அறிவித்தல்



## மயில்வாகனம் தர்மலிங்கம்

வாதரவத்தை புத்தூரை பிறப்பிடமாகவும் இராமநாதன் லேன் கோப்பாய் தெற்கு கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் தர்மலிங்கம் (17.04.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் கால சென்றவர்களான மயில்வாகனம் சின்னத்தங்கம் தம்பதியினரின் மகனும் நல்லபிள்ளையின் கணவரும், காலஞ்சென்றவர்களான சின்னையா (திருகோணமலை), மாணிக்கவாசகர் (வாதரவத்தை), தெய்வானை (வாதரவத்தை), சின்னப்பிள்ளை (திருகோணமலை), இளையபிள்ளை (திருகோணமலை) ஆகியோரின் சகோதரனும் தவமலர் (கனடா), சத்தியசீலன் (சுவிஸ்), நந்தினி (கோப்பாய்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சோமசுந்தரலிங்கம் (கனடா), ராகினி (சுவிஸ்), ராஜ்மோகன் (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் திருக்குமரன், சகிலா, சுதர்ஷன், ஜெயதர்சினி, செந்தூரன், கார்த்திகா, கார்த்திகன், கிருஷன், கரிஷன், ஆகியோரின் பாட்டனும் ஹெவினின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பெறாமகனான மாணிக்கவாசகர் தங்கத்துரையின் (வாதரவத்தை புத்தூர்) இல்லத்தில் 21.04.2013 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

**தொடர்பு: 0776693195** (2415) **குடும்பத்தினர்**




Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## ஐ.நாவுக்கான இந்தியாவின் புதிய நிரந்தரப் பிரதிநிதி

ஐக்கிய நாடுகள் சபைக்கான இந்தியாவின் புதிய நிரந்தரப் பிரதிநிதியாக அசோக்குமார் முகர்ஜி பொறுப்பேற்றுள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சில் சிறப்புச் செயலாளராக பணியாற்றிய அசோக்குமார் முகர்ஜி அப்பொறுப்புக்கு நியமிக்கப்பட்டார்.

அவர் தமது பணி நியமன ஆவணங்களை ஐ.நாவின் செயலாளர் நாயகம் பான் கீ மூனிடம் ஒப்படைத்து தனது பணியினைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இதன்போது அசோக்குமார் முகர்ஜியின் நியமனத்தை வரவேற்ற பான் கீ மூன் ஐ.நாவில் இந்தியாவின் பங்களிப்பை பாராட்டினார்.

அப்போது ஐ.நாவில் இந்தியாவின் அர்ப்பணிப்பை அசோக்குமார் முகர்ஜி விபரித்தார் என நியூயோர்க்கில் உள்ள இந்தியத் தூதரகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நாவுக்கான இந்தியாவின் நிரந்தர பிரதிநிதியாக இருந்த ஹர்தீப்விங் பூரி கடந்த மாதம் ஓய்வு பெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## 116 ஆவது அகவையில் உலகின் மூத்த மனிதர்

உலகின் மூத்த மனிதரான ஜிரோமொன் கிமுரா தனது 116 ஆவது பிறந்தநாளை நேற்று முன்தினம் கொண்டாடியுள்ளார்.

ஜிரோமொன் கிமுரா ஜப்பானின் மேற்குப் பகுதியில் 1897 ஆம் ஆண்டில் பிறந்தார். 20 ஆம் நூற்றாண்டு பிறக்கும் முன்னர் பிறந்து உலகில் இன்றுவரை வாழ்ந்து கொண்டிருக்கும் 12 பேரில் இவர்தான் மூத்தவராவார். (அ-5)

# ஏழைகளின் எண்ணிக்கையில் இந்தியா முதலிடத்தில்

(வோஷிங்டன்)

உலகில் ஏழைகள் அதிகம் வாழும் நாடு இந்தியாதான் என உலக வங்கியின் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக நாடுகளில் 1.2 பில்லியன் ஏழைகள் வாழ்வதாக தெரிவித்துள்ள அந்த அறிக்கையில் மூன்றில் ஒரு பகுதி மக்கள் தொகை இந்தியாவில் வாழ்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

2030 ஆம் ஆண்டுக்குள் உலக நாடுகளில் ஏழ்மையை ஒழிக்கும் திட்டத்திற்காக உலக வங்கி நடத்திய ஆய்வின் மூலமே உலகின் ஏழ்மை அதிகமாக உள்ள நாடுகள் கண்டறியப்பட்டுள்ளன.

இந்தியர்களில் பலர் நாளொன்றுக்கு 65 ரூபாவுக்கும் குறைந்த செலவில் வாழ்ந்து வருவதாக அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (அ-5)

# கூடங்குளம் அணு உலையில் கதிர்வீச்சு அபாயம் உறுதி

### சீர்படுத்திவிட்டதாக கூறுகிறது வாரியம்

(புதுடில்லி)

கூடங்குளம் அணு உலையில் கதிர்வீச்சு அபாயம் இருப்பதாக போராட்டக்குழுவினர் குற்றம் சாட்டி வரும் நிலையில் அங்கு தரம் குறைந்த பொருட்கள் பயன்படுத்தப்பட்டிருப்பதாக செய்தி வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அணுமின் நிலையம் உற்பத்தியைத் தொடங்கும்போது பேரழிவை ஏற்படுத்தும் என்பதால் பணிகளை உடன் நிறுத்த வேண்டும் என்றும் போராட்டக் குழுவினர் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் கூடங்குளம் அணு உலையில் குறைபாடுள்ள பாகங்கள் பொருத்தப்பட்டதை இந்திய அணு சக்தி ஒழுங்கு முறை வாரியம் ஒப்புக் கொண்டுள்ளது டன் குறிப்பிட்ட ஒரு பிரிவின் 4 வால்வுகளில் பிரச்சினை இருந்ததாகவும் அதற்குப் பதில் வேறு வால்வு பாகங்கள் மாற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

மேலும் கூடங்குளம் அணு உலையில் பாதுகாப்புக்காக ஆயிரக்கணக்கான வால்வுகள் பொருத்தப்பட்டுள்ளதாகவும் இந்த வால்வுகள் அனைத்தையும் ஆய்வுக்குட்படுத்திய பின்னரே தடையில்லா சான்றிதழ் வழங்கப்படும் எனவும் அணுசக்தி ஒழுங்குமுறை வாரியம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, அணு உலைக்கு எதிரான போராட்டக்குழுவினர் தரை வழியாக கூடங்குளம் அணு மின் நிலையத்தை முற்றுகையிடவுள்ளதாக அறிவித்திருந்தமை குறிப்பிடத்தககது. (அ-5)

# திராவிடக் கட்சிகளுடன் கூட்டணி சேர மாட்டோம்

தமிழ்நாட்டில் திராவிடக் கட்சிகளுடன் கூட்டணி சேரப் போவதில்லை என காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் ராகுல்காந்தி அதிரடியாக அறிவித்துள்ளார்.

இந்திய பாராளுமன்றத் தேர்தல் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெறும். ஆனால், இப்போது உள்ள அரசு பல்வேறு பிரச்சினைகளைச் சந்தித்து வருவதால் முன் கூட்டியே தேர்தல் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அநேகமாக இந்த ஆண்டே தேர்தல் நடைபெறும் என்று அரசியல் நோக்குநர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் சமாஜ்வாதி கட்சியின் வேட்பாளர்களை முலாயம் சிங்கும் பகுஜன் சமாஜ்வாடி கட்சி வேட்பாளர்களை மாயாவதியும் அறிவித்துள்ளனர்.

இந்நிலையில் ராகுல்காந்தி காங்கிரஸ் கட்சி தேசிய அளவில் குறைந்தது 200 தொகுதிகளிலாவது வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கில் பல்வேறு தேர்தல் வியூகங்களை வகுத்துள்ளார்.

இதையடுத்து மராட்டியத்தில் தேசியவாத காங்கிரஸுடன் கேரளாவில் முஸ்லிம் லீக்குடனும் மணி பிரிவு கேரள காங்கிரஸுடன் கூட்டணி தொடரும் என்று தெரிவித்துள்ளதுடன் பீகாரில் பஸ்வானுடனும் லாலுவுடனும் காங்கிரஸ் கூட்டணி அமைக்கத் திட்டமிட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் மேற்கு வங்கத்தில் மம்தாவுடன் கூட்டணி அமைக்க காங்கிரஸ் விரும்பவில்லை எனவும் இது போன்று தமிழ்நாட்டில் திராவிடக் கட்சிகளுடன் கூட்டணி வைக்க அது விரும்பவில்லை என்பதோடு திராவிடக் கட்சிகள் அல்லாத மாநிலக் கட்சிகளுடன் கூட்டணி வைக்க ராகுல்காந்தி விரும்புவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-5)

# தமிழகத்தின் இலவச நோய் கர்நாடகத்திற்கும் தாவியது

### தேர்தல் அறிக்கையில் தடல் புடல்

(பெங்களூர்)

கர்நாடக சட்டசபைத் தேர்தல் எதிர்வரும் மே மாதம் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் ஆளுங் கட்சியான பாரதீய ஜனதா தமிழகத்தில் உள்ளதைப் போன்று பெரும்பாலான திட்டங்களைத் தனது தேர்தல்விஞ்ஞாபனத்தில்குறிப்பிட்டுள்ளது.

இதன்படி வறுமைக் கோட்டுக்கு கீழுள்ள மக்களுக்கு கிலோ ஒரு ரூபாய் விலையில் மாதம் 25 கிலோ அரிசி வழங்கப்படும் எனவும் படித்த வேலையில்லாத இளைஞர்கள் 10 இலட்சம் பேர் வேலை வாய்ப்பு பெறும் வகையில் திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் மாநிலம் முழுவதும் 24 மணி நேர தடையில்லா மின்சாரம் வழங்கப்படும். அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்ப டும். அனைவருக்கும் இலவச காப்புறுதி விவசாயிகள் பயன்பெறும் வகையில் காப்புறுதி திட்டம் என்பனவும் செயற்படுத்தப்படும்.

பாடசாலையில் இறுதியாண்டு படிக்கும் மாணவர்கள் மற்றும் கல்லூரி மேற்படிப்பு படிக்கும் மாணவர்களுக்கு இலவச மடிக்கணனி வழங்கப்படும். அனைத்து அரச பாடசாலை, கல்லூரிகளுக்கும் இணையத்தள வசதிகள் செய்து கொடுக்கப்படும். விவசாயிகளுக்கான சூரிய சக்தி மின் மோட்டார் திட்டம் செயற்படுத்தப்படும் எனவும் பா.ஜ.க. தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ளது. (அ-5)

# சீனாவை உலுக்கிய நில அதிர்வு; 100 உயிர்களை பலியெடுத்தது!



சீனாவின் தென்மேற்கில் சிசூயான் மாகாணத்தில் நேற்று காலை 8 மணியளவில் அங்குள்ள யான் நகர் அருகே கடுமையான நில நடுக்கம் ஏற்பட்டது.

இதனால் அப்பகுதியில் சுமார் 20 விநாடிகளுக்கு மேல் பூமி அதிர்ந்தது. இதனால் வீடுகளில் இருந்த மக்கள் பீதியும் அதிர்ச்சியும் அடைந்தனர். வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இந்நிலநடுக்கம் காரணமாக வீடுகள் மற்றும் கட்டடங்கள் இடிந்தன. இதனால் ஏராளமானோர் இடிபாடுகளில் சிக்கியுள்ளனர். இதையடுத்து தகவல் அறிந்த மீட்புப் படையினர் விரைந்து வந்து மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர்.

இதன்போது 100 பேர் வரை பலியாகியதோடு மேலும் பலர் இடிபாடுகளில் சிக்கியுள்ளனர். இடிபாடுகளில் சிக்கியுள்ளோரை மீட்கும் பணி தொடர்ந்து நடந்து வருகிறது.

இதற்கிடையே 7 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் பதிவானதாக அறிவிக்கப்பட்டுள்ளது. லூஷான் நகரை மையமாக கொண்டு பூமிக்கு அடியில் 13 கிலோமீற்றர் ஆழத்தில் நிலநடுக்கம் உருவாகியுள்ளது. யான் நகரம் அருகே ஏற்பட்ட நிலநடுக்கம் அதை சுற்றியுள்ள பகுதிகளிலும் உணரப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கடந்த 2008 ஆம் ஆண்டு இதே சிசூயான் மாகாணத்தில் பூகம்பம் ஏற்பட்டதில் 70 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-5)



தலைநகர் டில்லியில் 5 வயது சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாகி பலியான விவகாரத்தை தொடர்ந்து, குற்றவாளிகளுக்கு விரைவில் தண்டனை வழங்கக்கோரி, எய்ம்ஸ் மருத்துவமனை முன்பு ஆம் ஆத்மி கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதைப் படத்தில் காணலாம்.

# பொஸ்டன் குண்டுவெடிப்பு; ரஷ்யா அனுதாபப் பகிர்வு

பொஸ்டன் குண்டு வெடிப்பு சம்பவத்திற்கு தனது அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதற்காக ஒபாமாவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட ரஷ்ய ஜனாதிபதி புடின் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் பொஸ்டன் நகரில் நிகழ்ந்த குண்டு வெடிப்பில் குற்றவாளிகளாக கருதப்பட்ட ரஷ்ய நபர்கள் இருவரில் ஒருவரைப் பொலிஸார் நேற்று முன்தினம் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றதுடன் மற்றொருவரைக் கைது செய்துள்ளனர்.

ரஷ்யாவில் உள்ள செச்னியா பகுதியைச் சேர்ந்த இவர்கள் இருவரும் உடன் பிறந்த சகோதரர்கள் என்பதும் கடந்த ஓராண்டாக அமெரிக்காவில் தங்கியிருந்ததும் எப்.பி.ஐ. பொலிஸாரின் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இந்நிலையிலேயே அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுடன் தொலைபேசியில் உரையாடிய ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் பொஸ்டன் குண்டு வெடிப்பு சம்பவத்தில் பலியானவர்களின் குடும்பங்களுக்கு ரஷ்ய மக்களின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறேன் என அனுதாபத்தை பகிர்ந்து கொண்டார்.

புடினின் அனுதாபங்களுக்கு நன்றி தெரிவித்த ஒபாமா தீவிரவாத தடுப்பு நடவடிக்கைகளில் ரஷ்யா காட்டி வரும் அக்கறையை பாராட்டியதாகவும் வெள்ளை மாளிகையில் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# உலகப் போரில் உயிரை நீத்த இந்தியர்களுக்கு இங்கிலாந்து அஞ்சலி

(லண்டன்)

இரண்டாம் உலகப்போரின்போது பிரிட்டிஷ் அரசுக்கு ஆதரவாக போரிட்டு இறந்த இந்தியர்களுக்கு நினைவஞ்சலி செலுத்த இங்கிலாந்து அரசு தீர்மானித்துள்ளது.

உலக வரலாற்றையே உலுக்கிய இரண்டாம் உலகப் போர் 1939 ஆம் ஆண்டு முதல் 1945 ஆம் ஆண்டு வரையில் தொடர்ந்து 6 ஆண்டு காலம் நடைபெற்றது. பிரிட்டன், ரஷ்யா, அமெரிக்கா, சீனா, பிரான்ஸ் ஆகிய நாடுகள் ஓரணியாகவும் ஜேர்மனி, ஜப்பான், இத்தாலி உள்ளிட்ட நாடுகள் எதிரணியாகவும் இந்த போரில் ஈடுபட்டிருந்தன. குறித்த போரில் சுமார் 7 கோடி பேர் பலியானதாக வரலாற்று ஆய்வாளர்கள் பதிவு செய்துள்ளனர்.

ஒன்றிணைந்த இந்தியா பிரிட்டனின் ஆதிக்கத்தில் இருந்தபோது சுமார் 12 இலட்சம் இந்தியர்களை ஆட்சியாளர்கள் போரில் ஈடுபடுத்தினர்.

இவர்களில் 74 ஆயிரம் பேர் பிரிட்டிஷ் ஆட்சியின் கீர்த்திக்காக உயிர்த் தியாகம் செய்தனர். இவர்களின் வீரத்தையும் தியாகத்தையும் போற்றிப் புகழ இங்கிலாந்து அரசு முடிவு செய்துள்ளது.

இதன் முதல் கட்டமாக அந்நாட்டின் மந்திரி பாரனோஸ் வார்சி இங்கிலாந்தில் வீர மரணம் அடைந்த 414 இந்தியர்களின் கல்லறைகளுக்கு சென்று நினைவஞ்சலி செலுத்தியதோடு அவர்களின் வீர தீர தியாகங்களை விளக்கும் குறிப்பேடுகளையும் அவர் வாசித்து அறிந்ததாக குறிப்பிடப்படுகின்றது. (அ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

> உண்டு சுவை கண்டவனும், உணர்ச்சி இன்பம் கண்டவனும் எளிதில் அவற்றை விடான்.
>
> – சித்தர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அன்று தாஜ்மகாலைக் கட்டியது காதல் இன்று கருவறையை அழிக்கும் காதல்

மகளே! ஏனம்மா இவ்வளவு லேட்? ரியூசன் முடிந்தவுடன் வீட்டுக்குத் திரும்பி விடவேண்டும் அல்லவா?

இப்படித்தன் பிள்ளையிடம் கேட்காத – கேட்க முடியாத பெற்றோர்களை ஒரு கணம் நினைக்கும் போது, இதயம் வெந்து கொள்ளும்.

எனது பிள்ளைக்கு எத்தனை மணிக்கு ரியூசன் ஆரம்பமாகும். எத்தனை மணிக்கு நிறைவு பெறும் என்ற தகவல்களை அறிந்து வைத்திராத பெற்றோரால் பிள்ளைகளைக் கட்டுப்படுத்தவும் ஒழுங்கு படுத்தவும் முடியாமல் போகும் என்பதை நாம் சொல்லித்தான் தெரிய வேண்டும் என்றில்லை.

தனது பிள்ளைகள் மீது பெற்றோர்கள் நம்பிக்கை வைத்திருப்பது நியாயமானது. அதற்காக புறச்சூழ்நிலைகள் மற்றும் சமகாலத்தில் எங்கள் சமூகக் கட்டுமானங்களின் பிறழ்வுகள், கையடக்கத் தொலைபேசிகளின் ஆக்கிரமிப்புகள், விரசத்தை சாதா கற்றுக்கொடுக்கும் இணையத்தளங்கள் என்ற சமகாலத் தகவல் தொழில் நுட்பங்களின் கோளாறுகள் எங்கள் பிள்ளைகளை தவறான வழிக்கு இட்டுச் செல்லும் என்ற எச்சரிக்கை உணர்வை ஒவ்வொரு பெற்றோரும் கொண்டிருப்பது கட்டாயமானதாகும்.

இந்த உலகில் ஒரு பிள்ளைக்கு இருக்கக் கூடிய அதி உயர்ந்த பாதுகாப்பை பெற்றோர்களால் மட்டுமே வழங்க முடியும்.

சட்டம், சமூகம் என்பனவற்றின் பாதுகாப்பு என்பது இழப்பிற்குப் பின்பானது.

ஆனால் இழப்பு ஏற்படாமல் இருப்பதற்கான பாதுகாப்பை பெற்றோர்களே வழங்க வேண்டும் – வழங்க முடியும்.

எனினும் இன்றைய பெற்றோர்கள், பிள்ளைகளின் ஒழுக்கவியல் தொடர்பில் கவலை கொண்டுள்ளனராயினும் அதற்குப் பரிகாரம் தேடமுடியாதவர்களாக இருக்கின்றனர்.

இந் நிலைமை மாற வேண்டும் – மாற்றப்பட வேண்டும்.

அண்மையில் மட்டக்களப்பு செங்கலடியில், பதினாறு வயதுடைய பெண்பிள்ளை ஒன்று, தனது காதலுக்காக தன்னைப் பெற்ற தாயையும் தந்தையையும் கொலை செய்த செய்தியை அறிந்த போது இதைவிடக் கொடுமை எதுவும் இல்லை என்று எண்ணத் தோன்றிற்று.

ஒரு காதலுக்காக தான் குடியிருந்த கோயிலை– தான் உயிர்ப்புற்ற கருவறையை–முன்னறி தெய்வமாக இருக்கக் கூடிய தன் அன்னையையும் பிதாவையும் கொன்றொழிக்க திட்டமிட்டபோது,

சாதாரண தரம் வரை பொதுக் கல்வியாக இருந்த சமய நெறியும், என் கண்ணே! மணியே! முத்தே! என்று தோளில் தூக்கி மகிழ்ந்த அன்பு நெறியும் என்னாயிற்று?

அன்புக்குரிய பெற்றோரே! அன்று காதலுக்காக தாஜ்மகால் கட்டப்பட்டது. ஆனால் இன்றோ காதலுக்காக, குடியிருந்த கோயிலும் உயிர் தந்த கருவறையும் அடித்து நொருக் கப்படுகிறது.

இதுதான் செங்கலடியில் கட்டப்பட்ட சமகாலக் காதலின் நினைவுத்தடம். நிலைமையைச் சிந்திப்பது உங்களிடம்.

## மணலாறில் குடியேறிய சிங்கள மக்களுக்கு காணி உறுதி வழங்கினார் ஜனாதிபதி மகிந்த

(கொழும்பு)

தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசமான மணலாறு பிரதேசத்தில் குடியேற்றப்பட்ட மூவாயிரம் சிங்கள குடும்பங்களுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று காணி உரித்து பத்திரங்களை வழங்கியுள்ளார்.

வெலிஓய, சம்பத்நுவர மகாவலி விளையாட்டரங்கில் நேற்றுக்காலை இடம்பெற்ற நிகழ்வில் மொரவெள, ஹெலெம்பவெள, ஜனகபுர, கஜபாபுர, நாயாறு, கொக்கிளாய் பகுதியில் குடியேற்றப்பட்ட சிங்கள குடும்பங்களுக்கே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த காணி உரித்து பத்திரங்களை வழங்கியுள்ளார்.

வெலிஓய என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ள மணலாறு பிரதேசத்தில் மகாவலி அபிவிருத்தித்திட்டத்தின் எல் வலயம் என்று குறியீட்டுடன் அரசாங்கம் சிங்கள குடியேற்றங்களை மேற்கொண்டு வருகிறது.

1984 ஆம் ஆண்டு மணலாற்றின் பெரும்பாலான தமிழ் கிராமங்களிலிருந்து தமிழ் மக்கள் யுத்தம் காரணமாக இடம்பெயர சிங்கள மக்கள் குடியமர்த்தப்பட்டனர்.

பின்னர் விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல்களால் அங்கு குடியேறிய சிங்கள மக்கள் இடம்பெயர்ந்து சென்ற போதிலும் போர் முடிபுக்கு வந்தபின்னர் அரசாங்கம் மற்றும் படைத்தரப்பினரின் ஆதரவுடன் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர்.

இந் நிலையில் தமிழ் மக்கள் விரட்டப்பட்ட பின்னர் மண்கிண்டிமலை, நாயாறு மற்றும் கொக்கிளாய் போன்ற கிராமங்களில் குடியேற்றப்பட்ட சிங்கள மக்களுக்கே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் இக் காணிகள் சொந்தமாக வழங்கப்பட்டுள்ளன. (எ–11)

## அரசியல் நோக்கங்களுக்காக தமிழக அரசியல்வாதிகள் தலையீடு

### றோ சுட்டிக்காட்டு

(சென்னை)

அரசியல் நோக்கங்களை முன்னிலைப்படுத்தியே தமிழக அரசியல்வாதிகள் இலங்கை விவகாரங்களில் தலையீடு செய்து வருவதாக இந்திய உளவுப் பிரிவான றோ தெரிவித்துள்ளதாக சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழக அரசியல் வாதிகள் இலங்கை எதிர்ப்பு போராட்டங்களை அரசியல் ராஜதந்திரமாகவே கருத வேண்டும் என இந்தியாவின் றோ புலனாய்வுப் பிரிவின் முன்னாள் விசாரணை ஆய்வாளர் ஜோதிசிங் தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழர்கள் மீது இந்திய அரசியல் கட்சிகளுக்கு மெய்யான அக்கறை எதுவும் கிடையாது. உண்மையிலே அக்கறை இருந்திருந்தால் போரின் இறுதிக் கட்டத்தில் அவ்வாறான போராட்டங்களை நடத்தியிருக்க முடியும்.

2014ஆம் ஆண்டு நடைபெறவுள்ள இந்தியப் பொதுத்தேர்தலை இலக்கு வைத்தே தமிழக அரசியல் கட்சிகள் இலங்கைக்கு எதிரான இந்தப்பாரிய பிரசாரங்களை ஆரம்பித்துள்ளன.

2014ஆம் ஆண்டு நடைபெறும் பொதுத் தேர்தலில் தமிழகத்தில் உள்ள தமது கூட்டணிக் கட்சிகளை தம்முடன் வைத்துக்கொள்வதற்காகவே இந்தியா இலங்கைக்கு எதிராக மனிதவுரிமை பேரவையில் வாக்களித்தது என அவர் குறிப்பிட்டுள்ளார். (எ–11)

## கிணற்றுனுள் விழுந்து சிறுவன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

கிணற்றுக்குள் விழுந்த சிறுவன் உயிர் இழந்துள்ளான். இச்சம்பவம் நேற்றுக்காலை9மணியளவில்வேலணையில் உள்ள வீடு ஒன்றில் இடம்பெற்றுள்ளது.

இதில் வேலணையைச் சேர்ந்த க.தலிசன் (வயது 10) என்ற சிறுவனே உயிர் இழந்துள்ளான். இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குறித்த சிறுவன் தனது வீட்டுக் கிணற்றில் தண்ணீர் அள்ளச் சென்றுள்ளான். அதன் போது கிணற்றில் தவறி விழுந்துள்ளான்.


கிணற்றினுள் தவறிவிழுந்த சிறுவனை உடனடியாக காப்பாற்ற முடியாததால் நீரினுள் மூச்சடக்கி இறந்துவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதோடு சம்பவம் தொடர்பிலான விசாரணைகளினை ஊர்காவற்றுறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ–4)

## சத்திய தரிசனம்



சம்சார சாகரத்தைக் கடக்க பக்தியென்ற ஓடமே சிறந்தது. சுமைகளை எல்லாம் தூர எறிந்துவிடு. நீ இலேசாகி, அலைகளின் மேலேயே நடந்துசென்று அந்த சாகரத்தைக் கடந்துவிடுவாய். கடவுள் உன்னை அழைத்துச் செல்வார். நான் உன்னிடம் இது ஒன்றுதான் கேட்கிறேன். உன் மனம் துக்கத்திலும் குரோதத்திலும் தத்தளிக்கும்போது நீ என்னிடம் வா. உன் மனதின் ஆழங்களை அவை எவ்வளவுதான் அசிங்கமாக இருந்தாலும் அவை எவ்வளவுதான் ஏமாற்றங்களால் தாக்கப்பட்டிருந்தாலும் என்னிடம் இறக்கி வைத்துவிடு. நான் உன்னைக் குணப்படுத்தி விடுவேன். விலகிப்போகச் சொல்லமாட்டேன். நான் உன் அன்பு அன்னை.



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## பெற்றோர்களை தினமும் கால் தொட்டு வணங்க வேண்டுமா?

தாய், தந்தையரையும் குருவையும் தினசரிக்கடமையாகக் கால் தொட்டு வணங்கவேண்டும் என்பது நம் முன்னோர்கள் வகுத்திருந்த விதி.

தாய் தந்தையருக்கும் குருவுக்கும் ஓர் மலர்ந்த புன்னகைகூட வழங்காத இத்தலைமுறைக்கு இந்த விதி ஓர் பழைய ஏற்பாடு. குருபக்தி அழிந்துவரும் இந்த தலைமுறைகளை வார்த்தெடுக்க இயலும் என்று நம்பிக்கை தரும் சில ஆசாரியர்களின் மூதுரைகளும் உள்ளன.

மதிப்பைத் தெரிவிக்கும் நான்கு ஆசாரங்கள் நாம் கண்டு வருகின்றோம். அதில் முதலாவது வணக்கம் என்றுகூறுவது. இரண்டாவது பெரியோர்களைக் கண்டால் எழுந்து நிற்பது. மூன்றாவது கால் தொட்டு வணக்கம். இறுதியாக சாஷ்டாங்க வணக்கம்.

தினமும் காலையில் பெரியவர்களின் கால் தொட்டு வணங்குவதனால் அவர்களுடைய ஆசீர்வாதம் பெறலாம் என்று நம் விசுவாசப் பிரமாணங்கள் கூறுகின்றன. அவர்கள் நமக்கு செய்த சேவைகளை நினைத்துத்தான் நாம் கால் தொட்டு வணங்குகிறோம். பதிலாக அவர்கள் ஆசியையும் பெறுகின்றோம்.

யோகாப்பியாசத்தை சிறந்த ஓர் உடற்பயிற்சியாகக் கண்டறிந்து வரும் இந்த நவீன காலத்தில் கால் தொட்டு வணங்குதல், சாஷ்டாங்க வந்தனம் என்பவை மிக முக்கியமான யோகா முறைகள். அதனால் இதை சிறந்த ஓர் உடற்பயிற்சியாகவும் காணலாம்.

பெற்றோர்களை வணங்குதல் குடும்பத்தில் ஒற்றுமையை உண்டாக்கும். பாசமும் நெருங்கிய உறவும் உறுதிப்படுகின்றன. இத்துடன் வீட்டில் நிலவும் நிம்மதியின்மையும் போய்விடும் என்ற விசுவாசமுண்டு.

பாதங்களுக்குத் தனிச்சிறப்பான தன்மைகள் உள்ளதாக புராணங்களும் முனிவர்களும் கருதியிருந்தனர். இறைவனின் திருப்பாதங்களையே முனிவர்கள் வணங்கியிருந்தனர். இந்து தர்மங்களில் சேவைகள் செய்யும் அரிஜன மக்கள் இறைவன் பாதங்களினின்று உதித்ததாகக் கூறப்பட்டிருப்பதைக் காணலாம்.

ப்ரணாமோ துக்க சமனம்
தம் நமாமி ஹரிம்வரம்

என்று பாகவதத்திலும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய ஆட்டங்கள்

DELHI DAREDEVILS

Vs

MUMBAI INDIANS

மாலை 4 மணி

KINGS XI PUNJAB

Vs

PUNE WARRIORS INDIA

இரவு 8 மணி


# வெற்றியை நோக்கி... சிம்பாவே

பங்களாதேஷ்-சிம்பாவே அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட்போட்டியில் சிம்பாவே அணி வெற்றியை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது.

ஒரு விக்கெட்டை இழந்து 95 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 3ஆம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த பங்களாதேஷ் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 134 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. அவ்வணியின் இறுதி 9 விக்கெட்டுக்களும் 32 ஓட்டங்களுக்கு வீழ்த்தப்பட்டதோடு, இறுதி 5 விக்கெட்டுக்களும் ஓட்டமேதும் பெறப்படாமலேயே வீழ்த்தப்பட்டன.

துடுப்பாட்டத்தில் பங்களாதேஷ் அணி சார்பாக ஜக்ருல் இஸ்லாம் 43 ஓட்டங்களையும், மொஹமட் அஷ்ரபுல் 38 ஓட்டங்களையும், ஷகாரியார் நபீஸ் 29 ஓட்டங்களையும் பெற்றனர். ஏனைய எல்லா வீரர்களும் ஒற்றை இலக்க ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

பந்துவீச்சில் சிம்பாவே அணி சார்பாக கைல் ஜார்விஸ், ஷிங்கி மஸகட்ஸா ஆகியோர் தலா 4 விக்கெட்டுக்களையும், கீகன் மெத் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.



255 ஓட்டங்களால் முன்னிலை வகித்த நிலையில் தனத இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த சிம்பாவே அணி, 3ஆம் நாள் முடிவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 187 ஓட்டங்களைப் பெற்று 442 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கிறது.

4 விக்கெட்டுக்களை இழந்து 27 ஓட்டங்களுடனும், 6 விக்கெட்டுக்களை இழந்து 84 ஓட்டங்களையும் பெற்றுத் தடுமாறிய அவ்வணிக்காக 7ஆவது விக்கெட்டுக்காக 79 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்தன.

துடுப்பாட்டத்தில் சிம்பாவே அணி சார்பாக மீண்டும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய அணித்தலைவர் பிரெண்டன் டெய்லர் ஆட்டமிழக்காமல் 81 ஓட்டங்களையும், கிறேம் கிறீமர் 43 ஓட்டங்களையும், எல்றன் சிக்கும்புரா 27 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பங்களாதேஷ் அணி சார்பாக றொபியுல் இஸ்லாம் 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

ஹராரேயில் இடம்பெறும் இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடியிருந்த சிம்பாவே அணி 389 ஓட்டங்களைக் குவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சச்சினின் 40 வகை முகங்களுடன் பிறந்த நாள் கேக்

சச்சினின் 40ஆவது பிறந்தநாளை சிறப்பாக கொண்டாட மேற்கு வங்க கிரிக்கெட் சங்கம் திட்டமிட்டுள்ளது. சர்வதேச கிரிக்கெட்டின் சாதனை மன்னனான சச்சின் எதிர்வரும் வரும் 24 ஆம் திகதி தமது 40 ஆவது வயதில் அடியெடுத்து வைக்கிறார்.

ஐ.பி.எல். போட்டித் தொடரில் மும்பை அணிக்காக விளையாடி வரும் அவர் தமது பிறந்த நாளன்று கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் களமிறங்குகிறார். இந்தப்போட்டி கொல்கத்தாவில் ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெறுகிறது.

அன்றைய தினம் சச்சினை மகிழ்விக்கும் வகையில் 40 பவுண்ட் எடை (18 கிலோ) கொண்ட கேக்கை வெட்ட, மேற்குவங்க கிரிக்கெட் சபை நிர்வாகிகள் திட்டமிட்டுள்ளனர். ஹைதராபாத்தை சேர்ந்த சமையல் கலை நிபுணரை கொண்டு, இந்த பிரமாண்ட கேக் தயாரிக்கப்படுகிறது. சச்சினின் 40 வகையான முக பாவனைகள் இருக்கும் வகையில் அந்த கேக் தயாரிக்கப்படவுள்ளது.

## சூதாட்டம்; இருவர் கைது!

டில்லியில் நடைபெற்ற ஐ.பி.எல். போட்டியில், சென்னை சுப்பர் கிங்ஸ் அணி, டில்லி டேர்டெவில்ஸ் அணியை வீழ்த்தியது. இந்த போட்டியின்போது சூதாட்டத்தில் ஈடுபட்ட ஒரு கும்பலை பொலிசார் கைது செய்துள்ளனர்.

டில்லி புற நகரான போரிவலியில் உள்ள ஒரு ஐஸ்கிரீம் குளிரகத்தில் நேற்று முன்தினம் இரவு சூதாட்டம் நடப்பதாக கிடைத்த தகவலையடுத்து, பொலிசார் அங்கு சென்று சோதனையிட்டனர். அப்போது, சூதாட்டத்தில் ஈடுபட்ட காநதிலால் ஷா (வயது 48), முகமது இப்ராகிம் (வயது 51) ஆகியோரை கைது செய்தனர். அவர்களிடம் இருந்து லேப்டாப், டி.வி., 5 கைபேசிகள் மற்றும் 53 ஆயிரத்து 650 ரூபா பணம் ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேபோல் கடந்த 10 நாட்களுக்கு முன், மும்பை வான்கடே மைதானத்தில் மும்பை-டில்லி அணிகளுக்கிடையிலான போட்டி நடைபெற்றபோது, பந்தயம் கட்டி சூதாட்டத்தில் ஈடுபட்ட 3 பேர் கைது செய்யப்பட்டனர்.

## அமெரிக்க குண்டுத்தாக்குதலின் எதிரொலி;

# லண்டனில் பலத்த பாதுகாப்புடன் மரதன்

அமெரிக்காவில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற பொஸ்டன் மரதன் போட்டியின்போது நடந்த இரட்டை குண்டு வெடிப்பில் 3 பேர் உயிரிழந்தனர். 180இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இந்நிலையில் இன்று லண்டனில் நடைபெறும் மரதன் போட்டியில் எவ்வித அசம்பாவிதமும் நடைபெறாமல் இருக்க பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

மரதன் போட்டி நடைபெறும் தேம்ஸ் நதிக்கரை, கோபுர பாலம், பிரிட்டன் நாடாளுமன்றம், பக்கிங்ஹாம் அரண்மனை, ஆகிய பகுதிகளில் கூடுதலாகப் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். இப்போட்டியைக் கண்டு களிக்க வீதியோரங்களில் இலட்சக்கணக்கான மக்கள் கூடுவார்கள்.

பாதுகாப்பு குறித்து பிரிட்டன் உள்துறை அமைச்சர் தெரஸாமே கூறுகையில்,

41 கிலோ மீற்றர் தூர லண்டன் மரதன் போட்டி ஆண்டுதோறும் நடைபெறுகிறது. இதற்கு போட்டி ஒருங்கிணைப்பாளர்கள் ஏற்பாடு செய்துள்ள பாதுகாப்பு திருப்தியைத் தருகிறது என்று தெரிவித்தார்.

## இவர்களும் ஊக்கமருந்து சர்ச்சையில்...



அவுஸ்திரேலியா சார்பாக, கடந்த 2012 ஆம் ஆண்டு, இங்கிலாந்தில் நடை பெற்ற ஒலிம்பிக் போட்டியில், ஆறு நீச்சல் வீரர்கள் பங்குபற்றினர். முன்னய போட்டிகளில் பதக்கங்களைக் குவித்த இவர்கள், லண்டன் ஒலிம்பிக்கில் ஒரேயொரு தங்கப்பதக்கத்தை மட்டுமே வென்றனர்.

அவுஸ்திரேலிய நாட்டின் நீச்சல் குழு, இவர்களின் தவறான நடவடிக்கைகளுக்காகத் தற்போது தண்டனை அளித்துள்ளது. இவர்களில் ஐந்து வீரர்கள், பயிற்சி காலத்தின்போது ஊக்க மருந்து எடுத்துக்கொண்டதை, கடந்த பெப்ரவரி மாதம் ஒத்துக்கொண்டுள்ளனர்.

இந்த 400 மீ தொடர் நீச்சல் வீரர்கள், இந்த மருந்தினால்தான் செயல்குறைவுடன் இருந்தார்கள் என்று நீச்சல்குழு ஆணையம் ஒலிம்பிக் சபையிடம் முறைப்பாடு அனுப்பியது. அதனால் இவர்கள் தண்டனைத் தொகையை குழுவிடம் செலுத்த வேண்டும் என்றும், தற்காலிகமாக இவர்கள், நீச்சல் குழுவிலிருந்து விலக்கப்படுகின்றார்கள் என்றும் அவுஸ்திரேலிய நீச்சல் குழு ஆணையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து, அவுஸ்திரேலிய நாட்டின் ஒலிம்பிக் குழுவால் பரிசீலிக்கப்படும் என்று கூறிய ஆணையம், வீரர்களின் தண்டனைத் தொகையையோ, குழுவிலிருந்து நீக்கப்படுகின்ற காலகட்டத்தையோ குறிப்பிடவில்லை.

## மலிங்க = மிஸ்ரா

பஞ்சாப் அணிக்கு எதிரான ஆட்டத்தில் சன்ரைசர்ஸ் ஐதராபாத் வீரர் அமித் மிஸ்ரா 2 விக்கெட் கைப்பற்றினார். இதன்மூலம் ஐ.பி.எல். போட்டியில் அதிக விக்கெட் கைப்பற்றி உள்ள மலிங்கவை சமன் செய்தார். அமித் மிஸ்ரா 66 போட்டியில் விளையாடி 85 விக்கெட் கைபபற்றியுள்ளார். 17 ஓட்டங்களுக்கு 5 விக்கெட் கைப் பற்றியதே அவரது சிறந்த பந்துவீச்சு.

மலிங்க 59 ஆட்டத்தில் 85 விக்கெட் கைப்பற்றி உள்ளார். அமித் மிஸ்ரா கடந்த சில தினங்களுக்கு முன்பு தான் 3-வது முறையாக ஐ.பி.எல்.லில் ஹட்ரிக் சாதனை படைதவர் என்ற சாதனையை படைத்தார். தற்போது மலிங்கவை சமன் செய்துள்ளார்.

## இங்கிலாந்து கிரி.வீரர் மரணம்



நீண்ட நாட்களாக புற்று நோயால் அவதிப்பட்டு வந்த இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மைக் டென்னஸ் வெள்ளிக்கிழமை காலமானார். அவருக்கு வயது 72. இங்கிலாந்து அணியின் தலைவராக பதவி வகித்த ஸ்கொட்லாந்தைச் சேர்ந்தவர் என்ற பெருமையைப் பெற்றவர் டென்னஸ்.

1969 முதல் 1975ஆம் ஆண்டு வரை 28 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள டென்னஸ் 19 போட்டிகளில் அணியின் தலைவராக கடமையாற்றியுள்ளதுடன் 12 சர்வதேச ஒரு நாள் ஆட்டங்களிலும் விளையாடியுள்ளார். அத்துடன் சர்வதேச கிரிக்கெட் சபையின் நடுவராகவும் இவர் பணிபுரிந்துள்ளார்.

டென்னஸ் முதற் தர கிரிக்கெட் போட்டிகளில் 25 ஆயிரத்துக்கு மேல் ஓட்டங்களைக் குவித்ததுடன், தலைவராக பல்வேறு கிண்ணங்களை வென்றுள்ளார். இவரது மறைவுக்கு இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெட் சங்கத்தின் தலைமை செயல் அலுவலர் டேவிட் கோலிர் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ராஜஸ்தானுடன் மோதி பெங்களூர் அணி வெற்றி



பெங்களூர் அணிக்கு எதிரான போட்டியில் ராஸ்தான் அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றுள்ளது.

ஐ.பி.எல் சீசன் 6 கிரிகெட் திருவிழாவில் நடைபெற்ற நேற்றைய போட்டியில் ராஜஸ்தான் ரோயல்ஸ்-றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியின் விராத் ஹோலி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

இதனையடுத்து களமிறங்கிய ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி 19.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 117 ரன்களை எடுத்தது.


118 ஓட்டத்தினை வெற்றி இலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய பெங்களூர் அணி அவ் இலக்கினை 17.5 ஓவர்களில் 3 விக்கெட்டினை இழந்து அடைந்து

போட்டியின் ஆட்டநாயகனாக பெங்களூர்அணியின் வினேய் குமார் தெரிவானார்.



யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில்ள நடைபெற்ற பெண்களுக்கான துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியில் சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி அணி முதன்மை வெற்றியைப் பெற்று சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது. இவர்கள் கடந்த மூன்று வருடங்களாக மாவட்ட மட்டத்தில் முதலாமிடத்தில் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# கொல்கத்தாவை வீழ்த்தியது சென்னை சுப்பர் கிங்ஸ்




கொல்கத்தாவுக்கு எதிரான போட்டியில் சென்னை அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

ஐ.பி.எல். கிரிகெட் போட்டியின் 26-வது லீக் போட்டி நேற்று மாலை 4 மணிக்கு கொல்கத்தா ஈடன் காடனில் தொடங் கியது.

இப்போட்டியில் கொல்கத்தா நைட்ரைடர்ஸ்-சென்னை சுப்பர் கிங்ஸ் அணிகள் மோதின.

கொல்கத்தா அணித் தலைவர் காம்பீர் முதலில் துடுப் பாட்டத்தை தேர்வு செய்தார்.



கொல்கத்தா அணி 20 ஓவர் முடிபில் 9 விக்கெட் இழப்பிற்கு 119 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

பின்னர் 120 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிய இலக்குடன் சென்னை அணி களம் இறங்கியது.

ஹசியுடன் அஸ்வின் தொடக்க வீரராக களம் இறங்கினார்.

அஸ்வின் 11 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார். அடுத்து வந்த விஜய் 2, ரெய்னா7, தோனி 9, பத்ரிநாத் 6 ஓட்டங்களில் அடுத்தடுத்து ஆட்டம் இழந்தனர்.

ஜடேஜா அதிரடியாக விளையாடி ஓட்டங்கள் சேர்த்தார். அவர் 14 பந்தில் 36 ஓட்டங்கள் குவித்து சென்னை அணியை வெற்றி பெறச் செய்தார்.

இதனால் 19.1 ஓவரிலேயே சென்னை அணி வெற்றி இலக்கை எட்டி4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஜடேஜா ஆட்ட நாயகன் விருது பெற்றார்.

## இனமோதலுக்கு...

தொடர்பான விடயத்தில் முஸ்லிம்களையும் உலமா சபையையும் சீண்டி முஸ்லிம்களை தனிமைப்படுத்தத முயற்சிப்பதானது, மீண்டும் ஓர் இனவாத மோதலுக்கு வழிசெய்யும் எனவும் முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தக் கட்சியின் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹசன் அலி கூறியதாவது,

உலமா சபையின் ஊடாக அல் -ஹைடா பயங்கரவாதிகள் இலங்கைக்குள் ஊடுருவுகின்றனர் என்று பொது பல சேனா கூறியிருப்பதை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மிகவும் வன்மையாக கண்டிக்கிறது.

பொது பல சேனாவின் முஸ்லிம்களுக்கு எதிரான இனவாத பிரசாரங்கள் கட்டுக்கடங்காமல் தங்குதடையின்றி போகின்றன. இவை மிகவும் வேதனையையும்;கவலையையும் தருகின்றன.

அது மாத்திரமன்றி, நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுக்கும் ஒரு சமூகமாக முஸ்லிம்களை காட்ட பொது பல சேனா முயற்சி செய்கிறது.

பொது பல சேனாவின் இவ்வாறான கீழ்த்தரமான இனவாதப் பிரசாரத்தை கண்டும் காணாமல் இருந்துவிட்டு வெறும் மேல் பூச்சைப் பூசும் அணுகுமுறையை சம்பந்தப்பட்டவர்கள் கைவிட வேண்டும்.

ஹலால் சான்றிதழ் தொடர்பான முடிபுகளை கிடப்பில் போட்டுள்ளதால் இந்த இயக்கம் ஊக்கமடைந்துள்ளது.

முஸ்லிம் அரசியல்வாதிகள் இது விடயத்தில் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹசன் அலி தெரிவித்தார். (எ-11)

## உண்மையைக்...

அங்கத்தவர் நியமனங்கள் குறித்து இப்போது ஆராயப்படுவதாகக் குறிப்பட்ட அரச முக்கியஸ்தர் ஒருவர் போர்க் குற்றச்சாட்டுகளுக்கு இதன்மூலம் உறுதியான பதிலை வழங்க அரசு தீர்மானித்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

ஏற்கெனவே கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை அமைத்து அதன் சிபாரிசுகளைப் பெற்ற அரசு அதனை சர்வதேச சமூகத்தின் கவனத்திற்கு கொண்டு வந்த போதும் அது சர்வதேச ரீதியிலும் உள்நாட்டிலும் பெரியளவில் நம்பிக்கையை ஏற்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு சர்வதேச சமூகம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருவது தெரிந்ததே. (எ-11)

## எரிபொருள் விலை...

இதனை சுமை இறக்கி வைக்கப்பட்டுள்ளது. அது மிகவும் கண்டனத்திற்கு உரிய விடயமாகும்.

எதிர்வரும் 6 மாதங்களை பொறுத்துக் கொள்ள கனியவளக் கூட்டுத்தாபனம் தயாராக இருக்கவில்லை. அதனாலேயே இந்த நெருக்கடி நிலை தோன்றியது.

இந்த மாதம் ஆரம்பத்தில் 65 ரூபாயாக இருந்த உராய்வு எண்ணெய் 90 ரூபாயாக உயர்த்தப்பட்டமையும் சல்வர் அளவு குறைந்த உராய்வு எண்ணெய் 75ரூபாயிலிருந்து 100 ரூபாயாக அதிகரிக்கப்பட்டமையும் இதற்கான காரணம் என்றும் மின்சக்தித்துறை அமைச்சின் செயலாளர் எம்.எம்.சி.பர்டினாண்டோ குறிப்பிட்டுள்ளார்.

இதே வேளை, மின்சார கட்டண அதிகரிப்பை மேற்கொள்ளும் முறையில் இருக்கும் குறைபாடுகள் தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோரி அமைச்சர் வாசுதேவ நாணயக்கார ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மின்சார கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டதன் காரணமாக சாதாரண பொதுமக்கள் பெரிதும் நெருக்கடிகளை எதிர் நோக்குவதாக சுட்டிக்காட்டப்படுள்ளது.

எவ்வாறாயினும் அடுத்த வருட ஆரம்பத்தில் நிலக்கரியினை பயன்படுத்தி மின்சார உற்பத்தியை மேற்கொண்டு கட்டணத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாக இலங்கை மின்சார சபையின் செயலாளர் குறிப்பிட்டார். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "நீங்களும் சிறந்த முதலீட்டாளராகலாம்"

பங்குச்சந்தை முதலீட்டாளர்களுக்கான

**பயிற்சிப்பட்டறை**

யாழ்.நகரில் ஒவ்வொரு சனிக்கிழமைகள் தோறும்.

(9.00-12.00)

தொடர்பு: 0777822014 www.cse.lk

## வாழ்க்கை முன்னேற்றத்திற்கு பிறந்திருக்கும் புத்தாண்டில் நிரந்தர வேலை வாய்ப்புக்கள்

கொழும்பை அண்மித்த பிரதான தொழிற்சாலைகளான Cordiail,Biscust,Chocolate P.V.C,Glouse போன்றவற்றிற்கு உற்பத்தி உதவியாளர், Labers, பொதியிடல் பிரிவிற்கு ஆண்/பெண் 17-50 வயதினர் தேவை. சம்பளம் 18000, 20000, 25000,32000 உணவு, தங்குமிடம் சகாயவிலையில் *(நண்பர்கள்/குழுக்கள்.தம்பதியினர் ஒரே தொழிற்சாலைகளில்)* வருகை தரும் நாட்களிலே வேலைவாய்ப்புக்கள். (C-3062)

தொடர்புகளுக்கு:- 077 5561883, 077 6000741

## இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்

உடனடி பயணம் இலவசம்

சவுதி இராட்சியத்தில் ஜித்தா, நகரங்களில் வேலை செய்வதற்காக நகர சுத்தம் செய்பவர்கள் (உள்ளேயும், வெளியேயும்)

FREE **CITY CLEANERS** (INDOOR & OUTDOOR) FREE

வயது 21-38 இடையில் சம்பளம் ரியால் 800 + பகுதி நேரம்

எவ்வித தொழில் அனுபவமும் தேவையில்லை. ரூபா. 28, 000 + பகுதி நேரம்

Embassy விசா முத்திரை கட்டணம் SLBFE காப்புறுதி கட்டணம் மாத்திரம் அறிவிடப்படும். இந்த நல்ல சந்தர்ப்பத்தை நழுவவிடாதீர்கள்.

வவுனியாவில் தொடர்புகளுக்கு: LANKA VOICE

No.: 24, Station Road, Vavuniya. 0770584658 (சு-3035)

## Lithuania & Hungary Schengen Visa

- IELTS தேவையில்லை
- விசா ஒழுங்குகள் அனைத்தும் ஒரு மாதத்திற்குள் செய்து கொடுக்கப்படும்.
- பகுதி நேர வேலை வாய்ப்பு
- அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

**உடன் தொடர்புகளுக்கு:**

No.77, Clock Tower Road, Jaffna.

021 7306000, 0773013060

iCS Study Overseas

## உடனடி வேலை வாய்ப்பு

### டோகா /கட்டார்

- தச்சுத் தொழிலாளர்
- வெல்டர்
- பிளம்பர்
- மேசன்
- எலெக்ரீசியன்
- டிரைவர்
- உதவியாளர்
- A/C மெக்கானிக்
- J.C.B.இயக்குநர்
- Roller இயக்குநர்

**மேலும் பல வாய்ப்புக்கள்**

- மாதாந்த சம்பளம் 45,000/- + மேலதிக நேரம்
- 50000 ரூபா வங்கிக் கடன் வசதி செய்து தரப்படும்
- தங்குமிடம், மருத்துவச் செலவு, போக்குவரத்து என்பன இலவசம்.

*In Joint Venture With* iCS Study Overseas

*Supra Foreign Employment Agency No.77, Clock Tower Road, Jaffna. 021 730 6000, 0773013060*


# தமிழீழம் கோரி...

தமிழீழத்திற்கான மாணவர் போராட்டக் குழு வரும் மே 19ம் திகதி தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் பிரமாண்ட அளவில் பேரணியும் பொதுக் கூட்டமும் நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

அன்றைய தினம் காலை 10 மணிக்கு சேலம் அரசு கலைக் கல்லூரியில் தொடங்கி சேலம் போஸ் மைதானம் வரை பேரணியும், மாலை 5 மணிக்கு பொதுக் கூட்டமும் நடைபெறும். நிச்சயமாக அரசியல் கட்சிகளுக்கு அழைப்பில்லை.

அதை முன்னிட்டு தமிழகம் முழுக்க நான்கு கட்ட பிரசார பேரணிகளும் பொதுக் கூட்டங்களும் நடைபெறும்.

ஏப்ரல் 15ஆம் திகதி முதல் 21 ஆம்திகதி வரை இலங்கையை கண்டிக்கும் வகையில் பொது நல வாய மாநாடு இலங்கையில் நடைபெறக் கூடாது என்ற பிரசாரத்தையும்,

ஏப்ரல் 22 முதல் 28 ஆம் திகதி வரை பூந்தமல்லி செங்கல்பட்டு சிறப்பு முகாமை மூடவும் இலங்கை அகதிகளுக்கு இரட்டை வாக்குரிமை வழங்கவும் போராட்டம் நடைபெறும்.

ஏப்ரல் 29 ஆம் திகதி தொடங்கி மே 5 ஆம் திகதி வரை மீனவர்களையும் தொழிலாளர்களையும் ஒன்றிணைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மே 6 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை இந்திய அரசின் தமிழக விரோத போக்கை கண்டித்தும் ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

இறுதியாக மே 19 ஆம் திகதி பேரணியும் பொதுக்கூட்டமும் நடைபெறும். இத்தோடு எங்கள் போராட்டம் நின்று விடாது தொடர் போராட்டமாகவே இருக்கும் என்றார்கள். -(எ-11)

# பிளவுபடாது...

ஏற்பட்டுள்ள புரிந்துணர்வின்மையே அதற்கான காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அமைப்பில் கருத்து முரண்பாடுகள் காணப்பட்ட போதிலும் பிளவு ஏற்பட வாய்ப்பில்லை என பொது பல சேனா அமைப்பின் தலைவர் கிரம விமலஜோதி தேரர் தெரிவித்துள்ளார்.

ஊடகப் பேச்சாளர் மற்றும் இணைப்பாளர் ஒருவருக்கு இடையிலேயே பிரதான முறுகல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ-11)

# முஸ்லிம்களுக்கு...

மாவட்டத்தின் அரச காணிகளும் காட்டுப் பிரதேசங்களும் இவ்வாறு முஸ்லிம்களுக்கு வழங்கப்பட உள்ளன.

வட மாகாணத்திற்கான ஜனாதிபதி செயலணியும் சுற்றாடல் அமைச்சும் கூட்டாக இணைந்து இந்த காணி வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளன.

எதிர்வரும் ஜூன் மாதமளவில் இந்த காணி வழங்கும் நடவடிக்கைகள் பூர்த்தியாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.(எ-11)


## வேலையாள் தேவை

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் உள்ள கோல்டன் இராசையா மோட்டோர் கடைக்கு ஆண், பெண் வேலையாளர் தேவை.

தொடர்பு: 0776141928 (2422)

## உடனடி வேலைவாய்ப்பு

மத்திய கிழக்கு கட்டாரை தலைமையகமாகக் கொண்டு 2006ஆம் ஆண்டு முதல் இயங்கும் **Morning Star Trading & Contracting** கம்பனியில் மத்திய கிழக்கில் வேலை செய்வதற்கு பின்வரும் வேலைவாய்ப்புக்கள் உள்ளன.

| தொழில் | எண் | சம்பளம்(QAR) | சம்பளம் (ரூ) |
|---|---|---|---|
| 1.மேசன் | 20 | 1200 | Rs. 41,400 |
| 2.தச்சு தொழிலாளி | 20 | 1200 | Rs. 41,400 |
| 3. உருக்கு பொருத்துபவர் | 25 | 1200 | Rs. 41,400 |
| 4.HVAC தொழிநுட்பவியலாளர் | 05 | 1400 | Rs. 48,300 |
| 5.பிளம் பேர்ஸ் | 05 | 1200 | Rs. 41,400 |
| 6.HVAC Duct தொழிநுட்பவியலாளர் | 05 | 1200 | Rs. 41,400 |
| 7.எலக்ரீசியன்ஸ் | 05 | 1200 | Rs. 41,400 |
| 8.வெல்டேஸ் | 05 | 1300 | Rs. 44,850 |
| 9.உதவியாளர்கள் | 10 | 750 | Rs. 25,875 |
| 10.பெயின்ரர் | 05 | 1100 | Rs. 37,950 |

**நிபந்தனைகள்** (2386)

★ இரண்டு வருட கால ஒப்பந்தம் ★ வீசா இலவசம்

★ மருத்துவ வசதி, தங்குமிட வசதி என்பன வழங்கப்படும்

★ ஒப்பந்த காலத்திற்குள் அனைத்து வேலையாளருக்குமான காப்புறுதி.

**மேலதிக தொடர்புகளுக்கு:**

அ.ஸ்ரனிஸ்லாஸ் 0779119075

## Deutsch, Dutch, French, English

**2013 புதிய வகுப்புகள் விபரம்**

ஜேர்மன் - டொச், நெதர்லாந்து - டச்

தூதரக பரீட்சைகளுக்கான புதிய வகுப்புக்கள் அனைத்தும் ஆரம்பமாகி நடைபெறுகின்றன. மேலும் London செல்பவர்களுக்கான ஆங்கிலம் AI, French, Italian வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.

குறிப்பு: திங்கள் முதல் புதிய வகுப்புகளுக்கான பதிவுகள் நடைபெறும்.

**தொடர்பு: விவேகானந்தா அக்கடமி**

221/1 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Tel: Hotline, 0774842464

## டோஹா, கட்டாரில் (Doha,Qatar) உடனடி வேலைவாய்ப்பு

பொறியியல், நிர்மாணத்துறையில் பிரசித்திபெற்ற நிறுவனங்களுக்கு இலங்கை அரசாங்கத்தினால் SLBFE அங்கிகரிக்கப்பட்ட Air Trust வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தினூடாக 30க்கும் அதிகமான வேலைவாய்ப்புக்கள் அதி உயர் சம்பளத்துடன் கீழ்க் காணும் வேலை வாய்ப்புக்கள் காத்திருக்கின்றன.

மேசன் 1200 - 1500 எலக்ரீசியன் 1200 - 2000 பெயின்டர் 1200 - 1500 Plumber 1200 - 1500 கம்பி கூடுகட்டுபவர் - 1200 - 1500 காப்பென்டர்ஸ் 1200 - 1500 பொது உதவியாளர் 900 - 1000 லேபர் 900 - 1000 கிளினிங் லேபர் 800 - 1000 Mechanic 1200 - 2000 Mechanic Helper 1000 Driver (Valit License) 1500 - 2000 6 G Welder 1200 - 1500

மிக குறைந்த கட்டணத்தில் இரண்டே வாரத்தில் பயணமாகலாம். உங்கள் விண்ணப்பங்கள் பாஸ் போர்ட் மற்றும் ஏனைய ஆவணங்களுடன் எதிர்வரும் 27.04.2013 A9 வீதி, பரந்தன் ஸ்டார் ரெஸ்ட் இலும் 28ஆம் திகதி இல 33, ஆசீர்வாதம் லேன்ட் ஹொஸ்பிட்டல் வீதி, கிறின் கிறாஸ் ஹோட்டல்யாழ்ப்பாணத்திலும் காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை உங்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். (L.L. No - 2490)

உடன் தொடர்புகளுக்கு : வவுனியாவில் T.P. : 0777 92 94 75, 077 23 93 165 (C-3041)

தலைமை நிறுவனம் : Air Trust Overseas Manpower Consultant, 945, Maradana Road, Colombo - 8 011 2676777, 077 2393165

---

கைநிறைய சம்பாதிக்க எம்முடன் கை கோருங்கள். கப்பல் புனர் நிர்மாண துறைகளில் வேலைவாய்ப்பு. சம்பளம் 20,000-45,000 வரை கப்பல் புனர் நிர்மாணத்துறையில் சாதாரண ஊழியர்கள் Painters, Wellders, Electirisions.

- 18-50 வயதினர் தேவை
- உணவு சேவை காலத்தில் இலவசம்
- தங்குமிடம் சகாய விலைகளில்

**விரைவாக அழையுங்கள்.** (C 3062)

தொடர்புகளுக்கு:- 077 5561883 , 077 6000741

## மலேசியா நாட்டில் உடனடி வேலைவாய்ப்பு

Welders 20பேர் உடனடியாக தேவை. ஒட்டுநர் துறையில் அனுபவம் வாய்ந்தவர்களா? நீங்கள் அப்படி என்றால் ஒட்டுநர் துறையில் அதி உயர் சம்பளத்துடன் மிக குறைந்த கட்டணத்தில் பயணமாக தயாராகுங்கள். 3 வருட ஒப்பந்தம், தங்குமிடம், மருத்துவம் இலவசம். உங்கள் விண்ணப்பங்கள் எதிர்வரும் 21 ஆம் திகதி யாழ்ப்பாணம் LANKA VOICE நிறுவனத்தில் ஏற்றுக் கொள்ளப்படும். (சி-3014)

மேலதிக விபரங்களுக்கு: 077 6439204

## தேவை

வைத்திய நிலையத்திற்கு (யாழ்ப்பாணம், வன்னி) பின்வரும் ஆட்கள் தேவையாகவுள்ளது.

**வைத்தியர்- (MBBS, MD, RMP, RMO)**

**தாதிமார்கள்**

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல.: 0777750391 (சி-3069)

## வீடு விற்பனைக்கு

60 A, பழைய பூங்கா வீதியில் நாலு பரப்பு (04) காணியில் அமைந்த மாடி வீடு உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0772844970, 0112864641 (2420)

## பணிப்பெண் தேவை

வயது முதிர்ந்த பெண் ஒருவரை தங்கி நின்று பராமரிப்பதற்கு பணிப் பெண் தேவைப்படுகின்றது.

உடன் தொடர்பு கொள்ளவும்.

*இடம்:- (யாழ்ப்பாணம் அளவெட்டி)*

மேலதிக விபரங்களுக்கு:-

077 8453450 (2411)


## மு/ குமுழமுனை மகா வித்தியாலயம்

### பழைய மாணவர்சங்க வருடாந்த பொதுக் கூட்டம்-2013

மு/ குமுழமுனை மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்டமானது எதிர்வரும் 23.04.2013 அன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 3.00 மணியளவில் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவிருப்பதனால் அனைத்து பழைய மாணவர்களும் கலந்து கொண்டு சிறப்பிப்பதோடு எமது வித்தியாலயத்தின் எதிர்கால அபிவிருத்தி தொடர்பான கருத்துக்களையும் ஆலோசனைகளையும் முன்வைக்குமாறு அன்பாக வேண்டுகின்றோம்.

செயலாளர்

பழைய மாணவர் சங்கம்

குமுழமுனை ம.வி. (சி-3070)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.04.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.